HRF 2017

www.hrf.net.in

## பயிற்சி கையேடு

# குழந்தை உரிமைகள் பாதுகாவலர்களுக்கான தரமுயர் பயிற்சி: அரசு எந்திரங்களைக் கண்காணித்தல்

**2 மார்ச், 2017**
**சென்னை**

மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
Human Rights Advocacy and Research Institute

# *Tool Kit on Monitoring State Mechanisms for Child Rights*

**Human Rights Advocacy and Research Institute**
*No.54, LDG Road,*
*Little Mount, Saidapet*
*Chennai - 600015*
*Phone : +91-9841053936, 044 22353503*
*website : hrf.net.in*
*Email :training@hrf.net.in*
*FB : HRFnet*

**குழந்தை உரிமைக்கான அரசு அமைப்புகளைக் கண்காணிப்பதற்கான கையேடு**

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்**
*எண்.54, எல்.டி.ஜி. சாலை*
*சின்னமலை, சைதாப்பேட்டை*
*சென்னை 600 015*
*தொ.பே : +91–9841053936, 044 22353503*
*Email :training@hrf.net.in*
*website : hrf.net.in*
*FB : HRFnet*

***March 2017***

*Creative commons license 3.0*

# An introduction to this toolkit and the institute

The Human Rights Advocacy and Research Institute (HRI) is an initiative of a group of human rights organisations and defenders, anchored by the Human Rights Research and Advocacy Foundation (HRF) to create a high quality knowledge institution on human rights theory, practice and governance. It is to bridge the distance between the human rights defenders (practice), academe (theory), administrators (duty bearers), and citizens (rights holders).

It addresses the need for systematic transformation of experience and expertise, especially those derived from practitioner (field) experience into transferable knowledge with academic rigour. Use of data and latest management advances will be integral to the offerings since there is a high standard of data, evidence and skills required for advocacy and social justice.

To create a body of empowered active citizens and embed a culture of human rights in society, the institute will:

(a) Collect, organise and develop a theory and pedagogy to communicate human rights practitioner experience and knowledge systematically.
(b) Develop tools for monitoring, communication and knowledge transfer.
(c) Identify lacunae and best practice in implementation of existing law and functioning of state mechanisms.
(d) Identify gaps in policy and law and advocate for rectification (including amendments to existing law) through innovative policy advocacy.
(e) Create a body of literature and knowledge base on the practice of human rights, monitoring and accountability.
(f) Train individuals, organisations and communities so that they understand human rights and the human rights approach to development, and have the tools and expertise in science, technology and management for practical, effective and efficient implementation.

The institute is a polycentric 'open school' in its essence. Each module offered will be in partnership with practitioners (human rights defenders and organisations) and academia. These partnerships will be with local human rights organisations/defenders who have demonstrated niche expertise and reputed local academic institutions. Globally renowned defenders will design the courses and take master classes. Certificates will be awarded on successful completion.

There will be three streams of focus groups: (a) Activists and community leaders (b) Academia: scholars, researchers (graduate and above) (c) Administrators and implementers.

This toolkit is to help practitioners better monitor the state mechanisms tasked with protecting and promoting child rights – from the village to district, state and national levels. They are developed from the key constitutional provisions and legislations intended to protect and promote child rights. The constitutional framework and the legal architecture are simplified for use by child rights defenders. Some of the best practice – codified from practitioner experience and experience spanning decades – are also included in this tool kit.

It is our hope that putting this knowledge base and toolkit in public domain under creative commons licensing will enable wider use and better innovation in compliance. This, and other toolkits developed by the institute, will be continuously updated to incorporate cutting edge practitioner experience. We look forward to your feedback and input to make this into a living document that will help us in our collective endeavour to make a world fit for children.

***Annie Namala***
*Managing Trustee and Director*
*Human Rights Advocacy and Research Foundation (HRF)*
*1 March 2017*

## மனித உரிமைக் கல்வியகம் மற்றும் இந்தப் பயிற்சிக் கையேடு குறித்த அறிமுகம்

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி கல்வியகம் (HRI) என்பது மனித உரிமை அமைப்புகளும், பாதுகாவலர்களும் இணைந்து மேற்கொண்டுள்ள ஒரு முயற்சியாகும். மனித உரிமைகள் கோட்பாடு, நடைமுறை மற்றும் மேலாண்மை தொடர்பாக ஒரு உயர்தரமான அறிவகத்தை உருவாக்குவதற்காக இந்தக் கல்வியகத்தை மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF) தொடங்கியுள்ளது. மனித உரிமை பாதுகாவலர்களுக்கும் (நடைமுறை), அது சார்ந்த கல்வியாளர்களுக்கும் (கோட்பாடு), செயலாக்கத் துறையினருக்கும் (மேலாண்மை), குடிமக்களுக்கும் (உரிமைகளுக்கு உரியோர்) இடையேயான தொலைவுகளை இணைப்பதற்காகவே இந்த முயற்சி.

அனுபவம், நிபுணத்துவம் ஆகியவற்றை, குறிப்பாக செயல்படுவோரின் (கள) அனுபவத்திலிருந்து பெறப்படுபவற்றை, கல்வித்தளத்திற்குரிய கறார்த்தன்மையோடு கூடிய மாற்றத்தக்க அறிவாக திட்டமிட்ட முறையில் பரிமாறிக்கொள்ள வேண்டிய தேவையை இது ஈடுகட்டுகிறது. மனித உரிமை மேம்பாட்டிற்கும் சமூக நீதிக்கும் தரமுயர்ந்த தகவல் பலமும் ஆதாரங்களும் திறன்களும் தேவைப்படுகின்றன. ஆகவே, இக்கல்வியகத்தின் வகுப்புகளுடன் ஒருங்கிணைந்ததாக தகவல் பயன்பாடும் மேலாண்மையில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களும் இருக்கும்.

ஆளுமையும் செயல்முனைப்பும் உள்ள குடிமக்களின் ஒரு அமைப்பை உருவாக்குவதற்காகவும், சமுதாயத்தில் ஒரு மனித உரிமைப் பண்பாட்டை வளர்ப்பதற்காகவும், இந்தக் கல்வியகம் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளும்:

(அ) மனித உரிமைச் செயல்பாட்டாளர்களின் அனுபவத்தையும் அறிவையும் ஒரு முறையான ஏற்பாட்டில் கற்பிப்பதற்காக தகவல்களைச் சேகரித்தல், அமைப்பு சார்ந்து ஒருங்கிணைத்தல், ஒரு கோட்பாட்டையும், பயிற்சிமுறையையும் உருவாக்குதல்;

(ஆ) கண்காணிப்பு, தகவல் தொடர்பு மற்றும் அறிவுப் பரிமாற்றத்திற்கான ஏற்பாடுகளை உருவாக்குதல்;

(இ) தற்போதுள்ள சட்டங்களைச் செயல்படுத்துவதிலும், அரசாங்க அமைப்புகளின் செயல்பாடுகளிலும் உள்ள குறைபாடுகளையும் சிறப்பான பணிகளையும் கண்டறிதல்;

(ஈ) கொள்கைக்கும் சட்டத்திற்குமான இடைவெளிகளைக் கண்டறிதல், அவற்றை சரிப்படுத்துவதற்கான (தற்போதுள்ள சட்டத்துக்கான திருத்தங்கள் உட்பட) ஆலோசனைகளை, புத்தாக்கக் கொள்கை மேம்பாட்டின் மூலம் முன்மொழிதல்;

(எ) மனித உரிமை செயல்பாடுகள், கண்காணிப்பு மற்றும் பதிலளிக்கும் கடமைப் பொறுப்பு ஆகியவை தொடர்பாக எழுத்தாக்கங்களுக்கும் அறிவுத்தளத்திற்குமான ஒரு அமைப்பை ஏற்படுத்துதல்;

(ஏ) தனிமனிதர்களும், அமைப்புகளும், சமூகங்களும் மனித உரிமைகளைப் புரிந்துகொள்ளச் செய்வதற்காகவும், வளர்ச்சிகள் குறித்த மனித உரிமை சார்ந்த அணுகுமுறைகளை வளர்த்துக்கொள்வதற்காகவும் நடைமுறை சார்ந்த, பயன் விளைவிக்கக்கூடிய, திறன் மிக்க செயலாக்கத்திற்காக என அறிவியல், தொழில்நுட்பம், மேலாண்மை ஆகியவற்றுக்கான

வழிமுறைகளும் நிபுணத்துவமும் பெற்றிருக்கச் செய்வதற்காகவும் அவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

இந்தக் கல்வியகம் அடிப்படையில் பன்முகத்தன்மை வாய்ந்த ‘திறந்தவெளிப் பள்ளி’யாக இருக்கும். ஒவ்வொரு பாடமுறையும் களச் செயல்பாட்டாளர்களுடனும் (மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் அமைப்புகள்) கல்வியாளர்களுடனும் இணைந்து வழங்கப்படும். இந்தக் கூட்டுச் செயல்பாடு தங்களது கூர்மையான திறன்களை வெளிப்படுத்தி வந்திருக்கிற உள்ளூர் அளவிலான மனித உரிமை அமைப்புகள்/பாதுகாவலர்களுடனும் மதிப்பிற்குரிய உள்ளூர் கல்வி நிறுவனங்களுடனும் இணைந்து மேற்கொள்ளப்படும். உலக அளவில் பெயர் பெற்றுள்ள மனித உரிமைப் பாதுகாவலர்கள் பாடத் திட்டங்களை வகுப்பார்கள், உயர்நிலை வகுப்புகளையும் நடத்துவார்கள். வகுப்புகளை வெற்றிகரமாக நிறைவு செய்கிறபோது சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மூன்று விதமான குழுவினர் வகுப்புகளை நடத்துவார்கள்: (அ) களச் செயல்பாட்டாளர்கள், சமூகத் தலைவர்கள், (ஆ) கல்வியாளர்கள்: அறிஞர்கள், ஆய்வாளர்கள் (பட்டதாரிகள், அதற்கு மேல்நிலையிலுள்ளோர்), (இ) மேலாண்மைப் பொறுப்பாளர்கள், சட்டச் செயல்பாட்டாளர்கள்.

இதில் வழங்கப்படும் பாடத் திட்டங்கள், களச் செயல்பாட்டாளர்களுக்கு, கிராமம் முதல் மாவட்டம் வரையிலும், மாநிலம் முதல் நாடு முழுவதும் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வளர்த்தெடுப்பதற்குமான அரசாங்க அமைப்புகளை சிறந்த முறையில் கண்காணிக்க உதவுவதாக இருக்கும். குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கிற, முன்னெடுத்துச் செல்கிற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட அரசமைப்பு சாசன ஏற்பாடுகளையும் சட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு பாடங்கள் தயாரிக்கப்படும். குழந்தை உரிமைப் பாதுகாப்பாளர்கள் பயன்படுத்தத்தக்க வகையில் அரசமைப்பு சாசன ஏற்பாடுகளும் சட்டங்களும் எளிமைப்படுத்தித் தரப்படும். களச் செயல்பாட்டாளர்களின் பல்லாண்டு கால அனுபவங்களிலிருந்து தொகுக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளும் பாடத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும்.

இந்த அறிவுத்தளமும் பாடத் திட்டங்களும் புத்தாக்கக் கண்ணோட்டத்துடன் பொதுமக்களுக்கான உரிமமாக பொதுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கும். அது பரவலான பயன்பாட்டிற்கும் சிறப்பான புதிய அணுகுமுறைகளை வகுப்பதற்கும் இட்டுச் செல்லும் என நாங்கள் நம்புகிறோம். இக்கல்வியகம் உருவாக்கும் பாடத்திட்டம் தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்படும். அதில் களச் செயல்பாட்டாளர்களின் புதிய அனுபவங்கள் சேர்க்கப்படும். குழந்தைகளுக்கு ஏற்றதொரு உலகத்தைக் கட்டுவதற்கான நமது கூட்டு முயற்சியில் ஒரு உயிரோட்டமுள்ள ஆவணமாக இதனை உருவாக்குவதற்கு உங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறோம்.



**ஆனி நமலா**
*மேலாண்மை அறங்காவலர் & இயக்குநர்*
*மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)*
*1 மார்ச் 2017*

# பொருளடக்கம்


| வ.எண் | | பொருள் | ப.எண் |
|---|---|---|---|
| 1 | | குழந்தை உரிமைகளும் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளும்: | |
| | 1.1 | 2015க்கு *பிறகு: குழந்தைகளுக்கு ஏற்புடைய ஒரு உலகம்* | 1 |
| | 1.2 | நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் | 10 |
| 2 | | குழந்தைகளும் சுற்றுச் சூழலும்<br>*(பருவநிலை மாற்றங்கள், பேரிடர் அபாயங்களைக் குறைத்தல்)* | 14 |
| 3 | | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்விச் சட்டம் 2009, விதிகள் 2011 மற்றும் அரசாணைகளில் குழந்தைகளுக்கான உரிமைகள் | 34 |
| 4 | | குழந்தை உரிமைகளுக்கான அமைப்புகள்/ அரசுக் கட்டமைப்புகளை வரையறுத்தல்,<br>அ) கிராம அளவில்,<br>ஆ) மாவட்ட அளவில்,<br>இ) மாநில அளவில்<br>குழந்தைகளின் உரிமைகளைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளும் வழிமுறைகளும். | 44 |
| 5 | | குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் | |
| | 5.1 | குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் 2006 | 45 |
| | 5.2 | குழந்தைகளைப் பாலியல் துன்பத்திலிருந்து பாதுகாக்கும் சட்டம் 2009 | 50 |
| | 5.3 | சிறார் நீதி சட்டம் 2015 மற்றும் | 61 |
| | 5.4 | குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் | 75 |
| 6 | | மாற்றுத் திறனாளி குழந்தைகளின் உரிமைகளைக் கண்காணித்தல் | |
| | 6.1 | ஊனமுற்ற நபர்களின் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் | 79 |
| | 6.2 | The Rights of Persons with Disabilities Act, 2016 | 84 |
| 7 | | குழந்தை உரிமைகளுக்காகத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவதில் முன்னேறிய வழிமுறைகள் | 87 |
| 8 | | குழந்தைகளுக்கு இணக்கமான கிராமங்கள்: சர்வதேசத் தர நிலைகளும், சுட்டிக்காட்டல் கூறுகளும். | 94 |

# 1. குழந்தை உரிமைகளும் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளும்

## *1.1. 2015க்கு பிறகு: குழந்தைகளுக்கு ஏற்புடைய ஒரு உலகம்*

நிலையான வளர்ச்சி இலக்குகள் மீதான வெளிப்படையான நடவடிக்கைக் குழுவின் (OWG) அறிக்கை குறித்த ஆய்வு – குழந்தை உரிமைகள் கண்ணோட்டத்திலிருந்து :

மக்கள் இன்று நிலையான வளர்ச்சி என்பதன் மையத்தில் இருக்கிறார்கள்; இது தொடர்பாக, ரியோ+20 மாநாடு ஒரு நியாயமான, சமத்துவமான, அனைவரையும் உள்ளடக்கிய, ஒரு உலகத்தை உருவாக்கப் பாடுபடுவதாக உறுதியளித்தது; நிலையான, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்காகச் செயல்பட உறுதியேற்றது; அதன் மூலம் அனைவருக்கும் பலன்கள் கிடைக்கச் செய்ய, குறிப்பாக உலகின் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் உலகின் எதிர்காலத் தலைமுறையினர் ஆகியோருக்கு வயது, பாலினம், உடல் ஊனம், கலாச்சாரம், இனம், இனக்குழு, சார்புமூலம், புலம்பெயர் நிலை, மதம், பொருளாதாரம் அல்லது இதர நிலை போன்ற எவ்வித பாகுபாடும் இல்லாமல் அந்தப் பலன்கள் கிடைக்கச் செய்ய உறுதி பூண்டது.

**முக்கியச் செய்திகள்**

- வெளிப்படையான நடவடிக்கைக் குழு முன்வைத்த, ஆயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளில் (MDG) குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்திய, நோக்கங்களிலும், இலக்குகளிலும் குழந்தைகளுக்காக என கொண்டாடுவதற்கான பல அம்சங்கள் உள்ளன.
- சமத்துவமற்ற நிலையைக் குறைப்பது, குழந்தைகள் மீதான வன்முறைக்கு முடிவுகட்டுவது, குழந்தைகளின் வறுமைக்கெதிராகப் போர்தொடுப்பது ஆகியவை தொடர்பான விரிவான இலக்குகள் முன்னேறிச் செல்வதற்கான நடவடிக்கைகளாகும்.
- புதிய வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன, தீவிரமடைகின்றன, வலுப்பெறுகின்றன என்ற நிலையில், பல்வேறு இடைவெளிகளும் உள்ளன என்கிற சூழலில், குழந்தைகளின் உரிமைகளுக்கான இந்த முன்னேற்றம் தக்கவைக்கப்பட வேண்டும்.
- ''யாரையும் கைவிடுவதில்லை'' என்ற இலக்கை நோக்கி ஒரு தெளிவான, விரிவான முனைப்பு இருக்க வேண்டும். மிக மிக ஏழைகளாக உள்ள குழந்தைகளையும், மிக மிக வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலையிலுள்ள குழந்தைகளையும் முதலில் சென்றடைவது என்பது அனைத்து இலக்குகளிலும், அதேபோல், அனைத்துக் குறியீடுகளிலும் தேசிய செயலாக்கக் கட்டமைப்புகளிலும், அவை உருவாக்கப்படும் நிலையிலேயே, பிரதிபலிக்க வேண்டும்.
- இலக்குகள் அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நாடுகளுக்குள்ளேயும், மற்ற நாடுகளிலும் ஏற்படும் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான குறியீடுகளாகவும், சமநிலையில் இடைவெளிகளைக் கண்டறிவதற்கான குறியீடுகளாகவும் மாற்றப்பட வேண்டும்.

உலகின் ஒவ்வொரு பகுதியிலும் – குழந்தைகளின் பாலினம், இனம், இனக்குழு, பொருளாதாரம், உடல் ஊனம் அல்லது இதர நிலைகள் குறித்த பாகுபாடு எதுவுமின்றி – குழந்தைகளின் உரிமைகளுக்காக முதலீடு செய்வது நாம் விரும்புகிற எதிர்காலத்தை அடைவதற்கான அடிப்படை கட்டுமானமாக அமையும். இந்த அறிக்கை உண்மையிலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஐக்கிய நாடுகள் அமைப்பின் வரலாற்றில் ஒரு முக்கியத் தருணத்தை இது எடுத்துக்காட்டுகிறது. இதற்கு முன் இப்படி சமூகம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் ஆகிய அனைத்து அம்சங்களும் உள்ளடங்கிய நிலையான வளர்ச்சி என்பது பற்றி பேசப்பட்டதில்லை. நோக்கங்கள்,

இலக்குகள் ஆகியவற்றைப் பொருத்தவரையில் குழந்தைகள் தொடர்பான முக்கியமான பிரச்சனைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன: ஆயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன, இதற்கு முன் அக்கறை காட்டப்படாத இலக்குகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சமத்துவமற்ற நிலைமையை வெகுவாகக் குறைப்பது, குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவு கட்டுவது, குழந்தைகளின் வறுமை நிலைக்கு எதிரான போராட்டம் ஆகியவை அங்கீகரிக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன. அறிக்கையின் முன்னுரையிலிருந்தே, குழந்தைகளும் இளைஞர்களும் எதிர்காலத் தலைமுறையினரும் நிலையான வளர்ச்சி என்பதன் மையப்பொருளாக்கப்பட்டனர்.

OWG முன்மொழிவுகள் குறித்து குழந்தை உரிமைகள் என்ற கோணத்தில் பரிசீலிக்கப்பட்டுள்ளது. சில குறிப்பிட்ட களங்களில் மிகப் பெரிய லட்சியத்திற்கும், குறிப்பான தன்மைக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலக்குகளை நோக்கிச் செல்லும்போது ஏழைக் குழந்தைகளுக்கும், எளிதில் பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய குழந்தைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

நோக்கங்களுக்கும் இலக்குகளுக்கும் குறியீடுகளுக்கும் அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தைப் போலவே, நாம் விரும்பும் உலகம் குறித்த கருத்துப் பகிர்வு என்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அது ஒரு பாதுகாப்பான, சுத்தமான, அனைத்து மக்களும் அச்சமின்றி, பற்றாக்குறையின்றி வாழ்கிற, அனைவரும் ஆரோக்கியத்தோடும் நல்ல கல்வியறிவோடும் இருக்கிற, சமமாகவும் கௌரவத்தோடும் நடத்தப்படுகிற ஒரு உலகமாக இருக்க வேண்டும். எல்லோரும் நம்பிக்கையோடு வாழக்கூடிய உலகமாக இருக்கும். அப்படி ஒரு எதிர்காலத்தைக் கட்டுவதற்கான அடித்தளமாக அமைய வேண்டியது குழந்தைகளின் உரிமைகளுக்காக செய்யப்படும் முதலீடே ஆகும். உலகின் ஒவ்வொரு பகுதியிலும், குழந்தைகளின் பாலினம், இனம், இனக்குழு, பொருளாதாரம், உடல் ஊனம் அல்லது வேறு நிலைகள் குறித்த பாகுபாடு இல்லாமல் அந்த முதலீடு செய்யப்பட வேண்டும். இந்த முதலீட்டை நாம் செய்யத் தவறுவோமானால் எதிர்காலம் உறுதியற்றதாக இருக்கும் என்பது மட்டுமல்ல, அது மிகவும் பலவீனமானதாகவும் இருக்கும். ஒரு குழந்தை ஆரோக்கியமாக இல்லையென்றால், அது நீண்ட நெடுங்காலத்திற்கு ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்படுகிறது. அக்குழந்தைக்கு ஒரு தரமான கல்வி கிடைப்பதில்லை. தனது வீட்டிலோ பள்ளியிலோ சமூகத்திலோ அக்குழந்தை பாதுகாப்பாக உணர்வதில்லை. தனது குரல் கேட்கப்படுகிற வாய்ப்பு அக்குழந்தைக்குக் கிடைப்பதில்லை. இத்தகைய குழந்தையால் தனது ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்துவதற்கான திறன்கள் அமைவதில்லை. இது அந்தக் குழந்தையின் தனிப்பட்ட உரிமைகளை மட்டுமே மறுப்பதாகாது; மாறாக, இத்தகைய உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதால் ஒட்டுமொத்த மனிதக் குடும்பத்திற்கே கிடைக்கக்கூடிய அறிவுசார்ந்த, சமூகம் சார்ந்த, அறம் சார்ந்த, பொருளாதாரம் சார்ந்த பலன்கள் மறுக்கப்படுகின்றன.

எதிர்காலம் பெரும் வாய்ப்புகளையும் கொண்டிருக்கும், ஆழமான சவால்களையும் கொண்டிருக்கும். குழந்தைகள் அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும், சவால்களை எதிர்கொள்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த நோக்கங்களின் மையத்தில் இருப்பவர்கள் எதிர்காலத் தலைமுறையினராவர் – இன்றைய, நாளைய குழந்தைகளாவர்.

## 1.2. OWG முன்வைக்கும் நோக்கங்கள்

உள்கட்டமைப்புகள் முதல் கடல்சார் ஆதாரங்கள் வரையில் அனைத்து நோக்கங்களுமே உலகக் குழந்தைகளுக்கு முக்கியமானவைதான். உண்மையில், உலகம் முழுவதுமுள்ள எதிர்கால நலன் அனைத்து நாடுகளும் எந்த அளவிற்குப் பொருளாதார வளர்ச்சியையும், சமூக சமத்துவத்தையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் இணைத்திடும் வரையில் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் வெற்றி பெறுகின்றன என்பதைத் பொறுத்தே இருக்கும். சாராம்சத்தில் இதுவே நிலையான வளர்ச்சியாகும். OWG அறிக்கையை எங்கும் குழந்தை உரிமைகள் என்ற தொலைநோக்குடன் ஆய்வு செய்வது முக்கியமாகும். அதன் மூலமே அனைவருக்கும் நியாயமான, பாதுகாப்பான ஒரு

எதிர்காலத்தை நோக்கி பொருளாதார அமைப்புகளையும் சமூகங்களையும் உலக அளவிலேயே மாற்றக்கூடிய வகையில் இறுதி அறிக்கையை லட்சியப்பூர்வமாகவும், சமநிலையோடும் உருவாக்க முடியும். 2015க்குப் பிந்தைய வளர்ச்சிப் போக்கிற்கான இறுதிச் சோதனை இதுதான். இந்தப் பின்னணியில், உலகக் குழந்தைகள் எதிர்கொள்ளும் அவசரமான, குறிப்பான சவால்களைக் கையாளக்கூடியதாக செயல்திட்டம் அமைய வேண்டும்.

**நோக்கங்கள், இலக்குகள் பற்றிய ஆய்வு:** MDG வாக்குறுதியை நிறைவேற்றுதல், முன்னேறிச் செல்லுதல்

**1.2.1. முன்மொழியப்பட்டுள்ள நோக்கம் 1:** எங்கேயும், எந்த வடிவிலும் இருக்கக்கூடிய வறுமைக்கு முடிவுகட்டுதல்

குழந்தைகளின் அதீதமான வறுமையை அதன் அனைத்து வடிவங்களிலும் முடிவுக்குக் கொண்டுவரவும், தேசிய அளவில் வரையறுக்கப்பட்ட, குழந்தைகளை மையமாகக் கொண்ட, சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை அனைவருக்கும் விரிவுபடுத்தவும் இந்த நோக்கம் மிக முக்கியமானதாகும். உலக மக்களின் 47% பேர் அதீதமான வறுமையில் வாழ்கின்றனர். அந்த மக்களில் 18 வயதும், அதற்குக் குறைந்த வயதும் உள்ள குழந்தைகள் எண்ணிக்கைதான் அதிகம். குழந்தைகளின் வறுமை நிலை அவர்களுக்கு மட்டுமல்லாமல் சமூகங்களுக்கும் பொருளாதார அமைப்புகளுக்கும் கூட நாசகரமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

**1.2.2. முன்மொழியப்பட்டுள்ள நோக்கம் 2:** பட்டினிக்கு முடிவுகட்டுதல், உணவுப் பாதுகாப்பையும், மேம்பட்ட ஊட்டச்சத்தையும் உறுதிப்படுத்துதல், நிலையான விவசாயத்தை வளர்த்தல். உயிர்வாழ்வதற்கும், வளர்வதற்கும், முன்னேறுவதற்கும் உரிய ஊட்டச்சத்து பெறுவது அனைத்துக் குழந்தைகளின் உரிமையாகும். ஐந்து வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளில் சுமார் 5 கோடியே 10 லட்சம் பேர் மரணத்தை எதிர்கொள்ளக்கூடிய அபாயநிலையில் உள்ளனர். இந்நிலையில், கடுமையான ஊட்டச்சத்துக் குறைவுப் பிரச்சனைக்குத் தீர்வு காண்கிற, இன்னும் முடிவுபெறாத செயல்திட்டத்துடன் இணைந்ததாக உள்ள மற்றொரு அவசரப் பிரச்சனை குழந்தைப்பருவ வளர்ச்சி தடைப்படுவதாகும். 2012ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் ஐந்து வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளில் 16 கோடியே 20 லட்சம் பேர் வளர்ச்சித் தடையால் பாதிக்கப்பட்டனர். இந்தப் புள்ளிவிவரம், ஏழைக் குழந்தைகளின் எண்ணிக்கையோடு இணைகிறது. வறுமையும், ஊட்டச்சத்துக் குறைவும் இணைந்த ஒரு கொடூரமான வட்டத்துக்குள் அக்குழந்தைகள் சிக்கியிருக்கிறார்கள்.

**குழந்தைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இலக்கு:**

2030ஆம் ஆண்டு வாக்கில் ஊட்டச்சத்துக் குறைவின் அனைத்து வடிவங்களுக்கும் முடிவு கட்டுவது என்ற இலக்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதில், ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளில் வளர்ச்சி தடைப்பட்டவர்கள், பயனற்றவர்களாக விடப்படுகிறவர்கள் ஆகியோருக்கான, உலக அளவில் ஏற்கப்பட்ட இலக்குகளை 2025ஆம் ஆண்டில் நிறைவேற்றுவது என்றும் முன்மொழியப்பட்டுள்ளது என்றும், பதின்பருவப் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் பெண்கள் மற்றும் முதியவர்களின் ஊட்டச்சத்துத் தேவைகளை ஈடுசெய்வது என்ற இலக்கும் கூறப்பட்டுள்ளது.

**1.2.3. முன்மொழியப்பட்டுள்ள நோக்கம் 3:** எல்லா வயதுப் பிரிவையும் சேர்ந்த, எல்லோருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்துதல், நலவாழ்வை மேம்படுத்துதல்:

குழந்தை மரணங்களையும், பிரசவகால மரணங்களையும் குறைப்பதற்கானக் கட்டமைப்புகளை வழங்குவதிலும் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதிலும் MDGகள் மையமான பாத்திரம் வைத்துள்ளன. கடந்த 20 ஆண்டுகளில் இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆயினும், 2012ஆம் நிலவரப்படி தோராயமாக ஒவ்வொரு நாளும் 18,000 குழந்தைகள் தங்களது

ஐந்தாவது பிறந்தநாளைக் காணும் முன்பே இறந்தனர் என்று யுனிசெஃப் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. பெரும்பாலும், தவிர்க்கக்கூடிய காரணங்களாலேயே அவர்கள் உயிரிழந்தனர். அத்துடன் 2013ஆம் ஆண்டில் ஒவ்வொரு நாளும் சுமார் 800 பெண்கள் கர்ப்பத்தோடும், பிரசவத்தோடும் சம்பந்தப்பட்ட உடல்நிலை அபாயங்கள் காரணமாக உயிரிழந்தனர். இந்தப் பிரச்சனைகளைக் கையாள்வதில் MDGகளின் பணியைத் தொடர்வதாக, வளர்ச்சிக்கான செயல்திட்டம் உருவாக வேண்டும். அதில், இத்தகைய திட்டங்கள் இன்னும் சென்றடைய முடியாமல் இருக்கும் சமூகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். குழந்தைகள் உயிர் வாழ்ந்தால் மட்டும் போதாது. ஆரோக்கியமான முறையில் செழுமையாக வளர வேண்டும், அதற்கான தரமான சுகாதாரச் சேவைகளும் பராமரிப்புகளும் கட்டுப்படியாகக்கூடிய விலையில் கிடைக்க வேண்டும்.

**குழந்தைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த மூன்று இலக்குகள்:**

- 2030ஆம் ஆண்டுவாக்கில், உலகளாவிய பேறுகால மரணங்கள், பிறக்கிற லட்சம் குழந்தைகளில் 70 பேருக்கும் குறைவான விகிதத்திற்குக் குறைக்கப்பட வேண்டும்.
- 2030ஆம் ஆண்டுவாக்கில், புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் மற்றும் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகள் ஆகியோரின், தவிர்க்கக்கூடிய மரணங்களுக்கு முடிவுகட்டப்பட வேண்டும்.
- 2030ஆம் ஆண்டுவாக்கில், தொற்றுநோயல்லாத நோய்கள் காரணமாக, வளர்ச்சியடையாத நிலையிலேயே ஏற்படும் மரணங்களின் விகிதம் மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்பட வேண்டும். முன்தடுப்பு, சிகிச்சை, மனநலம் மற்றும் நலவாழ்வு ஆகியவை மூலம் இந்த இலக்கு எட்டப்பட வேண்டும்.

**1.2.4. முன்மொழியப்பட்டுள்ள நோக்கம் 4:** அனைவரையும் உள்ளடக்கிய, தரமான கல்வியை உறுதிப்படுத்துதல்; அனைவருக்கும் ஆயுட்காலம் முழுக்க கற்பதற்கான வாய்ப்பை உருவாக்குதல்.
கடந்த பத்தாண்டு காலத்தில் தொடக்கக் கல்விக்கான வாய்ப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன, கல்வியில் பாலின சமத்துவம் என்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1999 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில், பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்துவிட்டது. பல பகுதிகளில் பள்ளி செல்லாத பெண் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. பல நாடுகள் தொடக்கக் கல்வியில் பாலின சமத்துவத்தை சாதித்துள்ளன. ஆயினும், பள்ளி செல்லும் குழந்தைகளில், தொடக்கப்பள்ளி வயதில் உள்ள சுமார் 25 கோடி குழந்தைகள் அடிப்படைத் திறன்களைக்கூட கல்லாதவர்களாக உள்ளனர். அவர்களில் பாதிப் பேர் குறைந்தது 4 ஆண்டுகளைப் பள்ளிகளில் கழித்துள்ளனர் என்றபோதிலும் இதுதான் நிலைமை. உடல் ஊனமுற்ற குழந்தைகளையும், பூர்வகுடிகளைச் சேர்ந்த குழந்தைகளையும் பொறுத்தவரையில் பள்ளிச்சேர்க்கையிலும், இலக்குகளை அடைவதிலும் ஏற்றத்தாழ்வு நிலைமை தொடர்கிறது.

OWG அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள நோக்கங்களும் இலக்குகளும், கல்வியில் MDG இலக்குகளை நோக்கிச் செல்வதாகவும், வலுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. அதில், பாலின சமத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தொடக்க நிலை குழந்தை வளர்ச்சி, பராமரிப்பு, கல்வி, கற்றல் திறன், பள்ளிச் சேர்க்கை, பள்ளிப் படிப்பை முழுமையாக முடித்தல், உரிய அறிவையும் திறன்களையும் வளர்த்துக்கொள்வதற்கு முக்கியத்துவம் அளித்தல், அத்துடன் இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்குமான எழுத்தறிவு, எண்ணறிவு வளர்த்தல் ஆகியவற்றுக்கு உறுதியளிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது மற்றொரு முக்கிய வளர்ச்சியாகும். இதில் முன்மொழியப்பட்டுள்ள கல்வி சார்ந்த இலக்குகள் அனைத்திற்கும் யுனிசெஃப் ஆதரவு தெரிவித்துள்ளது.

**குழந்தைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த 9 இலக்குகள்:**

- 2030ஆம் ஆண்டுவாக்கில், அனைத்துப் பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் இலவசமான, சமமான, தரமான தொடக்கக் கல்வியையும், நடுநிலைக் கல்வியையும் பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்; அது உரிய, பயனுள்ள கற்றல் வெளிப்பாடுகளுக்கு இட்டுச் செல்வதாக இருக்க வேண்டும்.
- 2030ஆம் ஆண்டுவாக்கில், அனைத்துப் பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் தரமான, தொடக்க நிலை குழந்தைப் பருவ வளர்ச்சி, பராமரிப்பு மற்றும் தொடக்கப் பள்ளிக் கல்விக்குத் தயாராகும் வகையில் அதற்கு முந்தைய (மழலையர்) கல்வி ஆகியவற்றைப் பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- 2030ஆம் ஆண்டுவாக்கில், வேலை வாய்ப்பு, கௌரவமான பணிகள் மற்றும் தொழில் முனைவோருக்கான தொழில்நுட்பம், தொழிற்பயிற்சி உள்ளிட்ட உரிய திறன்கள் பெற்றவர்களாக இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் எண்ணிக்கை X% அதிகரிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- 2030ஆம் ஆண்டுவாக்கில், கல்வியில் பாலினப் பாகுபாடு ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும்; ஊனமுற்றோர், பூர்வகுடியினர் மற்றும் பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய சூழலில் உள்ள குழந்தைகள் ஆகியோர் உள்ளிட்ட, பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு கல்வி மற்றும் தொழிற்பயிற்சியின் அனைத்து மட்டங்களிலும் சமமான வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- 2030ஆம் ஆண்டுவாக்கில் அனைத்து இளைஞர்களும், குறைந்தது X% பெரியவர்களும், பெண்கள், ஆண்கள் இருதரப்பாரும், எழுத்தறிவும் எண்ணறிவும் பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- 2030ஆம் ஆண்டுவாக்கில், இதர அம்சங்களோடு, நிலையான வளர்ச்சி, நிலையான வாழ்க்கை முறை, மனித உரிமைகள், பாலின சமத்துவம், அமைதி மற்றும் வன்முறையற்ற பண்பாட்டு வளர்ச்சி, உலகக் குடியுரிமை, பன்முகப் பண்பாட்டை மதித்தல், நிலையான வளர்ச்சிக்குப் பண்பாட்டின் பங்களிப்பை மதித்தல் ஆகியவற்றுக்கான கல்வியின் மூலமாக நிலையான வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அறிவையும் திறன்களையும், கற்போர் அனைவரும் பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- குழந்தைகளையும், ஊனமுற்றோரையும் பாலின அடிப்படையையும் மையமாகக் கொண்ட கல்வி வசதிகளை ஏற்படுத்தப்பட வேண்டும்; அனைவருக்கும் பாதுகாப்பான, வன்முறையற்ற, அனைவரும் உள்ளடக்கிய, பயன் விளைவிக்கக்கூடிய கற்றல் சூழல்கள் வழங்கப்பட வேண்டும்.
- 2030ஆம் ஆண்டுவாக்கில், குறிப்பாக, சிறிதும் முன்னேற்றமடையாத நாடுகள் (LDC) மற்றும் வளரும் சிறிய தீவு நாடுகள் (SIDS) உட்பட, வளரும் நாடுகளில் ஆசிரியர் பயிற்சிக்கான சர்வதேச ஒத்துழைப்பு உட்பட, தகுதியுள்ள ஆசிரியர்கள் கிடைப்பது X% அதிகரித்திருக்க வேண்டும்.
- OWG அறிக்கை குழந்தை உரிமைகள் பற்றிய தொலைநோக்குடன் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**1.2.5. முன்மொழியப்பட்டுள்ள இலக்கு 5:** பாலின சமத்துவத்தை அடைதல், அனைத்துப் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு ஆளுமை வழங்குதல்.

நாம் விரும்புகிற உலகத்தை அடைவதற்கு பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாலின சமத்துவத்தை நிலைநாட்டுவது மிக முக்கியமானதாகும். பெண்களும், பெண் குழந்தைகளும் குறிப்பான பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடியவர்களாக உள்ளனர். இது வெளிப்படையான முறையில் கையாளப்பட வேண்டும். OWG அறிக்கையின் முன்மொழிவுகளில் கூறப்பட்டுள்ள பாலின சமத்துவம் குறித்து ஒரு தெளிவான பார்வையுடன், ஒரு வலுவான அடித்தளத்தை MDGகள் உருவாக்கியுள்ளன. பாகுபாடுகளைப் பொறுத்தவரையில் பெண்களும் பெண்குழந்தைகளும் எதிர்கொள்ளும் பாலியல் வன்முறை, பாலியல் சுரண்டல், குழந்தைத் திருமணம், பெண்ணுறுப்பு சிதைக்கப்படுதல் ஆகியவை தொடர்பாக விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊதியமில்லாத,

வீட்டுவேலைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பாலியல் அத்துமீறல் என்பது பெண் குழந்தைகள் மட்டுமல்லாமல் ஆண் குழந்தைகளுக்கும் இழைக்கப்படுகிறது என்பதை அங்கீகரிக்கும் வகையில் இந்த நோக்கம் மேம்படுத்தப்பட வேண்டும். அதேபோல், பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதிலும், நிலைநாட்டுவதிலும் ஆண் குழந்தைகளும், ஆண்களும் இணைக்கப்பட வேண்டும்.

**குழந்தைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த 4 இலக்குகள்:**

- எங்கும் நிலவக்கூடிய, அனைத்துப் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் எதிரான, அனைத்து வடிவத்திலுமான பாகுபாடுகள் அனைத்திற்கும் முடிவுகட்டுதல்
- ஆள்கடத்தல் மற்றும் பாலியல் சுரண்டல், இதரவகைச் சுரண்டல்கள் உட்பட, பொதுவெளியிலும், தனியிடங்களிலும் அனைத்துப் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் இழைக்கப்படுகிற அனைத்து விதமான வன்முறைகளும் ஒழிக்கப்படுதல்
- குழந்தைத் திருமணம், குறைந்த வயதுத் திருமணம், கட்டாயத் திருமணம், பெண்ணுறுப்பு சிதைக்கப்படுதல் போன்ற அனைத்து தீங்கான நடைமுறைகளும் ஒழிக்கப்படுதல்
- பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்காகவும், அனைத்து மட்டங்களிலும் அனைத்துப் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு ஆளுமை வழங்குவதற்காகவும் வலுவான கொள்கைகளும் அமலாக்கத்தக்க சட்டங்களும் உருவாக்கப்பட்டு வலுப்படுத்தப்படுதல்

**1.2.6. முன்மொழியப்பட்டுள்ள நோக்கம் 6:** நிலையான நீர் நிர்வாகம், அனைவருக்கும் துப்புரவு வசதி கிடைப்பது உறுதிப்படுத்தப்படுதல்.

2012ஆம் ஆண்டில், வயிற்றுப்போக்கு நோய்களால், ஒவ்வொரு நாளும், ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகள் 1500 பேர் மரணமடைந்தனர். இந்த மரணங்களில் 88 சதவீதம், பாதுகாப்பான குடிநீர், துப்புரவு வசதி மற்றும் அடிப்படை ஆரோக்கிய சூழல் ஆகியவை இல்லாததால் நிகழ்ந்தவையாகும். குறிப்பாக, குழந்தைகளுக்கான தண்ணீர், துப்புரவு, ஆரோக்கியச் சூழல் ஆகியவற்றில் முதலீடு செய்வது, சமுதாயத்தின் மற்ற பிரிவினருக்கும் ஒட்டுமொத்தப் பயன்களை ஏற்படுத்தும். உதாரணமாக, பள்ளிகளில் குழந்தைகள் உடலைக் கழுவுதல் குறித்து கற்றுக்கொள்ளும்போது, அவர்கள் மாற்றத்திற்கான கருவிகளாக மாறுகிறார்கள், தங்களுடைய குடும்பங்களிலும் சமூகங்களிலும் ஆரோக்கியமான நடைமுறைகளைக் கொண்டுவருகிறவர்களாக உருவெடுக்கிறார்கள்.

**குழந்தைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இலக்கு:**
2030ஆம் ஆண்டுவாக்கில், அனைவருக்கும் போதுமான, சமமான துப்புரவு வசதி, ஆரோக்கிய சூழலுக்கான வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்படுதல்; திறந்தவெளியில் மலம் கழிப்பதற்கு முடிவு கட்டுதல்; பெண்கள், பெண் குழந்தைகள், பாதிக்கப்படும் சூழல்களில் உள்ளவர்கள் ஆகியோரின் தேவைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுதல்.

**1.2.7. முன்மொழியப்பட்டுள்ள நோக்கம் 7:** அனைவருக்கும் கட்டுப்படியாகக்கூடிய, நம்பகமான, நிலைத்திருக்கக்கூடிய, நவீன எரிசக்தி உறுதிப்படுத்தப்படுதல். உலகில் பல குழந்தைகள் நவீன எரிசக்தி சேவைகளை மிகக் குறைவாகவே பெறக்கூடியவர்களாகவே அல்லது சிறிதும் பெறாதவர்களாக இருக்கிறார்கள். இது அவர்களது நலவாழ்வு, கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் ஆகியவற்றில் பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். காற்றில் துகள் பொருள்கள் கலப்பதற்கு இட்டுச்செல்லும் பொருள்களை, வீடுகளில் எரிசக்திக்குப் பயன்படுத்துவதன் காரணமாக ஏற்படும் வீடு சார்ந்த காற்று மாசு, குழந்தைகளுக்கு ஏற்படும் தவிர்க்கக்கூடிய மரணங்களுக்கும் நோய்களுக்கும் காரணமாகிறது.

**1.2.8. முன்வைக்கப்பட்டுள்ள நோக்கம் 8:** நிலைத்திருக்கக்கூடிய, அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான பொருளாதார வளர்ச்சி, முழுமையான உற்பத்தித் திறனுள்ள வேலைவாய்ப்பு மற்றும் கௌரவமான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, உற்பத்தித் திறன் சார்ந்த வேலைவாய்ப்பு, அனைவருக்கும் கௌரவமான வேலைவாய்ப்பு ஆகியவற்றின் பல்வேறு அம்சங்கள் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கும் குழந்தைகளுக்கும் உறுதியான நிதி நிலைமை உருவாவதற்கு முக்கியமான தேவைகளாகும். குழந்தைகள் வளர்ந்து உழைப்புச் சந்தையில் நுழைகிறபோது, தங்களையும் தங்களது எதிர்காலக் குழந்தைகளையும், குடும்பங்களையும் காப்பாற்றத்தக்க அளவில் வேலை கிடைக்கக்கூடிய நிலை இருக்க வேண்டும். 2012ஆம் ஆண்டு நிலவரப்படி உலகம் முழுவதும் 7 கோடியே 50 லட்சம் இளைஞர்கள் உலகளாவிய அளவில் வேலை கிடைக்காதவர்களாக இருந்தனர். இது உலகம் முழுவதும் உள்ள வேலை கிடைக்காதோர் எண்ணிக்கையில் 40 சதவீதம் ஆகும். இளைஞர்கள்தான் எதிர்கால உழைப்பாளிகள் என்பதாலும், நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான உந்துவிசைகள் என்பதாலும், இளைஞர்கள் வேலை வாய்ப்புகளுக்காகச் செய்யப்படும் முதலீடு என்பது, எதிர்கால உலகப் பொருளாதாரத்திற்குச் செய்யப்படும் முதலீடே ஆகும்.

**குழந்தைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த மூன்று இலக்குகள்:**

- 2030ஆம் ஆண்டுவாக்கில், இளைஞர்கள், ஊனமுற்றோர் உட்பட அனைத்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் முழுமையான, உற்பத்தித் திறனுள்ள வேலை மற்றும் கௌரவமான வேலை கிடைக்கச் செய்தல்; சம மதிப்புள்ள வேலைக்கு சம ஊதியத்தை உறுதிப்படுத்துதல்
- 2020ஆம் ஆண்டு வாக்கில் வேலைகளில், கல்வியில் அல்லது பயிற்சியில் இல்லாத இளைஞர்களின் விகிதாச்சாரத்தைக் கணிசமாகக் குறைத்தல்
- மோசமான குழந்தைத் தொழிலாளர் முறைகளைத் தடுப்பதற்கும் ஒழிப்பதற்கும் உடனடியான, பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; 2025ஆம் ஆண்டுவாக்கில், குழந்தைத் தொழிலாளர் முறையை, குழந்தைகளை ராணுவ வீரர்களாக நியமிப்பது மற்றும் பயன்படுத்துவது உள்ளிட்ட, அனைத்து வடிவங்களிலுமான குழந்தைத் தொழிலாளர் முறைக்கு முடிவுகட்டுதல்

**1.2.9. முன்வைக்கப்பட்டுள்ள நோக்கம் 10:** நாடுகளுக்கு உள்ளேயும், நாடுகளுக்கு இடையேயும் சமத்துவமற்ற நிலையைக் குறைத்தல். கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்கும், தங்களது குடும்பங்களுக்கும், தங்களது சமூகங்களுக்கும் சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்தத் தேவையான வாய்ப்புகள், சமத்துவமற்ற நிலைமையால் மறுக்கப்படுகின்றன. ஏழைக் குழந்தைகளுக்காக முதலீடு செய்வதும், அவர்களுக்கு சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றுக்கான சம வாய்ப்புகளை வழங்குவதும், தலைமுறை தலைமுறையாகத் தொடரும் வறுமையைத் தகர்ப்பதற்கும், வளர்ச்சியில் முன்னேற்றத்தை முடுக்கிவிடுவதற்குமான ஒரு நடைமுறை சாத்தியமுள்ள பாதையாகும். மிகவும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினருக்கான கொள்கைகளையும், திட்டங்களையும் செயல்படுத்துகிறபோது, உண்மையிலேயே நாம் மேலும் மேலும் அதிகமான, சிறப்பான முடிவுகளை, மிகக் குறைந்த செலவில், எட்டுகிறோம் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. கூடுதலாக ஏற்படக்கூடிய எந்தவொரு செலவும், கூடுதலாக ஏற்படக்கூடிய பயனால் ஈடுகட்டப்படுகிறது.

**1.2.10. முன்வைக்கப்பட்டுள்ள இலக்கு 11:** நகரங்களையும், மனிதக் குடியிருப்பு இடங்களையும் உள்ளடக்கத்தக்க பாதுகாப்பான, உறுதியான, நிலைத்திருக்கக்கூடியதாக மாற்றுதல்

அத்தியாவசிய சேவைகள் கிடைக்கும் வகையில் ஒரு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவது குழந்தையின் சுகாதாரத்திற்கும் மகிழ்ச்சிக்கும் தேவைப்படுகிற மையமான ஏற்பாடுகளாகும். பாதுகாப்பான, கட்டுப்படியாகக்கூடிய, நம்பகமான போக்குவரத்து வசதியானது, கல்வி, சுகாதாரம் மற்றும் பணி ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை உறுதிப்படுத்த உதவுகிறது. ஒரு குழந்தை படிப்பதற்கும், பயணிப்பதற்கும், மற்றவர்களோடு சேர்வதற்கும் ஏற்ற பொதுவெளிகள் இருப்பதும் அவசியமாகும்.

**குழந்தைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு இலக்குகள்:**

- 2030ஆம் ஆண்டுவாக்கில், அனைவருக்கும் பாதுகாப்பான, கட்டுப்படியாகக்கூடிய, பயன்படுத்தக்கூடிய, நிலைத்திருக்கக்கூடிய போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுதல்; சாலைப்

பாதுகாப்பை மேம்படுத்துதல்; குறிப்பாக, பொதுப் போக்குவரத்தை விரிவுபடுத்துதல்; பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் மற்றும் முதியோர்களின் தேவைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுதல்.

- 2030ஆம் ஆண்டுவாக்கில், குறிப்பாகப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும், ஊனமுற்றோருக்கும் பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய, பயன்படுத்தத்தக்க, பசுமை சார்ந்த பொதுவெளிகள் சமச்சீராக வழங்கப்படுதல்.

**1.2.11. முன்மொழியப்பட்டள்ள நோக்கம் 13:** பருவநிலை மாற்றங்களையும் அதன் தாக்கங்களையும் எதிர்கொள்வதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

பருவநிலை மாற்றங்களின் எதிர்மறையான தாக்கங்களுக்கு குழந்தைகள்தான் குறிப்பாக இலக்காகிறார்கள் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றாலும்கூட, இதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கான கொள்கை விவாதங்களிலோ நடவடிக்கைகளிலோ போதுமான அளவிற்குக் குழந்தைகள் உட்படுத்தப்படுவதில்லை.

**1.2.12. முன்மொழியப்பட்டுள்ள நோக்கம் 16:** நிலையான வளர்ச்சிக்காக அமைதியான, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயங்களை வளர்த்தல்; அனைவருக்கும் நீதி கிடைக்கச் செய்தல்; அனைத்து மட்டங்களிலும் பயன்விளைவிக்கக்கூடிய, கடமைப்பொறுப்புள்ள, அனைவரையும் உள்ளடக்கிய அமைப்புகளை ஏற்படுத்தல்.

16வது நோக்கத்தில் அனைத்து விதமான வன்முறைகளையும் குறைப்பது, அத்துமீறல்களுக்கும், சுரண்டல்களுக்கும், ஆட்கள் கடத்தப்படுவதற்கும், குழந்தைகளுக்கு எதிரான அனைத்து விதமான வன்முறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பது, அதேபோல், பிறப்பைப் பதிவு செய்வது ஆகியவை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு அடையாளத்திற்கான குழந்தைகளின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதாகும். குழந்தைகளைப் பொறுத்தவரையில் இந்த இலக்குகள் இறுதிப்படுத்தப்பட்ட SDGகளில் இடம்பெறுவது கட்டாயமாகும். மரணங்கள் மட்டுமல்லாமல், வன்மமான காயங்கள் குறித்தும் அனைத்து நாடுகளும் கண்காணிக்க வேண்டும், அறிக்கை அளிக்க வேண்டும். அதன்மூலம், இந்த நிலைமைகள் எந்த அளவில் உள்ளன என்பதையும், அதற்கான காரணங்களையும் முழுமையாக அறிய முடியும். அத்துடன், வாக்குவாதங்களின்போது சம்பந்தப்பட்ட குழந்தைகள் கூறுவதற்கு செவிமடுப்பது, முடிவெடுப்பது ஆகியவற்றில் நியாயமான நடைமுறைகளை வளர்ப்பதும், குழந்தைகளுக்கு எதிரான மீறல்களில் தலையிடுவதும், இதர நீதிமுறைப் பிரச்சனைகளில் தலையிடுவதும் மிகவும் முக்கியமானதாகும். சுயேச்சையான நீதிமுறைகள் குழந்தைகளுக்கு சீரான முறையில் கிடைப்பதற்கும், அதில் குழந்தைகளுக்கு இணக்கமான நடைமுறைகள் இருக்கச் செய்வதற்கும் தேவைப்படும் குறிப்பான அம்சங்களை அடையாளப்படுத்தும் முயற்சிகளை யுனிசெஃப் ஊக்குவிக்க வேண்டும். இறுதியாக, பிறப்புப் பதிவுக்கான இலக்கில், ‘‘இலவசம்’’ என்ற வார்த்தையைச் சேர்ப்பதற்கான முயற்சிகளையும் யுனிசெஃப் ஊக்குவிக்க வேண்டும். பல ஏழைக் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கான பிறப்புப் பதிவை செய்யாமல் விடுவதற்கு, அத்துடன் இணைந்த செலவு அம்சம்தான் ஒரு முக்கியமான தடையாகும்.

**குழந்தைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த 3 இலக்குகள்:**

- அனைத்துப் பகுதிகளிலும், மரண விகிதத்தோடு தொடர்புள்ள, அனைத்து விதமான வன்முறைகளையும் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைத்தல்
- குழந்தைகளுக்கு எதிரான அத்துமீறல்கள், சுரண்டல்கள், ஆள் கடத்தல்கள் மற்றும் இதர வடிவங்களிலான வன்முறைகள், சித்திரவதைகள் ஆகியவற்றுக்கு முடிவுகட்டுதல்
- தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் சட்டத்தின் ஆட்சியை முன்னெடுத்துச் செல்லுதல், நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் அனைவருக்கும் சமமாகக் கிடைப்பதை உறுதிப்படுத்துல்; 2030ஆம் ஆண்டுவாக்கில், பிறப்புப் பதிவு உட்பட அனைவருக்கும் சட்டப்பூர்வ அடையாளத்தை வழங்குதல்.

### 1.2.13. முன்வைக்கப்பட்டுள்ள இலக்குகள் 9, 12, 14, 15, 17

9, 12, 14, 15, 17 ஆகிய நோக்கங்களில், குழந்தைகளுக்கும், இளைஞர்சளுக்குமான குறிப்பான முன்மொழிவுகள் இல்லையென்றாலும்கூட, அவர்களை வளர்ப்பதற்கும், அவர்களது நலனுக்குமான மையமான அம்சங்களாக அந்த நோக்கங்கள் உள்ளன. 9வது நோக்கத்தில், ‘‘உறுதியான உள்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், அனைவரையும் உள்ளடக்கிய நிலையான தொழில்மயமாக்கலை மேம்படுத்துதல் மற்றும் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்’’ என கூறப்பட்டுள்ளது. இது குழந்தைகளுக்கு பயனளிக்கக்கூடியவையாகும், அவர்களைச் சார்ந்ததுமாகும். உலகின் சில மிக நெருக்கடியான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் இளம் ஆய்வாளர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் ஆற்றலை நாம் பயன்படுத்தியாக வேண்டும். அத்துடன், குழந்தைகள் இன்றைய மற்றும் எதிர்காலத்திய நுகர்வோரும், உற்பத்தியாளர்களும் ஆவர். ஆகவே, 12வது நோக்கத்தில், ‘‘நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகள் உறுதிப்படுத்தப்படுதல்’’ என முன்மொழியப்பட்டுள்ளது. இது இயற்கை ஆதாரங்களை செயல்திறனோடு பயன்படுத்துதல், மறுசுழற்சி மற்றும் இதர நிலையான நடைமுறைகள் தொடர்பான விஷயங்களில் குழந்தைகள் ஈடுபடுத்தப்படுவதைச் சார்ந்ததாகும்.

அதேபோல், 14வது நோக்கத்தில் ‘‘நிலையான வளர்ச்சிக்கு பெருங்கடல்களும், கடல்களும், கடல்சார் ஆதாரங்களும் பராமரிக்கப்படுதல், தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுதல்’’ என கூறப்பட்டுள்ளது. 15வது நோக்கத்தில், ‘‘புவிசார் இயற்கை அமைப்புகளைப் பாதுகாத்தல், மீட்டமைத்தல், தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதை மேம்படுத்துதல், தொடர்ச்சியான வன நிர்வாகம், காடுகள் அழிப்பதற்கு எதிரான நடவடிக்கைகள், நிலம் பாழாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துதல், பழைய நிலைமைக்குக் கொண்டு செல்லுதல், பல்லுயிர்த்தன்மைக்கு ஏற்படும் இழப்பைத் தடுத்து நிறுத்துதல்’’ ஆகிய அம்சங்கள் கூறப்பட்டுள்ளன. இவை குழந்தைகள் எதிர்காலத்தில் பெறக்கூடிய, அவர்கள் வாழக்கூடிய சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்குப் பயன்படும். அதன் பலனாக, எதிர்காலத் தலைமுறையினர் பூமியின் எதிர்காலப் பாதுகாவலர்களாக இருப்பார்கள்.

17வது நோக்கத்தில் ‘‘நிலையான வளர்ச்சிக்கு உலகளாவிய கூட்டிற்கான செயலாக்க வழிமுறைகளை வலுப்படுத்துதல், புத்துயிரூட்டுதல்’’ என கூறப்பட்டுள்ளது. இது 2015க்குப் பிந்தைய வளர்ச்சித் திட்டத்தின் வெற்றிக்கு முக்கியமானதாகும். உலகளாவிய கூட்டு என்பதில் குழந்தைகளும் இளைஞர்களும் முக்கியப் பங்கேற்பாளர்களாக இருப்பார்கள். புதிய செயல்திட்டத்தை உருவாக்குகிற நடைமுறையில் குழந்தைகளும் இளைஞர்களும் அளவிடற்கரிய பங்களிப்பைச் செய்துள்ளனர். அதேபோல், அவற்றைக் கண்காணிப்பதிலும், கடமைப் பொறுப்பிலும் அவர்களால் அதேபோன்ற முக்கியத்துவத்தை வகிக்க முடியும். குறிப்பாக, குழந்தைகள் தொடர்பானவை உள்ளிட்ட SDGகள் அனைத்தையும் நிலைநாட்டுவதில், பயனுள்ள, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட திறன் மேம்பாட்டிற்கான சர்வதேச ஒத்துழைப்பு மிக முக்கியமானதாகும். மேலும், சேகரிக்கப்படும் தகவல்களைப் பகுத்தாராய்வது, குழந்தைகளின் தனித்துவமான, முக்கியமான அனுபவங்கள் மதிப்பிடப்படுவதையும், அதன்மூலம் மேம்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்தும்.

# நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள்

**முனைவர் க.சண்முகவேலாயுதம்**
குழந்தை உரிமைக்கான சட்ட வள ஆதார மையம்

உலகில் மூன்று தலையாய பிரச்சனைகள் உள்ளது. ஒன்று வறுமை, இரண்டாவது சமத்துவமின்மை மூன்றாவது பருவ நிலை மாற்றம். நாட்டின் வளர்ச்சிக் காரணிகளை உரிய முறையில் சீரமைத்து அனைத்துத் துறைகளிலும் உள்ள வேறுபாடுகளை நீக்கி பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதே திட்டமிடுதலின் கொள்கைகளும், செயல்பாடுகளும் ஆகும். வறுமையை எதிர்கொள்ள 2000ஆம் ஆண்டு 189 நாடுகள் இணைந்து உடன்படிக்கை செய்துகொண்டது மட்டுமல்லாமல் அதை அடைவதற்காக எட்டு குறிக்கோள்களை 'புத்தாயிரத்திற்கான வளர்ச்சிக் குறிக்கோள்களாக" வகுத்து அவற்றை 2015 ஆம் ஆண்டிற்குள் அடைவதற்கான உறுதிமொழியையும் எடுத்தன. அவை: 1. வறுமை மற்றும் பசி ஒழிப்பு , 2. அனைவருக்கும் தொடக்கக் கல்வி கிடைப்பதை உறுதி செய்தல் 3. பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பதை மேம்படுத்துதல் , 4. குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைத்தல் , 5. தாய்மை பேற்றினை மேம்படுத்துதல் , 6. எச்.ஐ.வி, எய்ட்ஸ், காசநோய், மலேரியா மற்றும் பிற நோய்களை ஒழிக்க போராடுதல் , 7. சுற்றுச் சூழலை உறுதி செய்தல் , 8. முன்னேற்றத்திற்கான உலகளாவிய பங்காளர்களின் கூட்டமைப்பை பலப்படுத்துதல் .

புத்தாயிரம் ஆண்டிற்கான குறிக்கோள்கள் தேசிய சராசரிக்கே முக்கியத்துவம் அளித்தது. ஆனால் நாட்டில் உள்ள பல ஒடுக்கப்பட்ட குழுக்கள் முன்னேற்றம் அடையவில்லை புவியியல், பாலினம், மாற்றுதிறன் உடையோர், இனம் ஆகிய காரணங்களால் விளிம்பு நிலையிலுள்ள மக்கள் வளர்ச்சி பாதையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். குறிப்பாக வானிலை மாற்றம், சுற்றுப்புற சீர்கேட்டில் கவனம் செலுத்தவில்லை.. புத்தாயிரம் ஆண்டிற்கான குறிக்கோள்கள் மூலம் கடந்த பதினைந்து ஆண்டுகளில் உலகளவில் பல மேம்பாட்டு பிரச்சனைகளுக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டது.

புத்தாயிரத்திற்கான முன்னேற்றக் குறிக்கோள்களை செயலாக்குவதில் உள்ள பின்னடைவுகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு உணர்ந்து, அதற்கான காரணிகளை கண்டறியும் நோக்கில் பல நிலைகளில் மீளாய்வு செய்தது. இதன் ஒரு கட்டமாக உயர்மட்டக்குழு பிரிட்டனின் பிரதம மந்திரி டேவிட் கேமரூன் அவர்களது தலைமையில் உருவாக்கப்பட்டு, பல நிலைகளில் உள்ள இடைவெளிகளை சரி செய்யவும், குறிப்பாக மக்களின் அனுபவங்களை குரலாக்கவும் கலந்தாய்வுகள் நடந்தன. இதன் அடிப்படையில் பெறப்படவுள்ள கருத்துக்களைக் கொண்டு 2015 ஆம் ஆண்டு நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டது. பல கலந்துரையாடல்களில் அரசுகள், கல்வியாளர்கள், தனியார் துறைகள் மற்றும் குடிமை சமுதாயத்தினர் பங்கேற்றனர். நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் உருவாக்குவதற்கு வயது, பாலினம், இடம் மற்றும் மாற்றுதிறன் உடையவர்களின் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, அலசி ஆய்வு செய்து இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. புதிய தொழில் நுட்ப வசதிகள் கொண்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன. நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும். நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் பிரிக்க முடியாதவை மற்றும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. இக்குறிக்கோள்கள் அரசின் திட்டமிடுதலிலும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏற்கெனவே நிதி அளிக்கும் நிறுவனங்கள் தங்கள் முன்னுரிமை செயல்பாட்டினை நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களை ஒட்டி மாற்றி வருகின்றன. ஐநா தலைமையகத்தில் "நீடித்த வளர்ச்சிக்கான மாநாடு"

செப்டம்பர் 25-27, 2015 ஆகிய நாட்களில் நியூயார்க் நகரில் நடைபெற்றது. இதில் உலக நாடுகளின் தலைவர்கள் கலந்துக்கொண்டு, நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களை தீர்மானித்து ஒரு பிரகடனமாக வெளியிட்டனர்.

நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் எனப்படுபவை, வறுமையை அதன் பல்வேறு பரிணாமங்களில் கட்டுப்படுத்துவதற்கான அளவீடுகளை வழங்கக் கூடிய கால வரையுடன் கூடிய பதினேழு குறிக்கோள்கள், 169 இலக்குகள் உருவாக்கப்பட்டன. இந்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் 2015ம் ஆண்டு தொடங்கி, 2030 ம் ஆண்டிற்குள் எட்டப்பட வேண்டும். இந்த இலக்குகள் உள்ளூர் மற்றும் உலக அளவிலானவை. ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சித் தேவைக்கும் ஏற்ற வகையில் இவை நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. மனித வாழ்நிலை மேம்பாடு என்பது உலகின் எல்லா இடங்களிலும், எல்லா மனிதர்களுக்கும் ஏற்படுவதை உறுதி செய்யும் வகையில் ஒரு பொதுவான இலக்கை நோக்கி பயணம் செய்வதற்கான செயல் திட்டத்தை இந்த குறிக்கோள்கள் வழங்குகின்றன.

**நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள்**-

1. வறுமையை ஒழித்தல்

2. வேளாண்மையை ஊக்குவித்தல், பசியை போக்குதல், சத்தான உணவு கிடைக்கச் செய்தல்

3. எல்லா வயதினருக்குமான நல வாழ்வை உறுதி செய்தல்

4. அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்கச் செய்தல்

5. பாலின பாகுபாடின்மையை உருவாக்குதல், பெண்களுக்கு அதிகாரமளித்தல்

6. சுத்தமான குடிநீர், சுகாதாரமான சூழல் - அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்

7. மலிவான, நம்பகமான, நிலையான, நவீன ஆற்றலை அனைவரும் பெறச் செய்தல்

8. நிலையான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்தல்

9. வளர்ச்சிக்கான உள்கட்டமைப்பு, உற்பத்தி, கண்டுபிடிப்பு

10. நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கிடையேயுமான சமத்துவமின்மையை ஒழித்தல்

11. வாழ்விடங்களை மேம்படுத்துதல்

12. தேவைக்கேற்ற உற்பத்தியை உறுதிபடுத்துதல்

13. பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல்

14. நிலையான நீடித்த வளர்ச்சிக்கு கடல் வளங்களை காத்தல்

15. சுற்றுச்சூழலை காத்தல், காடுகளை காத்து பாலைவனமாக்கலை தடுத்தல்

16. அமைதியான சூழலை சமூகத்தில் ஏற்படுத்துதல், எல்லா தரப்பினருக்கும் பாகுபாடற்ற நீதி பெறச் செய்தல்

17. நிலையான வளர்ச்சிக்கு உலகளாவிய ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்

இந்த நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் ஒவ்வோரு அரசுக்கும், ஐக்கிய நாடுகள் அமைப்புகளுக்கும் மற்றும் தன்னார்வ அமைப்புகளுக்கும் தெளிவான வடிவமைப்பை வழங்குகின்றன. ஐக்கிய நாடுகள் அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் இவற்றை தங்களது நாட்டின் கொள்கைகள், சட்டங்கள் மற்றும் திட்டங்களில் ஏற்று, அதனை அடைவதற்கான பங்களிப்பினை அளிக்க கடமைப்பட்டுள்ளன. வறிய நாடுகளுக்கான உதவிகளை செல்வந்த நாடுகள் தொடர்ந்து வழங்க வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் திட்டமிட்டபடி எட்டுவதற்கான முயற்சிகளை பலப்படுத்துவது, வசதிபடைத்தவர் மற்றும் ஏழைகளுக்கு இடையேயான இடைவெளியை குறைத்தல் முக்கிய நோக்கமாகும். வறுமை, பசி, சத்துணவின்மை, நோய்கள், கல்வியறிவின்மை ஆகியவற்றை ஒழிப்பதே நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள். சமூகநலத் திட்டங்களை செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கும் அமைப்புகள் அனைத்தும், ஒளிவுமறைவற்ற, ஊழலற்ற சூழலில் சிறப்பாக செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு சமுதாயத்துக்கும் கல்வியும், சுகாதாரமும் கிடைக்க வேண்டும். குறிப்பாக, கிராமப்புறங்களில் சுகாதார சேவைகள் விரிவுபடுத்தப்பட வேண்டியது அவசியத்தை உணர்த்துகிறது. மக்களுக்கு குறைந்த செலவில் தரமுள்ள மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியத்தை வலியுறுத்துகிறது.

**நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களில் உள்ள பயனுள்ள அம்சங்கள்:**

- வறுமை மற்றும் சமூக விலக்கல் ஒதுக்கலை முடிவுக்கு கொண்டு வர அரசை பொறுப்புள்ளதாக்கிறது. சமத்துவமின்மை குறிப்பாக வருவாய் சமத்துவமின்மை தேசிய கொள்கைக்கான தளத்தில் விட்டுவிடாமல் உலகத்தில் உள்ள அனைவருக்குமான பொது குறிக்கோளாக கொண்டுவரப்பட வேண்டிய தேவையை நமக்கு உணர்த்துகிறது.
- சர்வதேச சமூகங்கள் வறுமையை குறைப்பதோடு மட்டுமன்றி, முடிவுக்கு கொண்டு வர திட்டங்களை வகுக்க வேண்டும். மனித உரிமைகளை அனுபவிப்பதிலோ, அடிப்படை சேவைகளைப் பெறுவதிலோ வருமானம், பாலினம், இனக்குழு, மாற்றுத்திறனாளி மற்றும் புவியியல் சார்ந்த தன்மை இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்கிறது.
- மனிதத்தின் மீதான மரியாதை, தோழமை, நிலைத்த தன்மை, சமவாய்ப்புகள் போன்றவைகளுக்கான உலகளாவிய பங்குதாரர்களை இந்த பிரகடனம் அழைப்பது வரவேற்கத்தக்கது.
- இந்த பிரகடனமானது, வறுமையை ஒழிப்பதற்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது. மிகவும் விளிம்புநிலையில் உள்ள மக்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டினால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர;.
- புதிய குறிக்கோள்களை வகுத்து நிலைத்த அமைதியான சமூகத்தையும், ஆளுகை வழிமுறைகளை மேம்படுத்துவதற்கும் அளிக்கவேண்டிய முக்கியத்துவத்தை புதிய முன்னேற்றத்திற்கான விவாத பொருளில் அளித்துள்ளது.
- தகவல் புரட்சிக்கான அறைகூவலை இந்த பிரகடனம் எழுப்புவதுடன், முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் மற்றும் புள்ளி விபரங்களை பலப்படுத்துகிறது. மேலும் பாலினம், புவிசார், வருமானம் மற்றும் பிற அடிப்படைகளிலான தகவல்களை சேகரித்து அனைத்து விதமான குழுக்களும் பயன்பெறும் வகையில் முன்னேற்றக்கொள்கைகளை வகுக்க ஆவண செய்தல், கொள்கைகளுக்காக நிதி ஒதுக்க அழுத்தம் கொடுத்தல், அரசினை பொறுப்புடையாக்குதல் போன்றவைகளை குறிக்கிறது.
- வளங்களை ஒருங்கிணைப்பதில், சுரண்டலை ஊழலை தடுப்பதற்கான தேவை தெளிவாக உணரப்பட்டுள்ளது. கள்ளப்பண புழக்கம், வரிஏய்ப்பு மற்றும் அதிகமாக அபகரிக்கப்படும் சொத்துக்கள் மீட்பு போன்றவைகளைப் பற்றிய குறிப்புகளும் அதனை சந்திப்பதற்கான தேவை பற்றிய உணர்தலும் உள்ளது.

**அரசு செய்ய வேண்டியவை:**

- வறுமை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் பங்கேற்புடன் தேசிய நீடித்த வளர்ச்சியில் உத்திகளை உருவாக்குதல்,
- இவ்விலக்குகளை தேசிய திட்டமிடுவதோடு இணைத்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டும்
- ஒவ்வொரு நாட்டின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதுடன் உலகளாவிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு முக்கிய பங்காற்ற வேண்டும்.
- துறைகளிடையே ஒருங்கிணைப்பிற்கான குழுவை உருவாக்குதல். இக்குழுவில், நிதி, திட்டமிடல், சுற்றுபுறசூழல், வெளிநாட்டுத்துறை, தேசிய புள்ளி விவரங்கள் (செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்) ஆகிய துறைகளின் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.
- பாராளுமன்றத்தில் அனைத்து கட்சி பிரதிநிதிகள் கொண்ட குழு அமைத்து செயல்படுத்துவதற்கு நிர்வாகத்திடம் ஆதரவு மற்றும் வலுபடுத்துதல் செய்ய வேண்டும்
- குடிமை சமுதாய நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அளவில் செயல்படும் நிறுவனங்கள் முழுமையாக பங்கேற்க வேண்டும்.
- உள்ளாட்சி மற்றும் பரவலாக்கப்பட்ட அதிகாரம் மூலம் குடிமை சமுதாயத்தில் நெருக்கமாக பணி செய்து தேசிய மற்றும் மாநில அளவில் இலக்குகளை அடைவதற்கு உறுதி செய்ய வேண்டும்.
- நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை செயல்படுத்துவதற்கு தேசிய மற்றும் உள்ளூர் வளங்களை போதிய அளவு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
- பொதுமக்கள் பங்கேற்புடன் உள்ளடக்கிய கண்காணிப்பும் அமைக்க வேண்டும். இதன் மூலம் செயல்படுத்துவதற்கான அடைவுகள் குறித்து ஆவணப்படுத்துதல் மற்றும் சீராய்வு செய்வதற்கு உரிய அமைப்பு முறையை உருவாக்க வேண்டும்.
- பன்னாட்டு தொடர் நிகழ்வு மற்றும் சீராய்வு செயல்பாடுகளில் முழுமையாக பங்கேற்க வேண்டும்.
- தொலைக்காட்சி, வானொலி, இணையதளங்கள், திரைப்படம், வகுப்பறைகள் என சாத்தியமுள்ள இடங்களில் எல்லாம் வளர்ச்சிக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை வலியுறுத்த விழிப்புணர்வு செய்யப்பட வேண்டும்.

மக்களின் வளர்ச்சி என்பது சமமான, நீடித்த, நிலையான வளர்ச்சி. அதற்கு ஐ.நா. சபையின் நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள் உதவும் என்பதில் ஐயமில்லை. இந்திய அரசும் தமிழ்நாடும் அரசும் நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோளை அடைவதற்கான செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் அவா.

# 2. குழந்தைகளும் சுற்றுச் சூழலும்
## (பருவநிலை மாற்றங்கள், பேரிடர் அபாயங்களைக் குறைத்தல்)

### I. குழந்தைகள் பாதுகாப்பு குறித்த சர்வதேச தரம் ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை

தேசங்களின் கூட்டமைப்பு முதல் முதலாக சர்வதேச குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கையை எப்போது ஏற்றுக் கொண்டதோ அப்போதிலிருந்தே அதாவது 1924–லிருந்தே சர்வதேச சட்டங்கள் குழந்தை உரிமைகளை அங்கிகரித்துள்ளது. அடுத்தடுத்து வந்த மனித உரிமை சட்டங்கள் ஐக்கிய நாடுகளின் உலகளாவிய மனித உரிமைக்கான பிரகடனம் 1948 அதே வருடத்திய பிராந்திய சட்டங்கள் அதாவது உரிமைகள் மனிதனின் கடமைகள் குறித்த அமெரிக்க பிரகடனம் போன்றவை ஏய்ப்பு அற்ற வன்முறையற்ற, சுரண்டலற்ற நிலை மனித உரிமை என அங்கிகரித்துள்ளது. இந்த உரிமை குழந்தைகள் உள்ளிட்டு அனைவருக்கும் பொருந்தும், இச்சட்ட உரிமைகள் சர்வதேச சமூக மற்றும் அரசியல் உரிமைகள் 1966 யில் மேலும் பலப்படுத்தப்பட்டது.

குழந்தைகளின் சிறப்பான மற்றும் குறிப்பிட்ட உரிமைகளுக்காக புதிய சட்டங்களுக்கான சர்வதேச உடன்பாடுகள் உருவாகின. 1989ல் பொது சபையால் குழந்தை உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. சர்வதேச நிலையில் மிகப் பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை என இவ்வுடன்படிக்கை வரலாற்றில் இடம் பிடித்துள்ளது.

### II. இந்திய அரசியல் சாசனத்தில் குழந்தைகளுக்கான சுற்றுச்சூழல் உரிமைகள்

**<u>அடிப்படை உரிமைகள்</u>**

- **சரத்து 15 :–**

இந்த சரத்தின் படி மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பின் அடிப்படையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எவ்வித பாகுபாடும் ஏற்படா வண்ணம் சிறப்பான ஏற்பாடுகளை அரசு செய்துதர வேண்டும்.

- **சரத்து 21 – உயிர் மற்றும் தனி மனித சுதந்திரத்திற்கான பாதுகாப்பு :–**

சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ள விசாரணை முறைப்படியன்றி, வேறெந்த விதமாகவும் ஒரு நபரின் தனிப்பட்ட சுதந்திரத்தையும் உயிரையும் பறிக்கக் கூடாது.

- <u>**சரத்து 21A-** 6முதல் 14 வயதுவரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாயக்கல்வி</u>

### <u>நெறிமுறைக் கோட்பாடுகள்</u>

- **சரத்து 39 (f) :–**

குழந்தைகள் சுதந்திரமான சூழ்நிலையிலும் கண்ணியத்தோடும், நல்வாழ்வுடன் வளர்வதற்கும், அப்படி வாழ்வதற்கான வாய்ப்புக்களை அளிப்பதற்கும், இளைஞர்களைச் சுரண்டப்படுவதனின்றும் பாதுகாப்பதற்கும், ஒழுக்கம் மற்றும் பொருளாதாரம் காரணமாக நிராதரவாக விடப்படாமல் காப்பதற்கும்;

- **சரத்து 47** – உணவு சத்துக்களை மேம்படுத்துவது மற்றும் அடிப்படை வாழ்க்கை வசதிகளைப் பெறுக்குவது, பொது சுகாதாரம் மேம்படுத்துவது அரசின் கடமை:–

உணவுச் சத்துக்களை மேம்படுத்தவும், அடிப்படை வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும், நல்வாழ்வினை உயர்த்தவும் தேவையானவற்றைத் தமது தலையாய கடமைகளாக அரசு கருத வேண்டும். அதிலும் குறிப்பாகப் போதையூட்டும் மது வகைகளையும், உடலுக்குத் தீங்கு பயக்கும் நச்சுப் பொருள்களையும், மருந்துக்காக அன்றி வேறு விதமாகப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்காக மதுவிலக்கை அமல்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

## III. பருவநிலை மாற்றங்கள்

### (1) அறிமுகம்

சர்வதேச தட்பவெப்பச் சூழல் மாநாடு டென்மார்க் நகரில் - கோபன்ஹேகனில் நடந்து முடிந்துள்ளது. இதில் கலந்து கொண்ட உலகத் தலைவர்கள் எதிர்கால நீதிக்காக குரல் எழுப்பியுள்ளனர். (தட்ப வெட்ப சூழலை பருவகால நிலை மாற்றங்கள் எனவும் கூறுகின்றனர்)

இதன் நோக்கம் இன்றைய தட்பவெட்பச் சூழலில் மாற்றமடைந்து வரும் பல்வேறு நிகழ்வுகளும் உலகை அச்சுறுத்தி வருகின்றன. நம் முன்னோர் நமக்கு வழங்கியுள்ள இப்பூமிப்பந்தை நமது எதிர்காலத் தலைமுறைக்கு நாம் வழங்குவதில் பெரிய ஆபத்துகளும் அபாயங்களும் நேரலாம் என்ற சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளின் எச்சரிக்கைகளைக் கவனத்தில் கொண்டு மனிதகுலத்தை மீட்க இம்மாநாடு பேருதவி புரியும். அதாவது “புவி வெப்பத்தைக் குறைப்பதை கட்டாயப்படுத்தி உலகளாவிய ஒரு சட்டத்தின்படி கட்டுப்படுத்தக் கூடிய ஒப்பந்தம்” உருவாக வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பாக இருந்தது.

தட்ப வெட்பச் சூழலில் நாளைய தலைமுறைக்கு என்ன ஆபத்துக்கள் நேரலாம் என உணர ஆரம்பித்து பேசி விவாதிக்க தொடங்கிய இம்மாநாடு உப்புச்சப்பில்லாமல் முடிந்து விட்டாலும் இப்பிரச்சனை குறித்து இப்போது அனைவரையும் பேச வைத்தால்தான் ..... இப்போது நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் வறட்சியும் வெள்ளமும் குடிநீர் பற்றாக்குறை போன்ற அபாயங்கள் நீங்கி எதிர்காலத் தலைமுறையினரான நம் குழந்தைகளும் நம் பேரப்பிள்ளைகளும் உயிர்வாழ முடியும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த மனித சமூகம் - நாளைய மனித சமூகத்தை மீட்டெடுத்து விட்டது என்ற பெருமைக்குரியதாய் நாளைய உலகம் நம்மை பற்றி பேசுவதற்கு நாம் முயற்சி எடுக்காவிடில் நாகரீக சமூகம் என்று நம்மை நாம் அழைத்துக் கொள்வதற்கு எந்த அருகதையும் அற்றவர்களாகி விடுவோம்!

### (2) ஏன் நம் பருவகால நிலை மாற்றம் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும்

பருவகால நிலையில் தற்போது ஏற்பட்டு வரும் மாற்றங்கள் - விரைவில் குழந்தைகள் மீது மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தப் போகிறது. அதன் விளைவு குழந்தை உரிமை மீறல்களாகவே இருக்கும். எனவே பருவகால மாற்றத்தினால், குழந்தை உரிமைகள் பாதிப்புக்குள்ளாவதை குழந்தை உரிமைகளுக்கான அணுகுமுறையாக ஏற்று, வெகு

மக்கள் தளத்தில் இப்பிரச்சினையை கொண்டு செல்ல வேண்டும். குழந்தை உரிமைகளுக்கான களப்பணியாளர்களுக்கும் அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டியவர்களுக்கும் இது பற்றிய புரிதல் அவசியமாகியுள்ளது.

**(3) பருவ கால நிலை மாற்றம் என்றால் என்ன?**

ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட காலத்தில் (பொதுவாக 30 ஆண்டுகாலம்) மாற்றங்களை கருத்தில் கொண்டு, சராசரியான வானிலை நிலை கணிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் அக்டோபரிலிருந்து நவம்பர் வரை வெயில் காலம். இந்த சராசரி வானிலை அடிப்படையில் தான் பருவமழைக் காலத்தை கணக்கிடுகிறோம். அதற்கேற்ப விவசாயத்தையும் செய்கிறோம். இந்த நீண்டகால வானிலை மாற்றங்களால் நிகழும் தாக்கங்களே பருவ கால நிலைமாற்றமாகும். இந்த மாற்றத்தால் வெப்பம் உருவாகலாம், குளிர் உருவாகலாம். ஆண்டுதோறும் மழையின் அளவோ, வெயிலின் கடுமையோ அதிகரிக்கலாம் அல்லது குறையலாம். எப்படியானாலும், இந்த மாற்றங்கள் வாழ்க்கைச் சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கும். மனித உயிர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும். நீர் நிலம், சக்தி, உற்பத்தி போன்ற இயற்கை ஆதாரங்களிலும் இது பாதிப்பை ஏற்படுத்தி விடும். பருவகால நிலையும், வானிலையும் ஒன்றானது அல்ல. ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிலவும் சராசரியான வானிலை அமைப்பே காலநிலை, வானிலை - உடனடி தட்பவெப்பங்களைத் தெரிவிக்கிறது. ஆனால் பருவகால நிலை என்பது நீண்டகாலத்துக்கு பல்வேறு மட்டங்களில், வானிலை உருவாக்கிய தாக்கங்களால் நிகழும் மாற்றங்களை கூறுகிறது, பல்வேறு வகைகளில் மனிதர்கள் இயற்கையை சுரண்டுவதும், பருவகால நிலை மாற்றத்துக்கு காரணமாகும்.

பூமியைக் காக்கும் கவசமாய் அமைந்தது வளிமண்டலம், சூரிய வெப்பத்தையும் ஒளியையும் மிதப்படுத்தி, பூமிக்கு அனுப்பி வைப்பதில் வளிமண்டலத்தின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். வளி மண்டலம் வெவ்வேறு வாயுக்களாலும், நீராவியினாலும் நிறைந்துள்ளது. வளிமண்டலத்தில் 78.1 சதவீதம் நைட்ரஜன், 20.9 சதவீதம் கார்பன்-டை ஆக்சைடு அடங்கியுள்ளது. ஆர்கான் 0.38 சதவீதம் (0.93) மற்றும் நியான், ஹீலியம் ஆகியவை குறைந்த அளவே உள்ளன.

பூமி பல அடுக்கடுக்கான பாளங்களைக் கொண்டுள்ளது. அப்படி பூமிக்கு அருகிலேயே 8 கிலோ மீட்டர் செங்குத்தாக உயரத்தில் இருப்பது ‘அடி வளி மண்டலாகும். இது துருவப் பகுதியில் அமைந்துள்ளது. பூமத்திய ரேகையிலிருந்து 17 கிலோ மீட்டர் உயரத்தில் இது உள்ளது. ‘அடி வளி மண்டலத்தின்’ மேலே அடுக்கு மண்டலம் உள்ளது. இது 50 கிலோ மீட்டர் உயரத்தில் செங்குத்தாக உள்ளது. இங்கேதான் சூரிய வெப்பத்திலிருந்து நம்மை காப்பாற்றும் ஓசோன் படலம் இருக்கிறது. ‘அடி வளி மண்டலத்துக்கு’ மேலே அடுக்கு மண்டலம் 80-லிருந்து 90 கிலோ மீட்டர் உயரத்தில் பரவியிருக்கிறது. இறுதியாக வெப்பம் படிப்படியாக மங்கி, (குறைந்து) வெளிகளுக்கு அப்பால் வருகிறது. பூமியின் அடுக்கு பாளங்களுக்கு இடையே உள்ள வாயுக்கள் மிகமிக்குறைந்த அளவில்தான் கலக்கின்றன.

பூமியின் வெப்ப அளவு அதிகரிப்பதால் பருவகால நிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதுவே 'பூமி வெப்பமாதல்' என்று அழைக்கப்படுகிறது. இதனால் மழை பெய்யும் முறைகளில் மாற்றங்கள் வருகின்றன. கடல் மட்டம் உயருகிறது. தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்களிடையே பல்வேறு நிலைகளில் பெரும் தாக்கத்தை உருவாக்குகிறது. வானிலை மாற்றம் குறித்து நாம் பேசும் போதெல்லாம் பருவ காலநிலை மாற்றத்தைப் பற்றி நாம் கவலைப்படுகிறோம். மனிதர்களாலும், சுரண்டல்களாலும்தான் புவி வெப்பமடைந்து வருகிறது. பசுமையில்ல வாயுக்களின் அளவு வளி மண்டலத்தில் அதிகரித்ததுதான் புவி வெப்பமடைவதற்கு காரணமாகும். (பசுமையில்ல – வாயுவில் – நீராவி, கரியமிலவாயு, மெத்தேன், நைட்ரோ ஆக்சைடு, புளோரா கார்பன், ஓசோன், ஹைடிரோஃபுளோரோ கார்பன் ஆகியவை அடங்கியுள்ளன)

பூமியின் மேல் படிவத்தில் – இந்த பசுமையில்ல வாயுக்களால் ஏற்படுத்தப்படும் தாக்கம் பசுமையில்ல தாக்கம் என்று அழைக்கப்படுகிறது. இந்த வாயுக்கள் சோலார் கதிர்வீச்சுகளை பூமியின் வளி வழியாக செல்ல அனுமதிக்கிறது. அதே நேரத்தில் பூமியிலிருந்து வெளிப்படும் கண்ணுக்குத் தெரியாத கதிர்வீச்சுகளை வெளி மண்டலத்துக்கு செல்லவிடாது தடுத்து, வெப்பத்தை முடக்குகிறது. இந்த இயற்கை நிகழ்வால் பூமியின் வெப்பநிலை சுமார் 60 டிகிரி பாரன்ஹீட் ஆக இருந்து வந்தது. இல்லாவிட்டால், பூமியின் வெப்ப நிலை வேறுவிதமாக இருந்திருக்கும். தற்கால வாழ்க்கை முறையில் பசுமையில்ல வாயுவின் தாக்கத்தை தவிர்க்க முடியாது. ஆனாலும் இந்த வாயுவின் தாக்கம், மனிதர்கள் செயல்பாடுகளினால் மிகவும் வலிமையாகி விட்டது. இதுவே பூமியின் வெப்பமடைதலுக்கு காரணமாகிவிட்டது.

**(4) பருவகால நிலை மாற்றத்தை கவனத்தில் கொண்டு கட்டுப்படுத்த வேண்டிய சமூக பாதிப்புகள்**

பருவகால நிலை மாற்றம் சமூகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மழலைகள் பாதிக்கப்படுவதோடு, சிசு மரணங்களும் அதிகரிக்கின்றன. தற்போது பின்பற்றப்படும் அணுகுமுறைகளை தீவிரப்படுத்தினால்தான், இதைக் கட்டுப்படுத்த முடியும். குழந்தைகளுக்கான நோய் தடுப்புத் திட்டங்கள், குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகளை மேம்படுத்துதல், பொது சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சுற்றுச் சூழல் பாதுகாப்பின் பாதிப்புகளை விளக்குதல் போன்ற நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும். கொள்கைகளை உருவாக்கும் போது பருவகால நிலை மாற்றம் குழந்தைகள் மீது ஏற்படுத்தும் பாதிப்புகளை கவனத்தில் கொள்ள வேண்டும். சுற்றுச் சூழல் பாதிப்படைவது அதிகரித்து வருவதால், குழந்தைகளுக்கு இது பற்றிய கல்வியும், பாதுகாப்பான வாழ்க்கைக்கான அறிதல்களும் குழந்தைகளுக்கு அவசியமாகிறது. பாதிக்கப்பட்டவர்களையும், பாதிப்புகளையும் சரி செய்வதற்கான முயற்சிகள் அனைவருக்குமான கூட்டுப் பொறுப்பாகும்.

உலகில் ஒவ்வொரு மனிதரும் பருவகால நிலை மாற்றத்தின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். இதை உறுதி செய்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு. உற்பத்தி, நுகர்வு, இரண்டிலுமே சுற்றுச் சூழலை பாதிக்கும் முறைகள்

வந்துவிட்டன. இதனுடைய மோசமான பாதிப்புகளை எதிர்கால சந்ததியான நமது குழந்தைகள் அனுபவிக்கட்டும் என்று நாம் கைவிட்டு விட முடியாது.

இன்று குழந்தைகளாக இருப்பவரே, நமது எதிர்கால சந்ததியினர், நாம் மேலே குறிப்பிட்டுள்ள ஆபத்துகளால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. குழந்தைகளுக்கான அடிப்படை உரிமைகளை அய்.நா.வின் இரண்டு உடன்படிக்கைகள் தெளிவாக்கியுள்ளன. ஒன்று குழந்தைகள் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாடு, மற்றொன்று 'புத்தாயிரத்துக்கான முன்னேற்ற இலக்கு' இந்த இரண்டு உடன்படிக்கைகளையும் இந்திய அரசு ஏற்றுக் கொண்டு, அமுல்படுத்துவதற்கான திட்டங்களையும் உருவாக்கியிருக்கிறது. பருவகால நிலை நெருக்கடிகளை ஆராயவும், தேசிய திட்டம் ஒன்றை இந்திய அரசு தயாரித்துள்ளது. அதில் 8 குழுக்கள் இடம் பெற்றுள்ளன. ஆனாலும், இந்தக் குழுக்களின் செயல்பாடுகள் போதுமானவையல்ல. அவைகள் மிகவும் மென்மையாக தீவிரமின்றி செயல்படுகின்றன. புறக்கணிக்கப்பட்டவர்களின் ஆதரவு கண்ணோட்டத்தோடு இந்தக் குழுக்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது இன்றைய தேவையாக இருக்கிறது.

2015 ஆம் ஆண்டில் - குழந்தைகள் உயிர் வாழ்தல் மற்றும் குழந்தைகளின் நல்வாழ்விற்கான இலக்கு.
இலக்கு 1 - கடும் வறுமையையும் - பட்டினியையும் ஒழித்தல்
இலக்கு 4 - குழந்தைகள் இறப்பு வீதத்தை (அய்ந்து வயதுக்குட்பட்டவர்கள்) மூன்றில் இரண்டு பங்காக குறைத்தல்
இலக்கு 5 - பிரசவத்தின் போது தாய் இறப்பை நான்கில் மூன்று பங்காக குறைத்தல்
இலக்கு 6 - எச்.அய்.வி - எய்ட்ஸ்/ எய்ட்ஸ், மலேரியா மற்றும் அதிகமாக பரவிடும் வியாதிகளை கட்டுப்படுத்தி, வியாதி வராமல் தடுத்தல்

2015-ம் ஆண்டில் கல்வி மற்றும் ஆண், பெண் சமத்துவத்துக்கான இலக்கு
இலக்கு 2 - தொடக்கக் கல்வியை உலகம் முழுதும் அனைவருக்கும் வழங்குதல்
இலக்கு 3 - ஆண், பெண் சமத்துவத்தை வளர்த்து - பெண்களை அதிகாரப்படுத்துதல்
தொடக்கக் கல்வி மற்றும் உயர்நிலைக்கல்வியில் பெண் - ஆண் வேறுபாடுகளை ஒழித்தல், 2005 ஆம் ஆண்டுக்குள்ளேயே - இந்த இலக்கை உயர்நிலை கல்வியில் எட்டலாம். 2015 இல் அனைத்து மட்டத்திலும் எட்ட வேண்டும்

அவசரநிலை மற்றும் குழந்தை பாதுகாப்பில் புத்தாயிரத்துக்கான முன்னேற்ற இலக்கு - 2015க்குள்
இலக்கு 7 - சுற்றுச்சூழல் பாதிப்புகளின்றி பாதுகாப்பை தொடர்ந்து நீட்டிக்கச் செய்தல்.
இலக்கு 8 - உலக நாடுகளிடையே மேம்பாட்டுக்கான ஒற்றுமையை வளர்த்தல்.

## (5) குழந்தைகள் உரிமைகளும் - பருவகால நிலை மாற்றமும்

ஆரோக்கியமான சூழ்நிலைகளில் வாழக்கூடிய முழுமையான உரிமை குழந்தைகளுக்கு இருக்கின்றன. பள்ளிக்குப் போவது நல்ல ஆரோக்கியம் பேணுவது, வாழும் போதும் - வளரும் போதும் பாதுகாப்பான நிலையில் இருப்பது - ஆகியவை இதில் அடங்கும். இவைகளை ஏதோ மனிதாபிமான அடிப்படையில் வழங்கிட வேண்டும் என்று எளிதாக எடை

போட்டு விடக்கூடாது. குழந்தைகளுக்கான அய்.நா. உடன்பாட்டில் இந்த உரிமைகள் பட்டியலிடப்பட்டுள்ளதோடு, உலகில் மிக அதிக நாடுகளின் ஒப்புதலைப் பெற்றுள்ள ஒரே உடன்படிக்கையும் இதுதான். குழந்தைகளுக்கான சர்வதேச அமைப்பான 'யுனிசெஃப்'க்கு அடித்தளமாக இருப்பதும் இந்த உடன்பாட்டின் அம்சங்கள்தான் எதிர்கால தலைமுறையினர் - இந்த உரிமைகளை அனுபவிக்க வேண்டும். அதை உறுதி செய்யும் கூட்டுப் பொறுப்பு நமக்கு உண்டு பருவகாலம் (தட்பவெப்ப நிலை) தொடர்பான உடன்பாட்டில் 52 அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்த 52 அம்சங்களும் (பிரிவுகள்) ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதுதான்.

**(6) குழந்தைகள் உயிர்வாழ்தலும் ஆரோக்கியமும்**

பிரிவு 6 : குழந்தைகளுக்கு வாழும் உரிமை உண்டு. குழந்தைகள் உயிர்வாழவும், தங்களது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ளவும், அரசாங்கம் கட்டாயமாக உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு 24: குழந்தைகளுக்கு எவ்வளவு தரமான உடல் ஆரோக்கியத்தை அதிக அளவில் வழங்க முடியுமோ, அந்த அளவு வழங்க வேண்டும். குடிநீர், ஊட்டச்சத்து உணவு, தூய்மை மற்றும் பாதுகாப்பான சூழல், அவர்கள் ஆரோக்கியத்துடன் வளர உதவக்கூடிய தகவல்களை வழங்குதல் ஆகியவை இந்த உரிமைகளாகும். பணக்கார நாடுகள் ஏழை நாடுகளுக்கு இந்த உரிமைகளை பெறுவதற்கு உதவ வேண்டும்.

**(7) கல்வியும் - சமத்துவமும்**

பிரிவு 28 : அனைத்து குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி பெறும் உரிமை உண்டு. அது கட்டாயமாக இலவசக் கல்வியாகும். பணக்கார நாடுகள் இந்த உரிமையை எட்டுவதற்கு ஏழை நாடுகளுக்கு உதவ வேண்டும்.

**(8) பருவகால நிலை மாற்றம் தொடர்பான சர்வதேச உடன்பாடுகள்**

பருவகால நிலை மாற்றம் நாட்டின் எல்லைகளைக் கடந்து நிற்கிறது. அதன் தாக்கம் சர்வதேச சமூகத்தையே பாதிக்கும் நிலை வந்துவிட்டது. இதிலும்கூட மிகவும் பின் தங்கியுள்ள நாடுகளும் வளர்ந்து வரும் நாடுகளுமே மோசமான பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. இதன் காரணமாகவே சர்வதேச நாடுகள் - பருவகால நிலை மாற்றம் தொடர்பாக அய்.நா.வின் உடன்பாடு ஒன்றை உருவாக்கியுள்ளன. பருவ காலநிலை மாற்றத்துக்கான அய்.நா.வின் கொள்கை உடன்பாடு ஒன்று உருவாக்கப்பட்டு, 1992 இல் ரியோவில், இதற்கான உலகநாடுகளின் மாநாடு நடத்தப்பட்டது. இதற்கு 186 நாடுகள் ஆதரவு தெரிவித்து, தங்களை இணைத்துக் கொண்டுள்ளன. தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1992 | - | ரியோ மாநாடு |
| 1997 | - | கொயோட்டா உடன்பாட்டு வரைவு |
| 2007 | - | பாலி ஒப்பந்தம் |
| 2008 | - | போங்கான் மாநாடு |
| 2009 | - | கோபநிகேதன் மாநாடு (டென்மார்க்) |

பருவகால நிலை மாற்றத்தால் - விவசாயம், உணவு, உற்பத்தி நெருக்கடிக்குள்ளாகி, புறக்கணிக்கப்பட்ட, பலவீனமான மக்கள் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள். ஒரு பக்கம் வெப்பம், அதிகரிப்பு, பருவ மழை உரிய காலத்தில் பெய்யாமை போன்ற பாதிப்பு,

மற்றொரு புறத்தில் பஞ்சம், வெள்ளம், புயல் என்ற மிக மோசமான பாதிப்புகள், விவசாய உற்பத்தியும், உணவுப் பாதுகாப்பும் பாதிப்புக்குள்ளாகி, இதன் சுமைகளை பெண்களும், குழந்தைகளும் சுமக்க வேண்டியிருக்கிறது. போதுமான உணவும், ஊட்டச்சத்தும் எல்லோருக்கும் கிடைப்பதும், குறிப்பாக குழந்தைகள், முதியோா் மற்றும் பெண்களுக்கு கிடைப்பதே 'உணவுக்கான பாதுகாப்பு' ஆகும். இதன் மற்றொரு அா்த்தம் உணவுப் பொருள் போதுமான அளவில் தயாராக இருக்க வேண்டும் என்பதாகும். தானியங்கள், காய்கறிகள், பாதுகாப்பான குடிநீா் ஆகியவையே உணவுப் பொருள்களாகும்.

**(9) பருவகால மாற்றம் ஏற்படுத்தி உள்ள பாதிப்புகள்**

- 1.2 மில்லியன் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீா் கிடைக்கவில்லை
- 2.5 மில்லியன் மக்களுக்கு உலகில்அடிப்படை சுகாதார வசதி கிடைக்கவில்லை
- 1995 இல் சுமாா் 34 சதவீதமாக இருந்த தண்ணீா் பற்றாக்குறை - 2025 இல் 63 சதவீதமாக அதிகரிக்கும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.
- மலேரியா, வயிற்றுப் போக்கு, தோல் வியாதி, ஆஸ்துமா, மன அழுத்தம், டெங்கு காய்ச்சல், புளு காய்ச்சல், பேதி உள்ளிட்ட வியாதிகள் தெற்கிலும் வடக்கிலும் பெருகி வருகின்றன.

**(10) குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் :**

1. காலநிலை மாற்றத்தால் அடுத்து என்ன நிகழும் என்ற பயத்துடன் குழந்தைகள் காணப்படுகின்றன. (கடல் நீா் அதிகரிப்பு, திடீா் மழை, கடல் கொந்தளிப்பு) வறட்சி தண்ணீா் பற்றாக்குறை, காட்டுத்தீ
2. பருவநிலை மாற்றத்தால் புதிய புதிய நோய்கள் ஏற்படுகின்றன. இந்த நோய்களுக்கு முதலில் பெரும்பான்மையாக குழந்தைகள்தான் பாதிப்படைகின்றனா்.
3. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் வறட்சியில் மிகவும் பாதிக்கப்படுபவா்கள் நடுத்தர மற்றும் ஏழைக் குழந்தைகள் சரிவிகித உணவு இன்றி ஏற்படும் வறுமையின் காரணமாக பல துன்பத்திற்கு ஆளாகின்றாா்கள்.
4. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வறட்சி காரணமாக இடம் விட்டு வேறு இடத்திற்கு வேலை தேடியும், குடி பெயரும் போது அவா்களின் கல்வியும், எதிா்காலமும் கேள்விக் குறியாகிறது. இந்த பாதிப்புகளின் காரணமாக குழந்தை தொழிலாளா்களாக சமூகத்தில் தள்ளப்படுகின்றாா்கள்.

(இந்த நிலை நீடிப்பின் அவா்களின் எதிா்காலமே கேள்விக்குறியாக உள்ளது.) புவி வெப்பமடைவதால் காலநிலை மாற்றமடைந்துள்ளது. பெரும் மழை, அதிவேகப்புயல், மாபெரும் வெள்ளம், அதிகரிக்கும் நோய்கள், கடும் வறட்சி என எல்லாமும் வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்து விட்டது. இந்நிலை தொடருமானால் இப்பூலோகம் மனிதா்கள் வாழத் தகுதியற்றதாக மாறிப்போகும் காலம் விரைவில் வரக்கூடும். என அறிவியலாளா்கள் எச்சரிக்கின்றனா். அதாவது நமது பிள்ளைகளை அவா்களது சந்ததியினரோ வாழ முடியாத இடமாக பூமி மாறிப்போகக்கூடும். எதிா்காலம் கேள்வி குறியாகிவிடும்.

**(11) குழந்தை உரிமை பாதிப்பு தொடர்பான குழந்தைகளுக்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை**

Feeling the heat, Child Survival is a Changing Climate என்னும் பெயரில் Save the Children என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை மீது நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்தடுத்த ஆண்டுகளில் பஞ்சங்கள் அதிகரிக்கும் தண்ணீரால் பரவும் தொற்று நோய்கள் வரும்.

- அடுத்தடுத்த ஆண்டுகளில் பல இடங்களில் குழந்தைகள் இயற்கைப் பேரிடர்களால் இறந்து விடுவார்கள்.
- இதன் காரணமாக பாதிக்கப்பட்ட குழந்தைகள் பள்ளிக்குப் போவது தடைபடலாம்
- குழந்தை தொழிலாளர் உருவாகலாம்
- குழந்தை கடத்தல் நேரலாம்
- 900 மில்லியன் குழந்தைகள் - தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்படலாம் 160 மில்லியன் குழந்தைகள் மலேரியா நோயினால் பாதிக்கப்படலாம்.

**(12) குழந்தைகள் நிலையும், பருவகால நிலை நெருக்கடியும்**

உலகில் 18 வயதுடைய குழந்தைகள் 2.2 மில்லியன் உள்ளனர். இவர்களில் 36% குழந்தைகள் 16 வயதிற்குள் இறந்து விடுகின்றனர். சுற்றுச்சூழல் மாசுபாட்டால் 1.9 மில்லியன் - 5 வயதுக்குட்ட குழந்தைகள் டயோரியாவால் இறந்து விடுவார்கள்.

சத்துணவு இல்லாமல் 1 வருடத்திற்கு3.5. மில்லியன் குழந்தைகள் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இறக்கின்றார்கள்.

மலேரியாவால் : 1 மில்லியன் குழந்தைகள் இறக்கின்றன. இதில் 5 வயது குழந்தைகள் 80% இறக்கின்றன.

**(13) தண்ணீரின் மூலம் பரவும் நோய்கள்**

மாசுபட்ட காற்றால் மூச்சு விடமுடியாத நோய்கள் பரவும். இதில் எளிதில் குழந்தைகள்தான் அதிக பாதிப்புக்குள்ளாகிறார்கள் - ஆஸ்த்துமா பாதிப்பு அதிகமாகும்.

பருவகாலநிலை மாற்றத்தால்

- இடம் பெயர்தல்
- கட்டாய வெளியேற்றம்
- குழந்தைகள் கடத்தப்படுதல் (Trafficking)
- இடைவிலகல் (Dropout)
- குழந்தைத் தொழிலாளர் போன்ற நிலை ஏற்படும் (Child Labour)

Loss of lively hood - இதனால் பெண்கள் சத்துக்குறைவான உணவுகளையே உட்கொண்டு குழந்தைகளும் ஊட்டச்சத்துக் குறைவானவர்களாகப் பிறப்பதற்கான வாய்ப்புண்டு.

**(14) உணவு பாதுகாப்பு**

Economic Condition Poor – ஏழ்மை நிலையே நிலவுமாதலால் பெண்கள் அதிக நேரம் வேலை செய்ய வேண்டியதிருக்கும். பெண்கள் தனியாக அதிக நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளதால் குழந்தைகளிடம் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படும்.

குடும்பங்களில் கடன் சுமை அதிகமாகும் வேலை வாய்ப்பு குறைவாகுமாதலால் வாழ்க்கையை ஓட்ட கடன் வாங்கி வேண்டியதிருக்கும்.

**(15) நாம் என்ன செய்ய வேண்டும்**

காலநிலை மாற்ற நெருக்கடி போது மிகவும் முக்கிய மிக அவசர பிரச்சனை இதற்கு அரசு உடனடி நடவடிக்கைகளை ஏற்று காத்திராமல், ஒவ்வொரு தனிமனிதரும் இதில் கவனம் செலுத்த வேண்டும். நமது வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் நாம் கொண்டுவர வேண்டும். இதை சிறிய முயற்சிப்பது தொடங்க வேண்டும். புவி வெப்பத்தை குறைக்க பருவநிலை மாற்றங்களை கட்டுக்குள் வைக்க ஒவ்வொருவரும் தங்களால் முயன்ற அளவு வளிமண்டலத்தைக் காக்க உறுதி எடுக்க வேண்டும்.

**(16) மரங்களை நடுவதை இயக்கமாக்குவோம் :**

பூமிப் பந்து சூடாகும் பேராபத்தினைத் தடுக்கும் வழிகளுள் மரங்களை நட்டு வளர்ப்பது மிகச் சிறந்த வழி என அறிவியலாளர்கள் கருதுகிறார்கள். ஐக்கிய நாடுகள் அவையும் அதையே வலியுறுத்துகிறது.

காற்றில் ஏற்கனவே கலந்திருக்கும் கரியமில வாயு அளவைக் குறைக்கவும், புவி வெப்பமடைவதால் மாறிவிடும் கால நிலைக்கு ஏற்ப நம்மை நாமே தகவமைத்துக் கொள்ளவும், மரம் நட்டு வளர்ப்பது மிகச்சிறந்த வழியாகும்.

மரங்கள் நிழலைத் தருகின்றன. கூடவே, நகர்ப்புறங்களிலும், வாழிடங்களிலும் வெப்பத்தைக் கட்டுப்படுத்தி இயற்கையான குளிர்சாதன வசதியாக செயலாற்றுகின்றன. சுற்றுப்புறத்தில் வெப்பத்தைக் கட்டுப்படுத்தி குளிர்ச்சியை உருவாக்குகின்றன.

ஒரு மரம் 5 குளிர்சாதனக் கருவிகளுக்கு இணையாக செயல்படுவதாக ஆய்வுகள் மூலம் மெய்ப்பிக்கபட்டுள்ளது. ஒரு நகரில் 22 விழுக்காடு இடங்களில் மரம் சூழந்திருக்குமானால் அந்நகரின் வெப்பநிலை, மரம் இல்லாத நகரைவிட 20 விழுக்காடு குறைவாக இருக்கும் எனக் கணித்துள்ளனர்.

மரங்கள் கரியமில வாயுவை உட்கொண்டு உயிர் வளியை (ஆக்ஸிஜன்) வெளியே விடுகின்றன. இதன் காரணமாக புதைபடிவ எரிபொருட்களான பெட்ரோல், டீசல், எரிவாயு, நிலக்கரி போன்றவற்றை எரிப்பதால் வெளியாகும் கரியமிலவாயுவை எடுத்துக் கொண்டு உயிர்வளியை மரங்கள் வெளியேற்றுகின்றன.

ஒரு மரம் ஓர் ஆண்டில் 12 கிலோ அளவுக்கு கரியமிலவாயுவை உட்கொள்கிறது. அதாவது, வளிமண்டலத்தில் உள்ள கரியமில வாயுவில் இருந்து 12 கிலோவை எடுத்துக்கொண்டு, அதற்கு ஈடான நல்ல காற்றை மரம் தருகிறது. இது 4 பேர் கொண்ட குடும்பத்தினர் ஆண்டு முழுவதும் சுவாசிக்கும் உயிர்வளிக்கு ஈடானதாகும்.

ஒரு எக்டேர் பரப்பளவில் இருக்கும் மரங்கள் ஆண்டுக்கு 6 டன் கரியமிலவாயுவை எடுத்துக் கொள்கின்றன. எனவே, அவ்வளவு அதிகமான கரியமில வாயுவின் வளிமண்டல அடர்த்தி குறையும் என்கின்றனர் அறிவியலாளர்கள்.

ஒவ்வொருவரும் மரம் நடும் போது, உலகில் கணிசமான மரங்கள் நடப்படுகின்றன. இதனால் வளிமண்டல கரியமிலவாயுவின் அடர்த்தி கணிசமாகக் குறைக்கப்படுகிறது.

இதனால் புவியின் வெப்பநிலை உயர்வதும் கணிசமாகக் குறைக்கப்பட்டு, எதிர்காலத்தில் இயற்கைச் சீற்றங்கள் அதிகரிப்பதும் குறையும்! அவ்வாறே, இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளை கணிசமாகத் தடுக்கவும் மரங்கள் உதவும். எனவே, ஒவ்வொருவரும் மரம் நட்டு வளருங்கள். மற்றவர்களையும் மரம் வளர்க்கத்தூண்டுங்கள்.

**(17) குழந்தைகளுக்கு இவற்றை கற்றுக்கொடுக்கலாம் :**

- எரிபொருளே தேவைப்படாத நிலையில் நடத்தல் மற்றும் மிதிவண்டிப் பயணங்களை ஊக்குவிக்க வேண்டும்.
- புதிதாக மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலமாகவும் கரியமில வாயுவைக் கட்டுப்படுத்த முடியும்.
- மக்காத குப்பைகளை பிளாஸ்டிக், மின்னணு சாதனங்கள், கம்பியூட்டர் செல்போன், போன்றவற்றை மறுசுழற்சி செய்து பயன்படுத்தல் பிளாஸ்டிக் போன்ற பொருட்களை பயன்படுத்துவதை குறைத்து துணிபைகளை பயன்படுத்துதல்.
- சுற்றுச்சூழல் பாதிக்காதவண்ணம் மாசுகட்டுப்பாடு அவசியம் என்பதை எல்லோரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.
- மண்ணை மலடாக்கும் மழைநீர் மண்ணில் ஊடுருவதைத் தடுக்கும் மக்காத பிளாஸ்டிக் உபயோகத்தை தவிர்க்கலாம். மறுசுழற்சி முறையைப் பயன்படுத்தலாம்.
- மரங்களை அதிகமாக வளர்க்கலாம். அழிந்து வரும் வனங்களைப் பாதுகாக்கலாம்.
- மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தலாம். விழாக்களில் ஆடம்பரமாக பயன்படுத்தப்படும் ஒளி விளக்குகளை தவிர்க்கலாம். வீடுகளில் தெருக்களில் பயன்படுத்தப்பட்டு வரும் குண்டு பல்புகளின் பயன்பாட்டை குறைக்கலாம்.
- எரிபொருட்களின் (பெட்ரோலியம், டீசல், நிலக்கரி) பயன்பாட்டால் 40% மேலாக கார்பன் வெளியேறுவதால், இவற்றின் பயன்பாட்டை கட்டுப்படுத்தலாம்.
- தொலைக்காட்சி (T.V) கணினி (Computer) கைபேசி (Cell) போன்ற மின்னணு சாதனங்களை உபயோகிக்காத போது அனைத்து வைக்கலாம்.
- ஆடம்பர கார் அணிவகுப்பு, கார் பந்தயங்கள், தேவையற்ற வாகனங்கள் போன்றவற்றை குறைத்தல் வேண்டும்.
- போக்குவரத்து முறையை மாற்றி அமைக்க வேண்டும். கார்கள் உள்ளிட்ட தனியார் வாகனப் பெருக்கத்தை உடனடியாகக் கட்டுபடுத்தி பேருந்துகளையும், தொடர் வண்டிகளையும் உள்ளடக்கிய பொது போக்குவரத்து வசதிகளை அதிகமாக்க வேண்டும்.
- பெரும்பாலும் அனைவரும் பொதுப்போக்குவரத்து முறையை பயன்படுத்தலாம். அருகில் உள்ள இடங்களுக்குச் செல்ல மிதிவண்டியைப் பயன்படுத்தும் முறையை மேற்கொள்ளலாம்.
- குழந்தைகள் இன்று கற்றுக் கொள்பவைதான், நாளைய உலகை வடிவமைக்கின்றன.
- வலியுறுத்திப் பேசுவதோடு மட்டுமல்லாது, உள்ளூரில் பின்பற்றப்பட்டு வந்த பராம்பரிய முறைகள் பற்றிய அறிதலும், அவர்களுக்கு மிகவும் அவசியமாகிறது.
- சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு, சமத்துவம் பற்றிய அக்கறை, புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு சமூகநீதி வழங்குதல், பருவ நிலை மாற்றங்கள்

தொடர்பான தகவல்கள் ஆகியவை பற்றிய தெளிவும் புரிதலும் இளம் வயதிலேயே வந்துவிட்டால், பருவ காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை வலிமையாக எதிர்கொள்ள முடியும்.

- அவர்களை மாற்றத்துக்கான தூதுவர்களாக உருவாக்க வேண்டும். மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய சக்திகளாக மாற்ற வேண்டும். எனவே - குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் கிடைக்கக் கூடிய அறிதலும், புரிதலும் செயல்பாடுகளாக மாற்றப்பட வேண்டும். அவர்கள் தங்களிடமுள்ள கருத்துகளை சமூகத்தில் கொண்டு போய் சேர்ப்பதோடு, செயல்படவும் வேண்டும்.
- குழந்தை உரிமைகளுக்கான களப்பணியாளர்கள் உள்ளூரில் பாரம்பரியமாக மதித்து பின்பற்றி வரும் செயல்பாடுகள் குழந்தைகளிடமிருந்து வெளிப்படும் கருத்துகளை அடிப்படை தகவல்களை உள்ளூர் எதார்த்தத்தோடு தொடர்புபடுத்தி, குழந்தைகளின் ஆக்கப்பூர்வ சிந்தனைகளாக மாற்றி அவர்களிடம் விதைக்க வேண்டும்.
- நீர் ஆதாரம், மாசுப்பட்டு, நீர் வழங்குதலும் குறைந்து வரும் நிலையில், அவற்றை சரி செய்ய தண்ணீர் மற்றும் சுகாதார திட்டங்களை செயல்படுத்துவது அவசியமாகும். மழை நீர் சேமிப்பு, கிணறு மற்றும் குடிநீர் குழாய்கள் அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.
- சுற்றுச்சூழல் பற்றிய கல்வியை வழங்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இதற்கு, இது தொடர்பாக ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் கல்வியின்; தரத்தை உயர்த்தி, அதை பணிகளிலும், சமூகத்திலும் பரவலாகக் கொண்டு செல்வதோடு, குழந்தைகளையும் பங்கேற்கச் செய்ய வேண்டும். இதில் குழந்தைகளின் கருத்துக்கு வாய்ப்புகள் தருவதோடு, உள்ளூர் மட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு ஆதரவான நடவடிக்கைகளை அவர்களே முனைப்புடன் மேற்கொள்ளச் செய்யும் சூழலை உருவாக்க வேண்டும்.
- பாரம்பரியமான மரங்களை பாதுகாத்தல், செடி வளர்த்தல் போன்ற நடவடிக்கைகளில் பள்ளிகளோடும், இளைஞர்களோடும் இணைந்து உதவ வேண்டும். இதன் வழியாக சுற்றுச் சூழல் மேம்பாடு பற்றிய விழிப்புணர்வை பரப்ப முடியும். சுற்றுச்சூழல் கல்விக்கான திட்டங்களுக்கும் உதவ முடியும்.
- புயல், வெள்ளம், பஞ்சம் போன்ற இயற்கை பேரிடர்கள் வரும் போது அவைகளை எதிர்கொள்ள பள்ளிக் குழந்தைகளை தயார் செய்து சமூகத்துக்கு உதவ வேண்டும். பருவகால நிலை மாற்றத்தில் இந்த சீரழிவுகளை அடிக்கடி சந்திக்க வேண்டியிருக்கிறது. இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளும் செயல்பாடுகளில் மய்யமாக குழந்தைகள் முன் நிற்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

# IV. பேரிடர் அபாயங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல்

## i. இயற்கைப் பேரிடர்கள்:

நிலநடுக்கம், வெள்ளம், புயல், சுனாமி, பஞ்சம், நிலச்சரிவு வெள்ளம், வறட்சி, எரிமலை வெடிப்பு, காட்டுத்தீ போன்றவை இயற்கையினால் ஏற்படும் பேரிடர்களாகும்.

## 1. நிலநடுக்கங்கள்:

**சுற்றுச்சூழலில் நிலநடுக்கத்தின் தாக்கம்:**

ஒரு நிலநடுக்கத்தால் ஏற்படக்கூடிய அழிவானது அந்த பூகம்பத்தின் அளவு, எவ்வளவு நேரம் நீடித்தது, அதனால் ஏற்பட்ட குழுக்கள் ஆகியவற்றை சார்ந்ததாகும். கடந்த 500 ஆண்டுகளில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்ட பூகம்பங்களால் பல கோடி மக்கள் கொல்லப்பட்டனர். மிகவும் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய இயற்கைச் சீற்றங்களில் ஒன்றுதான் பூகம்பம். கட்டடங்கள் இடிந்து விழுவதால் பெருமளவுக்கு உயிரிழப்புகளும் உடைமை இழப்புகளும் ஏற்படுகின்றன. அத்துடன் சாலைகள், பாலங்கள், கால்வாய்கள், மின்கம்பங்கள் ஆகியவை கடுமையான சேதங்களுக்கு உள்ளாகின்றன. பூமியின் சில வட்டாரங்களில் பூகம்பம் ஏற்படக்கூடிய வாய்ப்பு கூடுதலாக உள்ளது.

புவிக்கோளின் உறுதியற்ற முகடுகளில் இந்த வட்டாரங்கள் அமைந்துள்ளன. நகரும் பாறை அடுக்குகள் இந்த முகட்டுப் பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஜப்பான் போன்ற நாடுகளும் தென்கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளும், துருக்கி, ஈரான், மெக்ஸிகோ உள்ளிட்ட வட்டாரங்களும் கடுமையான பூகம்பங்களால் பாதிக்கப்படுகின்றன. இந்தியாவில் இமயமலையைச் சார்ந்த வட்டாரம் முழுவதும், கங்கைச் சமவெளியின் சில பகுதிகளும் கட்ச், அந்தமான்–நிக்கோபார் தீவுகள் ஆகிய பகுதிகள் பூகம்ப பாதிப்புகள் ஏற்படக்கூடியவை.

**பூகம்பத்தால் ஏற்படக்கூடிய பெரும் பாதிப்புகள் வருமாறு:**

1.1. தரைப் பகுதி குலுங்குவது, நிலப்பரப்பில் சீர்குலைவு ஏற்படுவது:

அழிவுக்கு இதுவே பிரதானமான காரணமாகிறது. இதனால் கட்டடங்கள், பாலங்கள், சாலைகள், கால்வாய்கள் மற்றும் இதர கட்டுமானங்கள் சேதத்திற்கு உள்ளாகின்றன.

1.2. திரவத்தன்மை ஏற்படுத்துதல்

பூகம்பத்தின் காரணமாக மண், வண்டல் மண் ஆகியவை திரவ வடிவத்திற்கு மாறியுள்ளன. கட்டடங்கள் தகர்வதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

1.3. நிலச்சரிவுகள்:

தீவிரமான பூகம்பங்களால் மலைப் பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன.

1.4. தீ:

பூகம்பத்துடன் சேர்ந்த ஒரு பெரும் பாதிப்பாக தீப்பிடித்துக்கொள்வதுண்டு. தரைப் பகுதியிலும் கட்டடங்களிலும் ஏற்படக்கூடிய உராய்வுகள் காரணமாக எரிவாயுக் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு அதனால் தீப்பிடிக்கிறது.

1.5. நிலப் பரப்பில் மாற்றங்கள்:

பூகம்பம் ஏற்படுகிறபோது அந்த வட்டாரத்தில் நிலப் பரப்பின் அமைப்பிலும், நிலத்தடி நீர் நிலையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

1.6. சுனாமி:

இந்த ஜப்பானிய மொழிச் சொல்லுக்கு 'துறைமுக அலைகள்' என்று பொருள். கடல் படுகையில் ஏற்படக்கூடிய பூகம்பங்கள் அல்லது கடலுக்கு அடியில் நிகழக்கூடிய நிலச் சரிவுகள், கடலடி எரிமலை வெடிப்புகள் ஆகிய காரணங்களால் சுனாமி எனும் இந்த மாபெரும் அலைகள் உருவாகின்றன. தண்ணீரில் ஒரு பொருள் விழும்போது ஏற்படக்கூடிய தொடர்ச்சியான அலைகளைப் போல, கடல் படுகையில் பூகம்பத்தால் ஒரு அசைவு ஏற்படுகிறபோது பேரலைகள் உருவாகின்றன.

இந்த அலைகள் கரையை நெருங்க நெருங்க அளவிலும், உயரத்திலும் பல மடங்கு அதிகரிக்கின்றன. 30 மீட்டர் உயரத்திற்கு மேற்பட்ட சுனாமிகள் பதிவாகியுள்ளன. இயற்கைச் சீற்றங்களில் மிகப் பெரிய அளவிற்கு நாசத்தை ஏற்படுத்தக் கூடியது சுனாமி. ஏனெனில், சுனாமியால் மிகப் பெரிய புவிப்பரப்பு பாதிக்கப்படுகிறது. 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமியால் இந்தோனேஷியாவின் சில பகுதிகள், இந்தியாவின் தமிழ்நாடு, அந்தமான்– நிக்கோபார் தீவுகள் ஆகிய பகுதிகளும், ஏன் சோமாலியாவும் கூட பாதிக்கப்பட்டு 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

**1.12. இடர்க்குறைப்புத் திட்டங்கள்:**

2.1. இத்திட்டங்களில் பின்வரும் நடவடிக்கைகள் அடங்கும்:

i. நிலநடுக்கம் குறித்த கல்வி, மக்களை அப்புறப்படுத்துவதற்கான திட்டங்கள்
ii. கட்டுமானம் இடிந்து போனால்கூட காயம் ஏற்படுத்தாத முறையானக் கட்டுமானப் பொருட்களைப் பயன்படுத்துதல்
iii. முறையான கட்டுமான வடிவமைப்பு உள்ள, நிலநடுக்கத்துக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய கட்டிடங்களைக் கட்டுதல்

**1.13. முக்கிய வசதிகளை ஏற்படுத்துதல்:**

இதில் பின்வரும் நடவடிக்கைகள் அடங்கும்:

1. விரைவான நிவாரணப் பணிகளுக்காக நிலநடுக்க முறைமை அமைப்புகளை ஏற்படுத்துதல்
2. நிலநடுக்கத்தால் ஏற்படும் காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக என குறிப்பான மருத்துவ மையங்களை ஏற்படுத்துதல்
3. நிலநடுக்க அபாயம் உள்ள வட்டாரங்களில் தரை வெடிப்புப் பகுதிகளையும், பலவீனமான இடங்களையும் குறித்த வரைபடம் தயாரித்தல்
4. பள்ளிகள், மருத்துவமனைகள், அலுவலகங்கள் போன்ற கட்டிடங்களை நிலநடுக்க வாய்ப்புள்ள வெடிப்புப் பகுதிகளிலிருந்து தொலைவில் தள்ளிக் கட்டுதல்

## 2. வெள்ளம்:

பொதுவாக வறண்ட நிலையில் காணப்படும் நிலப்பரப்பின் பெரும்பகுதி குறிப்பிட்ட சில காலகட்டத்திற்கு நீரில் மூழ்கியிருப்பது வெள்ளம் எனக் குறிப்பிடப்படுகிறது. உலகின் பல பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படக்கூடிய பொதுவான இயற்கைப் பேரிடர்களில் ஒன்றுதான் வெள்ளம்.

குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் ஒரு குறுகிய காலத்திற்குள் பலத்த மழை பெய்வதால் வெள்ளம் ஏற்படுகிறது. இதனால், ஆறுகளிலும் நீரோடைகளிலும் கரை கடந்த நீரோட்டம் ஏற்படுகிறது.
மழைக்காலத்தின்போது இரண்டு முதல் மூன்று மாத காலகட்டத்திற்குள்தான் பெரும்பாலான மழைப்பொழிவு நிகழ்கிறது என்பதால், இக்காலகட்டத்தில்தான் பெரும்பாலான வெள்ள நிலைமைகளும் ஏற்படுகின்றன. மலைப் பகுதிகளில் மேகத்திரட்சியால் ஏற்படும் மழை அல்லது நீரூற்றுகள் பெருக்கெடுப்பது திடீர் வெள்ளம் என குறிப்பிடப்படுகின்றன. இத்தகைய திடீர் வெள்ளத்தின்போது விரைவிலேயே தண்ணீர் வற்றிவிடுகிறது. ஆனால் அதற்கு முன்பாகக் கடுமையான சேதங்களை ஏற்படுத்திவிடுகிறது. பல ஆறுகள் பாயக்கூடிய ஒரு வட்டாரத்தின் சமவெளிப்பகுதிகள்தான் பெரும்பாலும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன.

### 2.1. சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கம்

நிலநடுக்கத்தின்போது அல்லது புயல் தாக்கும்போது ஏற்படக்கூடிய உயிரிழப்புகள் அளவுக்கு வெள்ளத்தின்போது உயிரிழப்பு ஏற்படுவதில்லை என்றபோதிலும், அதனால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் கடுமையானதாக இருக்கின்றன. அதிக நாட்களுக்கு வெள்ளம் நீடிக்குமானால் இந்தப் பிரச்சனை மேலும் தீவிரமாகிறது.

வெள்ளத்தால் உடைமை இழப்பு ஏற்படுவது மட்டுமல்ல, மனித உயிர்களுக்கும் விலங்குகளின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படுவது மட்டுமல்லாமல் பின்வருவன போன்ற வேறு சில பாதிப்புகளும் ஏற்படுகின்றன:

1. வெள்ளத்தால் பல தொற்றுநோய்கள் பரவுகின்றன
2. வேகமான நீரோட்டத்தின் காரணமாக மண்ணரிப்பு ஏற்படுகிறது
3. வன விலங்குகளின் வாழ்விடங்களும் வனங்களும் அழிகின்றன
4. கட்டடங்கள், பாலங்கள், சாலைகள், கழிவுநீர்க் குழாய்கள், மின்சாரக் கம்பிகள் போன்ற மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட கட்டுமானங்கள் சேதமடைகின்றன
5. விளைந்துள்ள பயிர்களுக்கு வெள்ளத்தால் பரவலாக பாதிப்பு ஏற்படுகிறது; விவசாய நிலம் பாழாகிறது
6. வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் உணவுப் பற்றாக்குறை, குடிநீர்த் தட்டுப்பாடு ஆகிய பிரச்சனைகள் ஏற்படுகின்றன

### 2.2. வெள்ளத் தடுப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் பாதிப்புகளைக் குறைத்தல்

வெள்ளம் ஒரு இயற்கைப் பேரிடர்தான் என்றாலும், சில நேரங்களில் தேவையற்ற மனிதச் செயல்பாடுகள் காரணமாக அது தீவிரமடைகிறது. வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கு திட்டமிட்ட நிலப் பயன்பாடு, நேரடியான வெள்ளத் தடுப்புகளைக் கட்டுதல், மனித ஆக்கிரமிப்பைத் தவிர்த்தல், நிவாரணப் பணிகளில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

#### 2.2.1. நிலப் பயன்பாட்டுக்குத் திட்டமிடுதல்

வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் முறையான நிலப் பயன்பாட்டுக்கான திட்டங்களில் பின்வரும் நடவடிக்கைகள் உள்ளடங்கும்:

1. வெள்ளத்தின்போது முதலில் நீரில் மூழ்கக்கூடிய பகுதிகளைப் பிரித்துக் காட்டுதல்

2. வெள்ள பாதிப்புகள் ஏற்படக்கூடிய சமவெளிப் பகுதிகளில் கட்டுமானப் பணிகளும் மனிதர்கள் அதிக அளவுக்குக் குடியேறுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.
3. ஆறு சென்றடையும் பகுதிகளில் (நீர்ப்பிடிப்புப் பகுதிகள்) மண் அரிப்பையும் மிதமிஞ்சிய நீரோட்டத்தையும் கட்டுப்படுத்துவதற்காக காடுகள் வளர்க்கப்பட வேண்டும்.

### 2.2.2. நேரடித் தடைகள் அமைத்தல்:

பின்வருவனவற்றைப் போன்ற சில கட்டுமானங்களை ஏற்படுத்துவதன் மூலம் வெள்ளத்தைத் தவிர்க்கலாம்:

1. மக்கள் அடர்த்தியாக வாழக்கூடிய பகுதிகளில் ஆறுகளின் கரைகளை வலுப்படுத்துதல்
2. வெள்ளத்தின்போது கூடுதல் நீரை சேமிப்பதற்காக அணைகளைக் கட்டுதல்
3. வெள்ள நீரை திசை திருப்பக்கூடிய வாய்க்கால்களைக் கட்டுதல்

### 2.2.3. மனித ஆக்கிரமிப்பைத் தவிர்த்தல்:

பின்வரும் பகுதிகளில் மனித ஆக்கிரமிப்பு தவிர்க்கப்பட வேண்டும்:

1. வெள்ளச் சமவெளிப் பகுதிகள் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள்
2. இதன் மூலம் காடுகள் அழிப்பும் மண் அரிப்பும் கட்டுப்படுத்தப்படும்; இதனால் கூடுதல் நீரோட்டம் தவிர்க்கப்படும்

### 2.2.4. நிவாரணப் பணிகளில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்:

முன்னேறிய தொழில்நுட்பத்தைப் பின்வரும் வழிகளில் பயன்படுத்த முடியும்:

1. வெள்ள அபாயம் குறித்து முன்கூட்டியே அறிவிப்பதற்கும், எச்சரிக்கை விடுப்பதற்கும் முன்னேறிய தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துல்
2. மக்களை விரைவாக அப்புறப்படுத்துதல்
3. தற்காலிக முகாம்களில் நிவாரணம் வழங்குதல்
4. மருந்துகள், குடிநீர், உணவு மற்றும் ஆடைகளை உடனடியாக வழங்குதல்
5. மருந்து தெளித்தல், தடுப்பு மருந்து செலுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துதல்
6. பாதுகாப்பான வட்டாரங்கள் குறித்த வரைபடம் தயாரித்தல்

## 3. வறட்சி:

ஒரு புவிப் பரப்பு வட்டாரத்தில் அசாதாரணமான வறண்ட வானிலை காரணமாக ஏற்படுகிற நிலைமையே வறட்சி என்பதாகும். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் நீண்ட காலத்திற்கு மழை பெய்யாமல் இருப்பது அல்லது போதுமான மழை பெய்யாமலிருப்பது என்பதே வறட்சி நிலை என்று குறிப்பிடப்படுகிறது. வறட்சியின்போது சாதாரணமான அளவைவிட குறைவாக மழை பெய்கிறது. இதனால் நீரின் சமநிலை பாதிக்கப்படுகிறது. அது நீர் பற்றாக்குறைக்கு இட்டுச் செல்கிறது. ஒரு கணிசமான கால கட்டத்திற்கு நீர்ப் பொழிவின் அளவைவிட நீர் ஆவியாவதும், நீர் வெளியேறுவதும் அதிகமாக நிகழும்போது இந்த நிலைமை ஏற்படுகிறது. வறட்சி நிலைமை என்பதை சஹாரா பாலைவனம் அல்லது தார் பாலைவனம் போன்ற இடங்களில் நிலவும் வறண்ட வானிலையோடு

சேர்த்துக் குழப்பிக் கொள்ளக்கூடாது. வறட்சியின்போது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் வழக்கத்துக்கு மாறாக தண்ணீருக்கும், உணவுக்கும் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இந்திய விவசாயிகளில் பலர் இப்போதும் பாசனத்திற்கு மழைநீரையே முற்றிலும் சார்ந்திருக்கின்றனர். அசாதாரணமான வறட்சி நிலை காரணமாக பெருமளவுக்கு பயிரிழப்பு ஏற்படுகிறது. ராஜஸ்தான், மஹாராஷ்டிரா, கர்நாடகம், ஒடிஷா, தமிழ்நாடு, சத்தீஷ்கர் ஆகிய மாநிலங்களின் பல பகுதிகள் வறட்சிக்கு உள்ளாகக்கூடிய முக்கியப் பகுதிகளாக உள்ளன. எனினும், கங்கைச் சமவெளிப் பகுதிகளில்கூட சில நேரங்களில் வறட்சி நிலை ஏற்படுகிறது.

### 3.1. சுற்றுச்சூழல் தாக்கம்:

ஈரப்பதத்தின் பற்றாக்குறையளவு, அது எவ்வளவு காலம் நீடிக்கிறது, அதனால் பாதிக்கப்படும் பகுதியின் பரப்பு ஆகியவற்றின் வறட்சியின் கடுமைத்தன்மை மதிப்பிடப்படுகிறது. வறட்சி நிலை குறுகிய காலத்திற்கு இருக்குமானால் அது வறண்ட வானிலை அல்லது ஓரளவு வறட்சி என்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

வறட்சி நிலை காரணமாக சுற்றுச் சூழல் சம நிலையில் கடுமையான பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவை பின்வருமாறு:

1. நீர் வழங்கக்கூடிய நீர்நிலைகள் காலியாகின்றன. கிணறுகள் வற்றிப் போகின்றன. கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது.
2. நீர்ப்பிடிப்பு குறைந்துபோவதால் நிலத்தடி நீர் அளவு வற்றுகிறது.
3. மண் வளம் குறைகிறது, மண் அரிப்பும் ஏற்படுகிறது. உலர்ந்துபோவதன் காரணமாக சுருக்கம் ஏற்படுவதால் தரையில் வெடிப்புகள் ஏற்படுகின்றன.
4. கடுமையான அளவுக்கு பயிர் பாதிப்புகள் ஏற்படுகின்றன.
5. மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்; ஊட்டச் சத்துக் குறைவதால் நோய்கள் தாக்குகின்றன.
6. வீட்டு விலங்குகள் உட்பட தாவரங்களுக்கும் உயிரினங்ளுக்கும் பரவலாக பாதிப்பு ஏற்படுகிறது.

### 3.2. வறட்சித் தடுப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் பாதிப்பைக் குறைத்தல்:

காற்றோட்டங்கள், காற்றின் திசை போன்ற இயற்கையான பல காரணங்களால் மழை ஏற்படுகிறது. அதேபோல், இயற்கையான காரணங்களால் வறட்சி ஏற்படுகிறது. அது மனிதர்களால் கட்டுப்படுத்தப்படுவதற்கும், தடுக்கப்படுவதற்கும் அப்பாற்பட்டதாகிறது. அதேநேரத்தில், அண்மைக்காலமாக புவிவெப்பம் காரணமாகவும் மழைப்பொழிவின் தன்மை மாறுபட்டிருக்கக்கூடும். இன்றைய நவீன காலகட்டத்தில் செயற்கைக்கோளைப் பயன்படுத்துவதன் மூலம், குறிப்பிட்ட வட்டாரத்தில் நிகழக்கூடிய பருவ நிலை மாற்றத்தை நம்மால் முன்கூட்டியே கணிக்க முடியும். சிறந்த நீர் சேமிப்புத் தொழில்நுட்பங்கள் மூலம் வறட்சி போன்ற நிலைமைகளை சமாளிக்க முடியும். வறட்சிக்கு உள்ளாகக்கூடிய பகுதிகளில், நீர் நிலை நிர்வாகம், முறையான விவசாயத் தொழில் நுட்பங்கள், பல்வேறு அமைப்புகள் மூலம் நிவாரணம் போன்ற சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

### 3.3. நீர்நிலை நிர்வாகம்:

நீர்நிலை நிர்வாகம் என்பதில் பின்வரும் நடவடிக்கைகள் உள்ளடங்கும்:

1. மழைநீர் சேகரிப்பு, தடுப்பணை கட்டுதல், வரப்புகள் கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நீர்ப் பராமரிப்பு

2. அவசரகால நீர் விநியோகத்தை உறுதிப்படுத்த அணைகள் கட்டுதல்

### 3.4. முறையான தொழில்நுட்பங்கள்:

1. முறையான விவசாயத் தொழில்நுட்பங்களில் பின்வருவன அடங்கும்:
2. வறட்சி நிலைக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய பயிர்களை அதிகமாகப் பயிரிடுதல்
3. நீரின் பயன்பாட்டைக் குறைக்கக்கூடிய சொட்டுநீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற முறையான பாசனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்
4. அளவுக்கு மீறிய பயிரிடுதலும், அளவுக்கு மீறிய மேய்ச்சலும் தவிர்க்கப்பட வேண்டும்

### 3.5.நிவாரண நடவடிக்கைகள்:

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பின்வரும் வடிவங்களில் உடனடி நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்:

1. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் “வேலைக்கு உணவு” போன்ற வேலை வாய்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்
2. வீட்டு விலங்குகளுக்காக கால்நடைத் தீவனங்கள் வழங்கப்படுதல்

## 4. புயல்

வடக்கு அரைக்கோளப் பகுதியில் உருவாகிற, குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஏற்படக்கூடிய, கடிகாரச் சுற்றுக்கு எதிர்ச்சுற்றுத் திசையில் வீசக்கூடிய காற்றால் சூழப்பட்ட பகுதியே புயல் எனப்படுகிறது. பொதுவான சொல்லாட்சியில், புயல் என்பதை ஒரு மாபெரும் சூறாவளிச் சுழற்சி அமைப்பு எனலாம். புயலின்போது காற்று வேகம் மணிக்கு 119 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும். கடல் பகுதியிலும், பெருங்கடல் பகுதியிலும் உருவாகிற புயல்கள் மிக வேகமாக நிலத்தை நோக்கி நகர்கின்றன.

### 4.1. சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கம்:

1. கடலோரத்தில் அமைந்த தாழ்வான பகுதிகள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றன
2. பாதிக்கப்பட்ட பகுதிகள் மழைநீரிலும், கடல்நீரிலும் மூழ்குகின்றன
3. அத்துடன் மிக அதிவேகக் காற்றும் சேர்ந்துகொள்வதால் அழிவும் அதிகரிக்கிறது
4. மரங்கள் வேரோடு சாய்தல், கூரைகள் பிய்த்துக்கொள்ளுதல், பயிர்கள் மூழ்குதல்,
5. மனிதர்களுக்கு காயங்களும், மரணங்களும் ஏற்படுதல்
6. புயல்காற்றின்போது பல கப்பல்கள் சேதமடைகின்றன
7. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வறுமை தாக்குகிறது, தொற்றுநோய்களும் இதர நோய்களும் பரவுகின்றன

### 4.2. புயல் தடுப்பு, கட்டுப்படுத்துதல், பாதிப்பைக் குறைத்தல்:

புயல் ஏற்படுவது ஒரு இயற்கையான நிகழ்வு. அதனை மனிதர்களால் கட்டுப்படுத்த இயலாது, எனவே அதைத் தடுக்கவும் முடியாது. ஆயினும், புவி வெப்பம் அதிகரித்து வருவதால் புயல்கள் ஏற்படுவதும் அதிகரிக்கக் கூடும் என்ற கருத்தை சில அறிவியலாளர்கள் முன்வைத்துள்ளனர். முன்னேறிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், இடர்க் குறைப்பு முன்முயற்சிகள், நிவாரண நடவடிக்கைகள் போன்ற சில பயனுள்ள கொள்கை நடவடிக்கைகள் மூலமாகவே புயலின் நாசகரமான விளைவுகளைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவும் முடியும்.

**4.3. முன்னேறிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்:**

புயல்கள் உருவாவதை செயற்கைக் கோள்களால் முன்கூட்டியே தெளிவாகக் கூற முடியும் கடலோரப் பகுதிகளில் எச்சரிக்கை அமைப்புகளில் செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்த முடியும்.

**4.4. இடர்க்குறைப்பு முன்முயற்சிகள்:**

- புயலின் திசையையும், அது தீவிரமடைவதையும் முன்கூட்டியே கண்டறிந்து சொல்லக்கூடிய அமைப்புகளை முன்னதாகவே ஏற்படுத்துதல்
- புயல்கள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே அதிகரித்தல்
- பயிற்சி அளிப்பதன் மூலம் புயல் எச்சரிக்கைக்கு ஏற்ப மக்கள் செயல்படுவதை அதிகரித்தல்
- புயல் பாதிக்கக்கூடிய பகுதிகளில் நிலத்தடி தங்குமிடங்களை ஏற்படுத்துதல்

**4.5. நிவாரண நடவடிக்கைகள்:**

- மருந்துகள், உணவு, ஆடைகள் போன்ற நிவாரணங்களை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து வழங்குதல்
- புயலோடு சேர்ந்து வழக்கமாக மழையும் பெய்யக்கூடும் என்பதால் நீர் சார்ந்த தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுத்தல்

# 5. நிலச்சரிவுகள்

புவி ஈர்ப்பு விசையின் காரணமாக பாறைகள் அல்லது அடர்த்தியான மண் கீழ்நோக்கி விரைவாகச் சரிவடைவதே நிலச்சரிவு எனப்படுகிறது. கீழ்நோக்கி மண் சரிவடைகிறபோது அதனை மண் சரிவு என்றும், பாறைகள் மற்றும் கரடுமுரடான பொருள்கள் சரிவடைவதை இடிபாட்டுச் சரிவு என்றும் கூறலாம். மழை நீரோ, பனி உருகுவதால் உருவாகும் நீரோ சரிவான நிலத்தில் வழிந்தோடி, களிமண் போன்ற தளர்வான உறுதியற்ற தளத்தை எதிர்கொள்கிறபோது நிலச்சரிவு ஏற்படுகிறது.

நிலச்சரிவுகள் பெரும்பாலும் உறுதியற்ற மலைப்பகுதிகளிலும் மழைநீர் அல்லது பனி உருகிய நீர் மண் வழியாகவும், பாறை வழியாகவும் வழிந்தோடுகிறபோது நிலச்சரிவு ஏற்படுகிறது. இதனால், மலைச்சரிவுப் பாதைகளில் மண்ணும் பாறையும் சரிந்து விழுகின்றன. காடுகள் அழிக்கப்படுவதாலும், உறுதியற்ற சரிவுப் பகுதிகளில் மனித ஆக்கிரமிப்புகளாலும் இது மேலும் நிகழ்கிறது. நமது நாட்டில் மலைப்பகுதிகள் எல்லாமே, நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகள்தான்.

**5.1. நிலச்சரிவுக்குக் காரணமான முக்கிய அம்சங்கள் வருமாறு:**

- மலைச்சரிவின் உறுதித்தன்மை
- மண் அல்லது பாறையின் வகை
- தாவரங்களின் வகை
- நிலத்தடி நீர் மற்றும் நீர்ப்பிடிப்பின் தன்மை
- நீரூற்றுகள் போன்றவை இருக்கும் நிலை

**5.2. பனிச்சரிவு:**

மலையின் சரிவான இடத்தில் பெருமளவுக்கு பனி, பனிக்கட்டி, பாறைப் பொருள்கள் கீழே விழுகிற நிலச்சரிவுதான் பனிச்சரிவு என்று குறிப்பிடப்படுகிறது. புதிய பனிப்பொழிவு அதிகமாக ஏற்பட்டு அதனால், கூடுதல் பழுது ஏற்படுவதன் காரணமாக பனித்திரட்சியும் பனிக்கட்டியும் வேகமாக கீழ்நோக்கி நகர்கிறபோது பனிச்சரிவு ஏற்படுகிறது. பனி அமைப்பில் இது உள்

மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இதனால் பலவீனப் பகுதிகள் உருவாகி, அத்துடன் பிளவுகளும் ஏற்படுகின்றன.

**5.3. சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கம்:**

நிலச்சரிவுகள் குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்த நிகழ்வுகளே என்றாலும்கூட, அவை உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்படுகின்றன. பொதுவாக மலைப்பகுதிகளில் நிலச்சரிவுகள் நிகழ்கின்றன. இந்தியாவில் இமயமலைப் பகுதிகள் குறிப்பாக நிலச்சரிவுக்கு உள்ளாகக்கூடியவையாக உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் நிலச்சரிவு ஏற்படுகிறது. குறிப்பாக, பருவமழைக் காலத்தில் ஏற்படும் இந்த நிலச்சரிவுகள் உயிருக்கும் உடமைக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, 1999ல் திபெத்தில் மானசரோவர் புனிதப் பயணம் மேற்கொண்ட பலர், குமாவுன் மலைப் பகுதியின் மால்பா வட்டாரத்தில் ஏற்பட்ட நிலச்சரிவால் உயிரிழந்தார்கள்.

**5.4. நிலச்சரிவால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கம் பின்வரும் வடிவங்களில் வெளிப்படுகிறது:**

- மரங்கள் வேரோடு சாய்கின்றன, மண் சரிவடைகிறது.
- கட்டடங்களும் குடியிருப்புகளும் புதைந்து போகின்றன.
- பயிர்களும் தாவரங்களும் சேதமடைகின்றன.
- மலைப்பகுதிகளில் அடிக்கடி சாலைத் தடைகள் ஏற்படுகின்றன.
- மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் காயம் ஏற்படுகிறது, மரணமும் நிகழ்கிறது.

**5.5. நிலச்சரிவு தடுப்பு, கட்டுப்படுத்துதல், இடர்க் குறைப்பு:**

நிலச்சரிவுகள் ஒரு இயற்கையான நிகழ்வுதான், மனிதர்களின் குறுக்கீடு இல்லாமலே நிகழக்கூடியவைதான் என்றாலும் கூட, காடுகள் அழிப்பு, சுரங்கம் தோண்டுதல் போன்ற சில மனிதச் செயல்பாடுகளும் நிலச்சரிவுகளுக்குக் காரணமாகக் கூடும். சரிவான பகுதிகளில் முட்டுக்கொடுக்கும் ஏற்பாடுகள், மனித ஆக்கிரமிப்பைக் குறைத்தல் போன்ற சில நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நிலச்சரிவுகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.

**5.6. முட்டுக்கொடுக்கும் ஏற்பாடு:**

1. கான்கிரீட், கம்பிக் கூண்டுகளுக்குள் கற்களை நிரப்புதல், மரப் பலகைகள், இரும்பு விட்டங்கள் போன்றவற்றின் மூலம் சுவர்களை எழுப்புதல்.
2. சரிவுப் பகுதி மண்ணில் நீர் ஊடுருவுவதைத் தவிர்ப்பதற்காக நீர்க்கசிவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

**5.7. மனித ஆக்கிரமிப்பைக் குறைத்தல்**

1. மலை சார்ந்த உறுதியற்ற பகுதிகளில் கனிமச் சுரங்க நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும்
2. உறுதியற்ற மலைச் சரிவுகளில் மரங்களை நடும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்
3. உறுதியற்ற சரிவுப் பகுதிகளில் கட்டடங்கள், சாலைகள், விவசாயம், மேய்ச்சல் போன்ற மனித ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும்.

## ii. மனிதர்களால் ஏற்படும் பேரிடர்கள் பிரதானமாக இரண்டு வகைப்படும்:

**உள்ளூர்ப் பேரிடர்கள்:**

இவை ரயில் விபத்துகள், விமான விபத்துகள் மற்றும் கப்பல் மூழ்குதல் போன்ற சிறிய அளவிலான இடர்களாகும்.

## தொழிற்சாலை மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பேரிடர்கள்

இவை பெரிய அளவிலான இடர்களாகும். தொழில்நுட்பம் சார்ந்த தோல்விகள் அல்லது தொழிற்சாலை விபத்துகள் ஆகிய காரணங்களால் இந்த இடர்கள் ஏற்படுகின்றன. இத்தகைய இடர்கள் உள்ளூர் மக்களையும் பாதிக்கின்றன, விரிவான பகுதிகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. நீர் அல்லது காற்றை மாசுபடுத்தக்கூடிய பொருள்கள் தற்செயலாகக் கசிவதால் தொழிற்சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. பெரும்பாலான வேதிப்பொருள்கள் நச்சுப் பொருள்களாகவும், புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியவையாகவும் உள்ளன. இவை மனிதர்களை மிக மோசமான முறையில் பாதிக்கின்றன. சிலர் உடனடியாக உயிரிழக்கிறார்கள், மற்றவர்கள் பார்வையிழப்பு, பக்கவாதம் மற்றும் வேறுபல நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டு வாழ்க்கை முழுவதுமே முடக்கப்படுகிறார்கள்.

**சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கம்**

தொழிற்சாலையிலிருந்து நச்சு வேதிப்பொருள்கள் கசிவதாலும், அணுஉலைகளில் ஏற்படும் விபத்துகளாலும் ஏற்படும் பாதிப்புகள் சுற்றுச்சூழலிலும் மனிதர்களின் உடல்நலத்திலும் குறுகிய காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. மரணங்களும், பார்வையிழப்பு, புற்றுநோய், பக்கவாதம், இதய நோய்கள், குடல்நோய்கள், சுவாசக் கோளாறுகள் போன்ற நோய்களும், மனிதர்களின் உடல்நலம் சார்ந்த பாதிப்புகளாகும். மனிதர்களின் உடல்களிலும் அவர்களது எதிர்காலத் தலைமுறைகளிடமும் மரபணு சார்ந்த பாதிப்புகள் நீண்ட கால விளைவுகளாகும். மண்ணிலும், நீரிலும் ஏற்படும் பாதிப்புகள் கூட நீண்ட காலத்திற்கு நீடிக்கின்றன.

**மனிதப் பேரிடர்களைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், பாதிப்புகளைக் குறைத்தல்:**

பின்வரும் நடவடிக்கைகளின் மூலமாக மனிதத் தவறுகளால் ஏற்படும் இடர்களைப் பெருமளவுக்குக் குறைக்க முடியும்:

i. பேரழிவு ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலைகளில் பணிபுரிவோர்க்கு முறையான பயிற்சிகளை வழங்குதல்
ii. முறையான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான அக்கறைகள்
iii. பேரழிவு ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலைகளைச் சுற்றி மனித ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துதல்
iv. விபத்துகள் ஏற்படும்போது மேற்கொள்ள வேண்டிய முதலுதவி முறைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
v. வாயுக்கசிவு ஏற்படும்போது வாயிலும், மூக்கிலும் ஈரத்துணி கட்டிக்கொள்வது உடல்நிலை சீர்கேடுகள் ஏற்படுவதைக் குறைக்கும்.
vi. கதிர்வீச்சு விபத்துகள் ஏற்படும்போது கதவுகளை மூடிக்கொண்டு உள்ளே இருத்தல்
vii. சில நிலைமைகளின்போது, மக்களுக்கு அவர்களது ஆயுட்காலம் முழுவதும் முறையான மருத்துவ கவனிப்புகளை வணங்குதல்
viii. பாதிக்கப்படும் மக்களுக்கு நிதியுதவி மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய வழிகளில் போதுமான இழப்பீடு வழங்குதல்.

# 3. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்விச் சட்டம் 2009, விதிகள் 2011 மற்றும் அரசாணைகளில் குழந்தைகளுக்கான உரிமைகள்

## I. பொதுவான உரிமைகள்

1. **இலவசக் கல்விக்கான உரிமை** : அரசுப்பள்ளி அல்லது உதவிபெறும் பள்ளி எதுவும், அந்தப்பள்ளியில் வகுப்பு அல்லது படிப்புப் பிரிவு எதற்கும் மாணவர்களைச் சேர்ப்பதற்காக அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்குக் கூடுதலாகக் கட்டணம் எதுவும் வசூலிக்கக்கூடாது. [S3(2)] மேலும் இலவசப் பாடபுத்தகங்கள், சீருடைகள் மற்றும் எழுதுபொருட்கள் பெற உரிமையுடையவர்கள் ஆவர்.

2. **அருகாமைப்பள்ளிகளில் பயில்வதற்கான உரிமை :**

   6 முதல் 14 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு அருகாமைப் பள்ளியில் தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவசமாக, கட்டாயமாகக் கல்வி பெறுவதற்கு உரிமை உண்டு. [S3(1)] முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள குழந்தைகள் படிக்கும் பள்ளிகள் அவர்கள் வீட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் அமைய வேண்டும். [R4(a)]. ஐந்தாம் வகுப்பு முதல் ஆறாம் வகுப்பு வரையுள்ள குழந்தைகள் படிக்கும் பள்ளிகள் அவர்கள் வீட்டிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அமைய வேண்டும். [R4(b)].

3. **பள்ளியில் சேர்க்கப்படாத குழந்தைகள் அல்லது தொடக்கக் கல்வியை முடிக்காத குழந்தைகளுக்கான சிறப்பு உரிமைகள்**

   6 வயதுக்கு மேற்பட்ட ஒரு குழந்தை எந்தவொரு பள்ளியிலும் சேர்க்கப்படவில்லை என்றால் அல்லது சேர்க்கப்பட்டிருந்தாலும் தனது தொடக்கக் கல்வியை முடிக்க இயலவில்லையென்றால் அந்தக் குழந்தை அதன் வயதுக்குப் பொருத்தமான வகுப்பில் சேர்க்கப்படும். அதேபோல், தனது வயதுக்கு பொருத்தமான வகுப்பில் நேரடியாக சேர்த்துக் கொள்ளப்படும் ஒரு குழந்தைக்கு, மற்றவர்களுக்கு இணையாக இருப்பதற்காக, குறிப்பிட்ட கால அளவுகளில், குறிப்பிட்ட வகையில் வகுத்துரைக்கப்படுகிற சிறப்புப் பயிற்சியை பெறுகிற உரிமை உண்டு. மேலும், ஒரு தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்படும் ஒரு குழந்தைக்கு 14 வயதுக்குப் பிறகும் கூட தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் இலவசமாக கல்வி பெறும் உரிமை உண்டு. [S4] சிறப்பு பயிற்சி தேவைப்படும் குழந்தைகளை பள்ளி நிர்வாகக்குழு அடையாளம் கண்டு பயிற்சி அளிக்க வேண்டும். இந்தப் பயிற்சி குறைந்தது 3 மாதம் முதல் 2 வருடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். [R3(1)]

4. **வேறு பள்ளிக்கு மாறுவதற்கான உரிமை: 5. (1)** தொடக்கக் கல்வியை முடிப்பதற்கு வழியில்லாத, ஒரு பள்ளியில் பயிலும் ஒரு குழந்தைக்கு தனது தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக வேறு பள்ளிக்கு மாற்றக் கோரும் உரிமை உண்டு. [S5(1)]. தனது தொடக்கக் கல்வியை முடிப்பதற்காக ஒரு மாநிலத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ ஒரு பள்ளியில் இருந்து வேறொரு பள்ளிக்கு மாறவேண்டிய அவசியம் உள்ள ஒரு குழந்தைக்கு எந்தவொரு பள்ளிக்கும் தன்னை மாற்றுமாறு கோர உரிமை உண்டு. [S5(2)]. மேலும் மாற்றுச் சான்றிதழ் வழங்குவதை தாமதப்படுத்தும் பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பொறுப்பாளர் பொருத்தமான பணி விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார். [S5(3)]

5. குழந்தை அச்சமின்றியும் மன உலைச்சல் இன்றியும் பதட்டமின்றியும் பயில மற்றும் தன் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த உரிமை உண்டு [S29(1)(g)]

6. தொடக்கக் கல்வியை முடிக்கும் வரையில் எந்தவொரு குழந்தையும் எந்தவொரு வாரிய (போர்டு) தேர்வையும் எழுதி தேர்ச்சி அடைய வேண்டிய அவசியமில்லை. [S30(1)]

**7. பள்ளி முன்பருவ கல்வி பெறுவதற்கான உரிமை [S 11)]**

3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை தொடக்க கல்வி பெற தயார்ப்படுத்துவதற்காகவும் 6 வயது நிறைவடையும் வரையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்க நிலை குழந்தைப்பருவ கவனிப்பு மற்றும் கல்வி கிடைக்கச் செய்வதற்காகவும் உரிய அரசாங்கம் இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பள்ளிக்கு முந்தைய கல்வி வழங்குவதற்கு அவசியமான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

**8. கல்வி கட்டணம் மற்றும் தேர்வு நடைமுறையின்றி பள்ளியில் சேருவதற்கான உரிமை [S 13 (1)]**

எந்தப் பள்ளியும் ஒரு குழந்தையை சேர்க்கும் பொழுது அதன் பெற்றோர் அல்லது பாதுகாப்பளரிடமிருந்து எந்த ஒரு கல்விக் கட்டணமும் வசூலிக்ககூடாது, குழந்தையை எந்தவொரு தெரிவு செய்யும் நடைமுறைக்கும் உட்படுத்தக் கூடாது.

**9. வயதுச் சான்று இன்றி பள்ளியில் சேர்க்கப்படும் உரிமை**

வயது சான்றிதழ் இல்லாத காரணத்திற்காக எந்தவொரு குழந்தைக்கும் பள்ளிச் சேர்க்கை அனுமதி மறுக்கப்படக் கூடாது. [S 14 (2)]

கல்வி ஆண்டு தொடங்கும் போது அல்லது வகுத்துரைக்கப்படும் கால நீட்டிப்புக்குள் ஒரு குழந்தை பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும். நீட்டிக்கப்பட்ட காலத்தையொட்டி பள்ளியில் சேர்ப்பதற்கு விண்ணப்பிக்கப்படுமானால் எந்தவொரு குழந்தைக்கும் சேர்க்கை அனுமதி மறுக்கப்படமாட்டாது. [S 15] மேலும் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு பின் சேர்க்கப்படும் எந்தவொரு குழந்தையும், உரிய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படும் முறையில் கல்வி முடிக்கலாம்.

**10. ஒரே வகுப்பில் இருக்க வைத்தல் மற்றும் பள்ளியை விட்டு வெளியேற்றுவதற்குத் தடை [S 16]**

ஒரு பள்ளியில் சேர்க்கப்படும் எந்தவொரு குழந்தையும் தொடக்கக் கல்வி முடியும் வரையில் எந்தவொரு வகுப்பிலும் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்படக் கூடாது, பள்ளியிலிருந்து வெளியேற்றப்படவும் கூடாது.

**11. உடல் ரீதியான தண்டனை அல்லது மன ரீதியான துன்புறுத்தல்கள் இன்றி கல்வி கற்கும் உரிமை**

எந்தவொரு குழந்தையும் உடல் ரீதியான தண்டனைக்கோ மன ரீதியான துன்புறுத்தலுக்கோ உள்ளாக்கப்படக் கூடாது. [S 17 (1)]

**12. மாற்றுத்திறனுள்ள குழந்தைக்கான உரிமை:**

ஊனமுற்றோர் சட்டம் 1996 (சம வாய்ப்புகள், பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒரு குழந்தை ஊனமுற்றிருக்குமானால் அக்குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்கக் கல்வி பெறுகிற உரிமை உண்டு. [S3(2)] மாற்றுத்திறன் உள்ள குழந்தைகளுக்கான உரிய சிறப்பு கற்கைச் சாதனங்கள், கையேடுகள் அவசியமான கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்க வேண்டும். [R4(6)].

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல இயலாத போது அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பு அவர்கள் பள்ளிக்கு சென்று தொடக்கக் கல்வியை முடிக்கும் வகையில் தகுந்த மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்து தர வேண்டும். [R4(6)].

**13. நலிந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவுகளை சேர்ந்த குழந்தைகளுக்கான உரிமை**

- **பாகுபாடின்றி கல்வி பயிலும் உரிமை [S8 (c)]** :நலிந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் தங்கள் தொடக்கக்கல்வியை பயில்வதற்கும் மற்றும் அதனை நிறைவு செய்வதற்கு எதிராக எவ்வித பாகுபாடும் காட்டப்படாமல் இருப்பதையும் மற்றும் தடுக்கப்படாமல் இருப்பதையும் உரிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.
- சமூக மற்றும் கலாச்சார காரணக் கூறுகளின் பேரில் குழந்தைகள் பள்ளியினை அணுகுவது தடைபடாமல் இருப்பதற்கான உரிமை. [R 5 (7)]
- வகுப்பறையில் மற்றக் குழந்தைகளிடமிருந்து தனித்து வைப்பது அல்லது மற்றக் குழந்தைகளிடமிருந்து வேறுபட்ட நேரத்தில் கல்வி பயிலச் செய்யாமலிருக்க உரிமை உண்டு. [R 8 (1)]

- **25 விழுக்காடு தனியார் பள்ளிகளில் கல்வி பயிலும் உரிமை [S 12 (c)] :** முதல் வகுப்பில் குறைந்தது 25 விழுக்காடு குழந்தைகளை அருகமை பகுதிகளிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவுகளை சேர்ந்த குழந்தைகளுக்காக சேர்த்து அவர்களுக்கு தொடக்கக் கல்வியை வழங்க வேண்டும். மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பள்ளி, பள்ளி முன்பருவக் கல்வி வழங்குமானால், அப்படிப்பட்ட பள்ளிக்கு முன்பருவக் கல்விக்காக குழந்தைகளை சேர்த்துக் கொள்வது என்பதற்கும் மேற்குறிப்பிடப்பட்ட விதிகள் பொருந்தும்.

**II. பள்ளி மேலாண்மைக் குழு** [S 21(1)] , [R14]

- அரசு உதவி பெறாத பள்ளிகளில் உள்ளாட்சி நிர்வாகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்ட பள்ளி நிர்வாகக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.
- தனது நிர்வாகப் பகுதிக்குள்ளாகச் செயல்படும் வகையில் விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்ட 6 மாதங்களுக்குள்ளாக அமைக்கப்படும் இக்குழு ஒவ்வொரு இரண்டாண்டுக்கு ஒரு முறை மாற்றி அமைக்கப்பட வேண்டும். நிர்வாகம் சார்ந்த உறுப்பினர்களைத் தவிர்த்து ஏனைய குழு உறுப்பினர்கள் இரண்டு முறைக்கு மேல் செயல்படக் கூடாது.
- இக்குழு உறுப்பினர்களில் 75 விழுக்காட்டினர் குழந்தைகளின் பெற்றோர்/காப்பாளர்களாக, இருக்க வேண்டும். இக்குழுவில் நலிவுற்ற குழந்தைகளின் பெற்றோர்/காப்பாளர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்படல் வேண்டும்.
- மீதமுள்ள 25 சதவீத உறுப்பினர்கள் கீழ்க்கண்ட தரப்பினராக இருக்க வேண்டும்.

  1) மூன்றில் ஒரு பகுதியினர் உள்ளூர் நிர்வாகத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். இதை உள்ளூர் நிர்வாகம் முடிவு செய்யலாம்.
  2) மூன்றில் ஒரு பகுதியினர் பள்ளி ஆசிரியர்களாக இருக்க வேண்டும். அவர்கள் யார் என்பதை பள்ளி ஆசிரியர்களே முடிவு செய்ய வேண்டு.
  3) மீதமுள்ள ஒரு பகுதியினர் உள்ளூர் கல்வியாளர்கள், பள்ளிக் குழந்தைகள் இருக்க வேண்டும். இவர்களை குழுவில் உள்ள பெற்றோர்களே முடிவு செய்ய வேண்டும்.
- 50 விழுக்காடு உறுப்பினர்கள் பெண்களாக இருக்க வேண்டும்.
- நிர்வாகக் குழு கூடுவதற்கு 50 சதவீதத்திற்கு குறைவில்லா உறுப்பினர்கள் வருகை தந்திருக்க வேண்டும்.
- அனைத்து நடவடிக்கைகளையும், மேற்பார்வையிடுவதற்காக, உறுப்பினர்களாக உள்ள பெற்றோர்களே தங்களுக்குள் இருந்து தலைவர் மற்றும் துணைத் தலைவரைப் பள்ளி நிர்வாகக் குழுவுக்குத் தேர்வு செய்ய வேண்டும். பள்ளியின் தலைமையாசிரியர், அல்லது தலைமையாசிரியர் இல்லா சூழலில் பள்ளியின் மூத்த ஆசிரியர், குழுவின் பொறுப்பாளராகவும் வெளி உறுப்பினராகவும் செயல்படுவார். அரசு உதவி பெறும்


பள்ளிகளில் பள்ளி மேலாளர், தாளாளர், செயலளர் அல்லது இவர்களது பிரதிநிதி இக்குழுவிற்கு தலைமையேற்பார்.

- இரு மாதத்திற்கு ஒரு முறையாவது இக்குழுவின் கூட்டம் நடைபெற வேண்டும். கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் முறையாகப் பதிவு செய்யப்பட்டு, அவை பொதுமக்கள் பார்வைக்கு முன் வைக்கப்பட வேண்டும்.
- இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் இக்குழுக் கூட்டத்தின் சிறப்பு அழைப்பாளர்களாக மூன்று பேருக்கு அதிகமானோரை அழைக்கக்கூடாது இச்சிறப்பு அழைப்பாளர்கள் குழுந்தைகளின் பாதுகாப்பு ஆரோக்கியம், ஊட்டச்சத்து, குழுந்தைகள் உளவியல், போன்ற துறைகளில் அனுபவம் மிக்கவர்களாக இருப்பது அவசியம், ஆலோசனை தருபவர்களாகவும் இருப்பர். கூட்டத்தின் குறைந்த பட்ச எண்ணிக்கைக்கு இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவரே தவிர, வாக்களிக்கும் உரிமை இவர்களுக்கு இல்லை.

**பள்ளி மேலாண்மைக் குழுவின் பணிகள்: [S 21(2)]**

1. ஆசிரியர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல். மாணவர்களின் கற்றல் திறனை அளவிடுதல் மற்றும் கூடுதல் பள்ளிக்கு ஏற்பாடு செய்தல்.
2. குழுந்தைகளின் தொடர்ச்சியான வருகையை உறுதி செய்தல். குழந்தைகளுக்கு உடல், மனரீதியான வன்முறைகள் நடந்தால், பள்ளிச் சேர்க்கை மறுப்பு, விளையாட்டுப் பொருட்களை உரிய நேரத்தில் வழங்காமை ஆகியவை உள்ளாட்சி நிர்வாகத்தின் பார்வைக்குக் கொண்டு செல்லுதல்.
3. மக்களுக்குக் கல்வி உரிமைச் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை எடுத்துக் கூறுதல். சட்டம் வரையறுத்துள்ளபடி தொடக்கக் கல்வி முடிக்கும் வரை எந்தவிதக் கட்டணமும் வசூலிக்க கூடாது என்பது உறுதி செய்ய வேண்டும்.
4. ஆறு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு உரிய வகுப்பில் சேர்வதற்கும், சிறப்பு பயிற்சிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். வாய்ப்பற்ற மற்றும் நலிந்த பிரிவைச் சார்ந்த குழந்தைகளை அடையாளம் கண்டுபிடித்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். குறிப்பாக மாற்றுத் திறனுடைய குழந்தைகள் முழுமையாக தொடக்கக் கல்வி பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
5. மதிய உணவுத் திட்டத்தைக் கண்காணிக்க வேண்டும். ஆசிரியர்கள் தனிப் பயிற்சி அளிக்காமலிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
6. ஒவ்வொரு ஆண்டும் பள்ளி வளர்ச்சி திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். ஆசிரியர்கள் சட்டம் வரையறுத்த பணிகளன்றி வேறு பணிகள் செய்வதை கண்காணி வேண்டும்.
7. கல்வி உரிமைச் சட்டத்தின் படி, பள்ளியின் தேவைகளின் அடிப்படையில் நிதி தேவையைத் திட்டமிடல்.
8. ஒவ்வொரு ஆண்டும் நிதி ஆண்டின் இறுதிக்குள் தலைவர், துணைத் தலைவர், தலைமையாசிரியர் என் மூவரும் கையொப்பமிட்டு உள்ளாட்சி நிர்வாகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
9. ஆண்டு செலவின அறிக்கை மற்றும் உரிய ரசீதுகளை முறையாகத் தயார் செய்ய வேண்டும்.
10. ஆண்டு செலவின அறிக்கையில் தலைவர், துணைத்தலைவர், தலைமையாசிரியரின் கையொப்பம் இடவேண்டும்.

# பள்ளி நிர்வாகக் குழு குறித்த தமிழக அரசின் ஆணை எண்–213 தேதி : 26.12.2011



**III. உள்ளாட்சி நிர்வாகத்தின் கடமை [S(9)]**

ஒவ்வொரு உள்ளாட்சி நிர்வாகமும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்;

(a) ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச மற்றும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்க வேண்டும்.

(b) பிரிவு 6ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு அருகமைப் பள்ளி உள்ளதை உரிய அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

(c) நலிந்த பிரிவு மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த குழந்தைகள் தங்கள் தொடக்கக்கல்வியை பயில்வதற்கும் மற்றும் அதனை படித்து முடிப்பதற்கு எதிராக எவ்வித பாகுபாடு காட்டப்படாமல் இருப்பதையும் மற்றும் தடுக்கப்படாமல் இருப்பதையும் உரிய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

(d) அப்பகுதியில் வசிக்கும் 14 வயது வரை உள்ள குழந்தைகள் பற்றிய ஆவணங்களைப் பராமரிக்க வேண்டும்.

(e) ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து வருகை தந்து தொடக்கக் கல்வியை முடிப்பதை உறுதிப்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் வேண்டும்.

(f) பள்ளிக் கட்டிடம், ஆசிரியப் பணியாளர்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் உள்ளிட்ட உள்கட்டுமானங்களை வழங்க வேண்டும்.

(g) பிரிவு 4ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி சிறப்பு பயிற்சிகான வசதிகளை வழங்க வேண்டும்.

(h) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் தரங்களின் படி நல்ல மற்றும் தரமான தொடக்கக் கல்வியினை உறுதிப்படுத்த வேண்டும்.

(i) தொடக்கக் கல்விக்கான கலைத்திட்டத் தொகுதியினை உரிய காலத்தில் வகுக்கபடுவதையும் பாட வகுப்புகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

(j) ஆசிரியர்கள் பயிற்சிகான வசதிகளை வழங்க வேண்டும்

(k) புலம் பெயர்ந்த குடும்பங்களின் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

(l) பள்ளியின் செயல்பாட்டினை கண்காணிப்பு செய்ய வேண்டும்.

(m) கல்வியாண்டிற்கான குறிப்பேட்டினை தீர்மானிக்க வேண்டும்.

**பள்ளி மேலாண்மைக் குழுவில் பங்கேற்பது**

பள்ளிகள் அல்லது ஒரு பள்ளி, உள்ளாட்சி நிர்வாகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அப்படிப்பட்ட பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்ட பள்ளி மேலாண்மைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். [S 21(1)]

## IV. பள்ளிக்கான நடைமுறைகளும் தரங்களும் – சரிபார்ப்பு பட்டியல்

<table>
<tr><th>வரிசை எண்.</th><th>பொருள்</th><th>நடைமுறைகளும் தரங்களும்</th></tr>
<tr><td>1.</td><td>ஆசிரியர்களின் எண்ணிக்கை<br><br>(a) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை<br><br><br>(b) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை</td><td>
<table>
<tr><th>சேர்க்கப்பட்ட குழந்தைகள்</th><th>ஆசிரியர்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>அறுபது வரை</td><td>இரண்டு</td></tr>
<tr><td>அறுபத்து ஒன்று முதல் தொண்ணூறு வரை</td><td>மூன்று</td></tr>
<tr><td>தொண்ணூற்று ஒன்று முதல் நூற்று இருபது வரை</td><td>நான்கு</td></tr>
<tr><td>நூற்று இருபத்து ஒன்று முதல் இருநூறு வரை</td><td>ஐந்து</td></tr>
<tr><td>நூற்று ஐம்பது குழந்தைகளுக்கு மேல்</td><td>ஐந்து ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமை ஆசிரியர்</td></tr>
<tr><td>இருநூறு குழந்தைகளுக்கு மேல்</td><td>மாணவர் ஆசிரியர் விகிதம் (தலைமை ஆசிரியர் அல்லாமல்) நாற்பதுக்கு மேல் செல்லலாகாது</td></tr>
</table>
<br>
(1) ஒரு வகுப்புக்கு குறைந்தது ஒரு ஆசிரியர்; இதனால் பின்வரும் பாடப்பிரிவு ஒவ்வொன்றுக்கும் குறைந்தது ஒரு ஆசிரியர் இருப்பார் –<br>
(i) அறிவியல் மற்றும் கணிதம்<br>
(ii) சமூகவியல்<br>
(iii) மொழிகள்<br>
(2) ஒவ்வொரு முப்பந்தைந்து குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர்<br>
(3) நூறு குழந்தைகளுக்கு மேல் சேர்க்கப்படும் நிலையில்<br>
(i) ஒரு முழு நேர தலைமை ஆசிரியர்<br>
(ii) பின்வரும் பாடங்களுக்கு பகுதி நேர பயிற்சியாளர்கள்<br>
(A) கலைக்கல்வி<br>
(B) உடல் நலம் உடற்பயிற்சிக் கல்வி<br>
(C) வேலைக் கல்வி
</td></tr>
<tr><td>2.</td><td>கட்டிடம்</td><td>அனைத்து தட்ப வெப்ப நிலைமைகளுக்கும் ஏற்ற கட்டடமாக பின்வரும் ஏற்பாடுகளுடன் இருக்க வேண்டும் –<br>
(i) ஒவ்வொரு ஆசிரியருக்கும் குறைந்தது ஒரு வகுப்பறை மற்றும் அலுவலகமும் பொருள்கள் வைப்பறையும் தலைமை ஆசிரியர் அறையும் இணைந்த அறை<br>
(ii) தடையற்ற தொடர்பு வசதி<br>
(iii) ஆண் மாணவர்களுக்கும் பெண் மாணவர்களுக்கும் தனித்தனி கழிப்பறைகள்<br>
(iv) அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பான போதுமான குடிநீர் வசதி</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | (v) பள்ளியில் மதிய உணவு சமைப்பதற்கான ஒரு சமையலறை<br>(vi) விளையாட்டு மைதானம்<br>(vii)சுற்றுச்சுவர் அல்லது வேலி ஏற்பாட்டின் மூலம் பள்ளிக் கட்டடத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் ஏற்பாடுகள் |
| **3.** | ஒரு கல்வியாண்டில் பணி நாட்களுக்கான குறைந்தபட்ச எண்ணிக்கை / பயிற்சி நேரங்கள் | (i) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை இருநூறு வேலை நாட்கள்<br>(ii) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை இருநூற்று இருபது வேலை நாட்கள்<br>(iii) முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஒரு கல்வி ஆண்டில் எண்ணூறு மணி பயிற்சி நேரங்கள்<br>(iv) ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை ஒரு கல்வி ஆண்டில் ஓராயிரம் மணி பயிற்சி நேரங்கள் |
| **4.** | ஆசிரியருககு ஒரு வாரத்திற்கான குறைந்தபட்ச பணி நேரங்கள் | தயாரிப்பு உட்பட நாற்பத்தி ஐந்து மணி பயிற்சி நேரங்கள் |
| **5.** | பயிற்றுவிப்பு / கற்றல் சாதனங்கள் | ஒவ்வொரு வகுப்பிற்கும் தேவைக்கேற்ப வழங்கப்பட வேண்டும். |
| **6.** | நூலகம் | ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு நூலகம் இருக்க வேண்டும். செய்தி ஏடு, பருவ இதழ்கள் மற்றும் கதை புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்து பொருள்கள் குறித்த புத்தகங்களும் இருக்க வேண்டும். |
| **7.** | விளையாடுவதற்கான பொருள்கள் மற்றும் விளையாட்டுப் போட்டி | ஒவ்வொரு வகுப்பிற்கும் தேவைக்கேற்ப வழங்க வேண்டும் |

**V. பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை : [S24(1)]**

a) பள்ளிக்குத் தொடர்ச்சியாகவும் உரிய நேரப்படி காலம் தவறாமல் வருதல்;

b) வரையறுக்கப்பட்டுள்ளதற்கு ஏற்ப, கலைத்திட்டத் தொகுதியை நடத்தி முடித்தல்;

c) முழு கலைத்திட்டத் தொகுதியையும் வரையறுக்கப்பட்ட உரித்த கால அளவுக்குள் முடித்தல்;

d) ஒவ்வொரு குழந்தையின் கற்றல் திறனையும் மதிப்பிடுதல், தேவைப்படுமானால் கூடுதல் பயிற்சி வழங்கி ஈடுசெய்தல்;

e) பெற்றோர் மற்றும் பாதுகாப்பாளர்களுடன் சந்திப்புக் கூட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி, குழந்தையின் தொடர்சியான வருகை, கற்றல் திறன், கற்றலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் இதர பொருத்தமான தகவல்களைத் மதிப்பீடு செய்தல்;

f) வகுத்துரைக்கப்படக் கூடிய இப்படிப்பட்ட இதர பணிகளைச் செய்தல்

- அரசு உதவி பெறும் ஒரு பள்ளி, உள்ளாட்சி நிர்வாகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அப்படிப்பட்ட பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்ட பள்ளி நிர்வாகக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். [S21(1)]

## VI. பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் செய்யக் கூடாதவை :

எந்தப் பள்ளியும் ஒரு குழந்தையை சேர்க்கும் பொழுது அதன் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரிடமிருந்து எந்தவொரு கல்வி கட்டணமும் வசூலிக்கக்கூடாது, குழந்தையை எந்தவொரு பரிசீலனை நடைமுறைக்கும் உட்படுத்தக் கூடாது. [S 13(1)]

எந்தவொரு ஆசிரியரும் தனிப்பட்ட கல்வி பயிற்சி (டியூசன்) அல்லது தனிப்பட்ட பயிற்றுவிப்பு நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. [S 28]

வயது சான்றிதழ் இல்லாத காரணத்திற்காக எந்தவொரு குழந்தைக்கும் பள்ளிச் சேர்க்கை அனுமதி மறுக்கப்படக் கூடாது [14 (2)].

ஒரு பள்ளியில் சேர்க்கப்படும் எந்தவொரு குழந்தையும் தொடக்கக் கல்வி முடியும் வரையில் எந்தவொரு வகுப்பிலும் தொடர்ந்து இருக்க வைக்கப்படக் கூடாது, பள்ளியிலிருந்து வெளியேற்றப்படவும் கூடாது [S16].

எந்தவொரு குழந்தையும் உடல் ரீதியான தண்டனைக்கோ மன ரீதியான துன்புறுத்தலுக்கோ உள்ளாக்கப்படக் கூடாது [S17 (1)].

உரிய அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிர்வாகத்தால் நிறுவப்பட்டு உடமையாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிற பள்ளியல்லாத வேறு எந்தப் பள்ளியும், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரத் தொடங்கியபிறகு வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி உரிய முறையில் விண்ணப்பித்து உரிய அதிகார அமைப்பிடமிருந்து அங்கீகாரச் சான்றிதழ் பெறாமல் நிறுவப்படவோ செயல்படவோ கூடாது [S18 (1)].

## VII. இந்தச் சட்டத்தில் உள்ள உரிமைகள் மறுக்கப்பட்டால்..

இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குழந்தையின் உரிமை தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் குறை இருக்குமானால் அவர் அதனை அதிகார எல்லைக்குட்பட்ட உள்ளாட்சி நிர்வாகத்திற்கு எழுத்துப் பூர்வமான புகாராக அளிக்கலாம். [S32(1)]

துணை பிரிவு (1)ன் கீழ் இந்த புகாரை பெற்றுக்கொண்ட பின், உள்ளாட்சி நிர்வாகமானது, சம்பந்தப்பட்டவர் தரப்பு வாதத்தை கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்ட பின்பு மூன்று மாத காலங்களுக்குள் இது குறித்து முடிவு செய்யும்.[S32(2)]

உள்ளாட்சி நிர்வாகத்தின் முடிவால் பாதிக்கப்படக் கூடிய எந்தவொரு நபரும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு அல்லது பிரிவு 31 துணை பிரிவு (3)ன் கீழ் வகுத்துரைக்கும் அதிகார அமைப்பிற்கு மேல் முறையீடு செய்யலாம்.[S32(3)]

துணைப் பிரிவு (3)ன் கீழ் செய்யப்படுகிற மேல் முறையீடு தொடர்பாக மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அல்லது பிரிவு 31 துணைப்பிரிவு (3)ல் வகுத்துரைக்கப்படும் நிர்வாக அமைப்பு, பிரிவு 3 துணைப்பிரிவு (1) விதி (c)ன் கீழ் முடிவு செய்யும்.

## 3.1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் கீழ் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கிராம அளவிலான அதிகார அமைப்புகள்

**விதி 52**

**8. கல்விக் குழு**

1. (a) கிராம ஊராட்சியின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்டும் கிராம ஊராட்சி உறுப்பினர் ஒருவரே இக்குழுவின் தலைவர்.

(b) இக்குழு கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

(i) பெற்றோர் ஆசிரியர் கழக பிரதிநிதி ஒருவர்

(ii) சுயஉதவிக்குழு பிரதிநிதி ஒருவர்

(iii) தொண்டு நிறுவன பிரதிநிதி ஒருவர்

(iv) ஆரம்ப அல்லது நடுநிலைப்பள்ளி ஆசிரியர் ஒருவர்

(v) சத்துணவு அமைப்பாளர் ஒருவர்

**2. கல்விக் குழுவின் பணிகள்**

(a) தனது பகுதியல் எல்லாப் பள்ளிகளின் செயல்பாட்டை மேற்பார்வையிடல்.

(b) பள்ளிக்குத் தேவையான கட்டிடங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை பொதுமக்கள் ஒத்துழைப்புடன் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்

(c) அனைவருக்கும் கல்வி, முறைசாராக் கல்வி போன்ற திட்டங்களுக்கான முகாம் நடத்துதல், எழுத்தறிவு மற்றும் படிக்கும் பழக்கத்தை மக்களிடையே ஏற்படுத்துதல், நூலகங்கள் பராமரிப்பது.

தற்காலிகக் குழு மற்றும் துணைக்குழுக்களை ஏற்படுத்தும் அதிகாரம் (விதி52 (9,10) :

கிராம ஊராட்சியானது குறிப்பிட்ட நோக்கத்திற்காக குழுக்களை ஏற்படுத்த வேண்டும் என்று கருதினால் கிராம ஊராட்சி அத்தகைய குழுக்களை ஏற்படுத்தி குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்கான அதிகாரத்தையும் வழங்கலாம்.

**அரசாணை எண்.248 நாள் 11.06.1997ன் கீழ் உள்ள அதிகாரம்**

(அ) ஊராட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பள்ளிக்கூடக் கட்டிடம், கழிப்பறைகள் ஆகியவற்றைப் பராமரித்தல், பழுதுபார்த்தல், குடிநீர் வசதி செய்து தருதல் போன்றவற்றை கவனித்தும் பள்ளிகளைப் பார்வையிட்டும் உதவி தொடக்ககல்வி அலுவலருக்கு அறிக்கை அனுப்பலாம்.

(ஆ) அவர்கள் அளித்த அறிக்கையின் அடிப்படையில் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஊராட்சி ஒன்றிய மாதாந்திரக் கூட்டத்தில் கலந்துகொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை அளிக்க வேண்டும்.

(இ) மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் எடுக்கும் நடவடிக்கையினை ஆய்வு செய்து ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யவேண்டும்.

# 4. குழந்தை உரிமைகளுக்கான அரசுக் கட்டமைப்புகள் / அமைப்புகள்

| உரிமை மீறல் | கிராம அளவிலான அதிகார அமைப்பு | மாவட்ட அளவிலான அதிகார அமைப்பு | மாநில அளவிலான அதிகார அமைப்பு | தேசிய அளவிலான அதிகார அமைப்பு |
|---|---|---|---|---|
| **குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை** **(**POCSO Act) | • சிறப்பு சிறார் காவல் நிலையம் / உள்ளூர் காவல் நிலையம் [S19(1)]<br>• பெண் காவலர் [S 24(1)]<br>• உதவும் நபர் [S 49] | • குழந்தை நலக் குழுமம் (CWC) [S19] [R4(1)]<br>• மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு பிரிவு (DCPU) [R3]<br>• சிறப்பு நீதிமன்றம் / நீதிபதி [S(28,33)]<br>• சிறப்பு அரசு வழக்கறிஞர் [S32]<br>• மாவட்ட ஆட்சியர் | • மாநிலக் குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 43] | • தேசிய குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S44] |
| **பள்ளியில் உரிமை மீறல்** (RTE Act 2009) | • பள்ளி மேலாண்மைக் குழு ) [S 21] [R(3)]<br>• பள்ளியில் உடல் ரீதியான தண்டனைகளைக் கண்காணிக்கும் குழு (NCPCR guideline)<br>• கிராமக் கல்விக் குழு [TN Panchayat Act 1994]<br>• தற்காலிகக் குழு மற்றும் துணைக்குழுக்கள்[TN Panchayat Act 1994] | • மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (CEO) [S 6] [R(6)]<br>• மாவட்டக் கல்வி அலுவலர் (DEO) [S 6] [R(6)]<br>• மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு பிரிவு (DCPU) [S 6] [R(6)]<br>• குழந்தை நலக் குழுமம் (CWC) [S19] [R4(1)]/ POCSO Act<br>• மாவட்ட ஆட்சியர் | • மாநிலக் குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 32]<br>• மாநில ஆலோசனைக் குழு [R(31)]<br>• கல்வித்துறை | • தேசிய குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 31]<br>• தேசிய ஆலோசனைக் குழு [R(30)] |
| **குழந்தைத் திருமணம்** | • ஊராட்சி மையக்குழு [R(5)] | • கிராம ஊராட்சி/நகராட்சி/அரசு அதிகாரி<br>• தன்னார்வத் தொண்டு நிறுவனம்<br>• மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் (மாவட்டக் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி) [G.O.No.169/30.12.2009]<br>• மாவட்ட நீதிமன்றம்<br>• மாவட்ட ஆட்சியர் | • மாநிலக் குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 17] (Commissions for Protection of Child Rights Act 2005)<br>• குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி (CMPOs) [S 16] [R(3)]<br>• மாநில சமூக நலத்துறை அலுவலர் | • தேசிய குழந்தை உரிமைப் பாதுகாப்பு ஆணையம் [S 3] *(Commissions for Protection of Child Rights Act 2005)* |
| **குழந்தைத் தொழிலாளர்** (Child Labour Act, 1986 & Rules 1994, Amendment Act, 2016 | • ஊராட்சித் தலைவர் [TN Panchayat Act 1994] | • மாவட்ட நீதிபதி [S 17 (A)]<br>• ஆய்வாளர்கள் [S 17 B] [G.O.No.142]<br>• மாவட்ட ஆட்சியர் | • குழந்தைத் தொழிலாளர் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு<br>• மாநில அளவிலான கண்காணிப்புக் குழு | • குழந்தைத் தொழிலாளர் பற்றிய மத்திய ஆலோசனைக் குழு<br>• மத்திய அளவிலான கண்காணிப்புக் குழு |
| **இளஞ்சிறார் சட்டத்தின் (2015) கீழ் குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகள்** | • காவலர் / சிறப்பு சிறார் காவலர் பிரிவு / நியமிக்கப்பட்ட குழந்தை நலக் காவலர் / ஆய்வாளர் [S 31(1)i]<br>• உடல் ரீதியான தண்டனைகளைக் கண்காணிக்கும் குழு [S 82(1,2,3] | • குழந்தை நலக் குழுமம் (CWC)<br>• [S 27]<br>• மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு பிரிவு (DCPU) [S 31(1)i]<br>• இளஞ்சிறார் நீதிமன்றம் (JJ) [S 4]<br>• கூர்நோக்கு இல்லம் [S 47]<br>• சிறப்பு இல்லங்கள் [S 48]<br>• குழந்தை காப்பகம்[S 50] | • மாநில ஆய்வுக் குழு [S 54]<br>• புனர்வாழ்வு மையம் [S 53]<br>• சிறப்பு தத்தெடுப்பு முகமை [S 65]<br>• மாநில தத்தெடுப்பு வள முகமை [S 67]<br>• மாநில வழிகாட்டுக் குழு [S 69] | • பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம்<br>• மத்திய தத்தெடுப்பு வள முகமை [S 68] |
| **குழந்தைக் கடத்தல் IPC, Immoral Traffic Amendment Act 2006** | • காவலர் [IPC 45 of 1860]<br>• கிராம அளவிலான கண்காணிப்பு குழு [G.O.No.10/dept.of social defence] | • மாவட்ட ஆட்சியர் | • மாநில மனித உரிமை ஆணையம் | • ரயில்வே காவல் துறை<br>• விமான நிலைய காவல் பிரிவு |

# 5. குழந்தை உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள்

## 5.1. குழந்தை திருமணத் தடைச் சட்டம்–2006

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- இந்த சட்டம் 11.01.2007 அன்று நடைமுறைக்கு வந்தது.
- சட்டபூர்வமாக 21 வயது நிரம்பாத ஆணும், 18 வயது நிரம்பாத பெண்ணும் குழந்தைகளாகக் கருதப்படுவர்கள்.
- திருமணம் செய்பவர்களில் யாரேனும் ஒருவர் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் அது குழந்தைத் திருமணமாக கருதப்படும்.
- குழந்தைத் திருமணம் செய்து வைக்கப்படும் பெண் குழந்தைக்கு இடைக்காலத் தடை, குடியிருப்பு உரிமை, ஜீவனாம்சத்திற்கான உரிமை, பாதுகாவலுக்கான உரிமை, திருமணத்தை ரத்து செய்யும் உரிமை மற்றும் தடை செய்யும் உரிமை போன்ற உரிமைகள் இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.
- குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர் மாவட்ட நீதிமன்றத்தாலோ அல்லது குடும்ப நீதிமன்றத்தாலோ நியமிக்கப்படும் அரசு அலுவலர் ஆவர் (பிரிவு 9).
- மாவட்ட நீதிமன்றம் குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்த ஆணை வழங்கும். (பிரிவு 13)
- குழந்தை திருமணம் பிணை ஆணை (Arrest warrant) வழங்கா குற்றம் ஆகும் (பிரிவு 15)

**தண்டனைகள்**

- குழந்தைத் திருமணத்தை நடத்துபவரோ, ஏற்பாடு செய்பவரோ, ஆணையிடுபவரோ, தூண்டுதலாக இருப்பவரோ, யாரக இருந்தாலும் அவருக்கு இரண்டு வருட சிறைத்தண்டனையும், ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.
- இந்த திருமணத்தைத் தடை செய்ய யாரும் இடைக்காலத்தடை உத்தரவு வாங்கலாம். தடை உத்தரவை மீறி நடைபெற்ற திருமணம் சட்ட ரீதியாக செல்லத்தக்கத் திருமணம் அல்ல

**யாரிடம் புகார் அளிக்க வேண்டும்?**

- குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர் மாவட்ட நீதிபதி காவல்துறை குடும்ப நல நீதி மன்றம்
- பெற்றோர், ஆசிரியர்கள் சைல்டு லைன்–1098

**யார் மீது புகார் தொடுக்கலாம்?**

குழந்தை திருமணத்திற்கு துணைபோகும் மற்றும் ஏற்பாடு செய்யும்

- பெற்றோர்
- மதபோதகர்
- உறவினர்/ நன்பர்கள்
- அருகாமையில் வசிப்பவர்கள்
- சமுதாய தலைவர்கள்
- கல்யாண தரகர்கள்
- 18 வயது நிரம்பிய மணமகன்
- குழந்தையை கடத்துபவர்கள் அனைவரும் குற்றவாளிகள் (பிரிவு 10, 11)

**கடமையுடையவர்கள்**

- குழந்தை திருமண தடுப்பு அதிகாரி

- காவலர்
- சிறப்பு சிறார் பாதுகாப்பு காவல்துறை பிரிவு
- மாவட்ட நடுவர்
- பஞ்சாயத்து உறுப்பினர்கள்
- ஆசிரியர்கள்
- மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்கள் **(DCPO)**
- மாவட்ட நல அலுவலர்கள் **(DWO)**
- குழந்தைகள் நல குழுக்களிள் உறுப்பினர்கள்
துணைத்தாதியர் (**ANM)**
- அங்கன்வாடி பணியாளர்கள்
- சுகாதார பணியாளர்கள்

குழந்தை திருமணம் செய்து கொள்ள சம்மந்தப்பட்ட பெண்ணுக்கு விருப்பம் இல்லையென்றால் அவற்றை மூன்று வகைகளில் தடுத்து நிறுத்தலாம்.

**திருமண ரத்து உத்தரவு (Annulment order)**

குழந்தை திருமணம் நடந்த ஒரு பெண்ணுக்கு, அந்த திருமணத்தில் விருப்பம் இல்லை என்றால் அந்த திருமணம் செல்லாது என்று நீதிமன்றத்தை அணுகலாம். ஒரு பெண் குழந்தை 18 வயது பூர்த்தியடைந்த 2 வருடங்களுக்குள் நீதிமன்றத்தை அணுகவேண்டும்.

**தடை உத்தரவு (Injunction order)**

குழந்தை திருமணம் நடக்க ஏற்பாடு செய்த பிறகு அந்த திருமணத்தை தடுத்து நிறுத்துவதற்காக கொடுக்கப்படும்.

**ஜீவனாம்ச உத்தரவு (**Maintanence Order)

குழந்தை திருமணம் நடந்த ஒரு பெண்ணுக்கு, அந்த திருமணத்தில் விருப்பம் இல்லை என்றால் அந்த பெண்ணுக்கு 18 வயது ஆகும் வரை அல்லது அந்த பெண்ணுக்கு வேறொரு திருமணம் நடக்கும் வரை ஒவ்வொரு மாதமாகவோ அல்லது மொத்தமாகவோ திருமணத்திற்கு செய்த செலவுகள் மணமகன் வீட்டார் கொடுக்க வேண்டும்.

**குழந்தைத் திருமணம் நடந்த பிறகு திருமணத்தை முறிக்க முடியுமா ?**

- திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து 2 வருடத்திற்கு உள்ளாக திருமணம் செய்த குழந்தை வயது வந்தோரின் நிலை அடையும் வரை இத்திருமணத்தை முறிக்க முடியும்.
- திருமணம் செய்து வைக்கப்பட்ட குழந்தை அல்லது 18 வயதிற்கு மேற்பட்ட அதன் உற்ற தோழி அல்லது தோழர் ஆகியோர்கள் திருமணம் முறிவுக்கான மனுவை அளிக்க முடியும்.

**பிரிவு 3. குழந்தைகத் திருமணம் ஒன்றில் ஒருவர் குழந்தையாக இருக்கும்போது, அவரது விருப்பத்தின் பேரில் குழந்தைத் திருமணத்தைத் தவிர்க்கலாம்:– (1)** இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரோ அல்லது நடைமுறைக்கு வந்ததற்கு பின்னரோ நடைபெற்ற ஒவ்வொரு குழந்தைத் திருமணத்தையும் குழந்தைத் திருமணத்தின்போது, குழந்தையாக இருந்தவர், அவரது விருப்பத்தின் பேரில் அந்தத் திருமணத்தை இல்லா நிலையதாக்கிக் கொள்ளலாம்.

வரம்புரையாக:– அந்தக் குழுந்தைத் திருமணம் செல்லாது என்பதனைத் தீர்ப்பாணை ஒன்றின் மூலம் அறிவிக்க கோரிடுவதற்கான மனுவை, குழந்தைத் திருமணம் செய்து கொண்டவர்களில் ஒருவர் மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தல் வேண்டும்.

(2) அவ்வாறு மனு தாக்கல் செய்யப்படும் காலத்தில், மனு தாக்கல் செய்பவர் இளவராக (Minor) இருந்தால், அவர் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரியுடன், தனது காப்பாளர் மூலமாகவோ அல்லது வழக்குத் துணைவர் மூலமாகவோ அந்த மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்.

(4) இந்த பிரிவின் கீழ் திருமணம் செல்லா நிலையது என்று தீர்ப்பு வழங்கும் மாவட்ட நீதிமன்றம், குழுந்தைத் திருமணம் செய்து கொண்டவர்கள், அவர்களது பெற்றோர் அல்லது காப்பாளர் ஆகியோரை, திருமணத்தின்போது, மறுதரப்பினரிடம் பெற்றுக் கொண்ட பணம், மதிப்புடைய பொருள்கள், நகைகள் மற்றும் இதர அன்பளிப்புகள் அல்லது மதிப்பு மிக்கப் பொருள்கள், நகைகள், அன்பளிப்புகளுக்கு இணையான தொகை இவற்றைத் திரும்ப அளிக்கும்படி உத்தரவிட வேண்டும்.

**பிரிவு 4. குழந்தைத் திருமணத்தில் பெண் தரப்பினராக உள்ளவருக்கான வாழ்க்கைப் பொருளுதவி (சீவனாம்சம்) மற்றும் உறைபிடம் சம்பந்தமான வகையம்:– (1)** பிரிவு3–இன் கீழ் உத்தரவு வழங்கும்போது, மாவட்ட நீதிமன்றம், குழந்தைத் திருமணம் செய்து கொண்டவர்களில், ஆண் நபரை, பெண்ணுக்கு இடைக்கால சீவனாம்சமோ அல்லது முழுச் சீவனாம்சமோ அளிக்க உத்தரவிடலாம். அவ்வாறு சீவனாம்சம் அளிக்க வேண்டிய நபர் இளவராக (Minor) இருந்தால், அவரது பெற்றோர் அல்லது காப்பாளர் சீவனாம்சம் அளித்திடுவதற்கு உத்தரவிடலாம்.

(2) அளிக்கப்பட வேண்டிய சீவனாம்சத்தின் அளவினை மாவட்ட நீதிமன்றம் முடிவு செய்யும்போது, குழந்தைத் திருமணம் செய்துகொண்ட குழந்தையின் தேவை, அந்தக் குழந்தை திருமணத்தின்போது அனுபவித்த வாழ்க்கைமுறை, சீவனாம்சம் அளிக்க வேண்டியவரின் வருமானம் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(3) சீவனாம்சத்தை மாதா மாதம் கொடுப்பதற்கோ அல்லது முழுந்தொகையையும் கொடுப்பதற்கோ உத்தரவிடலாம்.

(4) பிரிவு 3–இன்கீழ் மனு தாக்கல் செய்பவர் பெண்ணாக இருந்தால், அவர் மறுமணம் செய்து கொள்கின்ற வரையில் அவருக்கு உறைவிடம் வழங்குவதற்கான உத்தரவு ஒன்றையும் மாவட்ட நீதிமன்றம் வழங்கும்.

**பிரிவு 5. குழந்தைத் திருமணங்களில் உருவான குழுந்தைகளின் பாதுகாப்பும் சீவனாம்சமும:– (1)** குழந்தைத் திருமணத்தின் மூலம் குழந்தைகள் பிறந்திருக்கும் போது, அத்தகைய குழந்தைகளின் பாதுகாப்புக்கு, மாவட்ட நீதிமன்றம் உரிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவின் கீழ் குழந்தைகளின் பாதுகாப்புக்கான உத்தரவைப் பிறப்பிக்கும் மாவட்ட நீதிமன்றம் அந்தக் குழந்தைகளின் நலனைப் பெரிதும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

(3) அவ்வாறு குழந்தைகளின் பாதுகாப்புக்கு உத்தரவிடும் நீதிமன்றம், அந்தக் குழந்தை மறுதரப்பினரும் பார்வையிடும் வகையில், அந்தக் குழந்தைக்கு உகந்ததும் சரியானதுமான வகையில் உத்தரவு பிறப்பிக்கலாம்.

(4) குழந்தைத் திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைக்கு, உரிய தரப்பினரையோ அல்லது அவரது பெற்றோரையோ அல்லது காப்பாளரையோ சீவனாம்சம் அளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிடலாம்.

**பிரிவு 6. குழந்தைத் திருமணங்களில் பிறந்த குழந்தைகளின் சட்டத் தகைமை:–** குழந்தைத் திருமணம் என்பது, பிரிவு 3–இன் கீ செல்லுபடியாகக் கூடியதல்ல என்று தீர்ப்பாணை வழங்கப்படுவதற்குரிய தெனினும்,

அத்தகைய தீர்ப்பாணை வழங்கப்படுவதற்கு முன்னர், குழந்தைத் திருமணத்தின் மூலம் குழந்தை பிறந்திருக்கும் போது, அந்தக் குழந்தை அனைத்து வித நோக்கங்களுக்கும் சட்டப்பூர்வமாகப் பிறந்த குழந்தைகயாகவே கருதப்படும்.

**பிரிவு 7. பிரிவு 4 அல்லது பிரிவு 5–இன்கீழ் பிறப்பித்த உத்தரவுகளை மாற்றம் செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்:–** மனு நிலுவையில் இருக்கும்போதும் மனுவில் இறுதியாக மாறுதல் ஏற்பாடும்போதும் பிரிவு 4 அல்லது பிரிவு 5 – இன்கீழ் பிறப்பித்த உத்தரவில் மாவட்ட நீதிமன்றம் கூடுதலான உத்தரவைப் பிறப்பிக்கவோ அல்லது உத்தரவை மாற்றியமைக்கவோ அல்லது நீக்கவோ செய்யலாம்.

**பிரிவு 8. எந்த நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்:–** பிரிவுகள் 3,4 மற்றும் 5–இன் கீழான பரிகாரங்களை வழங்குவதற்கான ஆள்வரையை மாவட்ட நீதிமன்றம் கொண்டுள்ளது. மாவட்ட நீதிமன்றம் என்பதில், எதிர்மனுதாரர் வசிக்கும் பகுதிக்குரிய மாவட்ட நீதிமன்றம் அல்லது குழந்தைத் திருமணம் எங்கே நடந்ததோ அந்தப் பகுதிக்குரிய மாவட்ட நீதிமன்றம் அல்லது குழந்தைத் திருமணம் செய்து கொண்ட இருவரும் கடைசியாக எங்கே வசித்தார்களோ அந்தப் பகுதிக்குரிய மாவட்டநீதிமன்றமும் மாவட்ட நீதிமன்றம் என்பதில் அடங்கும்.

**பிரிவு 9. வயது வந்த ஆண், குழந்தை ஒன்றை திருமணம் செய்து கொள்வதற்குத் தண்டனை:–** பதினெட்டு வதிற்கு மேற்பட்ட ஆண் ஒருவர், குழந்தை ஒன்றைத் திருமணம் செய்து கொள்வதற்கு, ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் போது, அவர் இரண்டாண்டுகள் வரையில் கடுஞ்சிறைத் தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரையில் அபராதம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

**பிரிவு 10. குழந்தைத் திருமணம் ஒன்றை நடத்தி வைத்தலுக்குத் தண்டனை:–** தான் நடத்தி வைத்த திருமணம், குழந்தைத் திருமணம் என்று தனக்குத் தெரியாது என்று ஒருவர் நிரூபித்தாலன்றி, மற்றபடி அவர் குழந்தைத் திருமணம் ஒன்றை நடத்தி வைத்தற்காக, அவர் இரண்டாண்டுகள் வரையில் கடுஞ்சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் வரையில் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

**பிரிவு 16. குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள்:– (1)** மாநில அரசாங்கம் அரசுப் பதிவிதழில் அறிவிக்கை செய்து மாநிலம் முழுமைக்குமோ அல்லது மாநிலத்தின் ஒரு பகுதிக்குக் குழந்தைத் திருமண தடுப்பு அதிகாரி அல்லது அதிகாரிகள் என்றும் பெயரில் நியமிக்கும். அத்தகைய அதிகாரி அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி அல்லது பகுதிகளில் அதிகார வரம்பு உடையவராக இருப்பார்.

**(2)** சமூக சேவையில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட வட்டாரத்தைச் சேர்ந்த உறுப்பினர் அல்லது கிராம ஊராட்சி அலுவலர், அல்லது நகராட்சி அலுவலர் அல்லது அரசு அதிகாரி அல்லது அரசு நிறுவன அதிகாரி அல்லது அரசுசாரா அமைப்பு நிர்வாகிகளை, குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்கு உதவி செய்யுமாறு மாநில அரசாங்கம் கேட்டுக் கொள்ளும்; நிலவரத்திற்கேற்ப அத்தகைய உறுப்பினர், அதிகாரி அல்லது நிர்வாகி, அதற்கேற்ப செயற்படவேண்டும்.

**(3) குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகளின் கடமைகளாவன;**

- தக்கதெனக் கருதும் அத்தகைய நடவடிக்கையை எடுத்து, குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவதைத் தடுக்க வேண்டும்
- தனிப்பட்ட வழக்குகளில் அல்லது வழக்கறிஞர் தோன்றும் வழக்குகளில் அந்த வட்டாரப் பகுதியில் வசிப்பவர்கள் பொதுவாகக் குழந்தைத் திருமணங்களை ஊக்குவிக்கவோ, அல்லது உதவி செய்யவோ அல்லது நடத்தவோ கூடாது.
- குழந்தைத் திருமணங்கள் செய்து கொள்வதன் விளைவாக ஏற்படும் தீமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

- குழந்தைத் திருமணங்கள் சம்பந்தமான பிரச்சினையை, சமூகத்திற்கு மிகவும் நுட்பமாகத் தெரிவித்தல் வேண்டும்.
- மாநில அரசாங்கம் கட்டளையிட்டுள்ளபடி, காலமுறை இதழ்களையும் புள்ளிவிவரங்களையும் அளிக்க வேண்டும்
- மாநில அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அத்தகைய மற்றைய பணிகளையும் மற்றும் கடமைகளையும் செய்ய வேண்டும்.

**பிரிவு 3. குழந்தை திருமணத் தடுப்பு அதிகாரியின் பணிகள் மற்றும் கடமைகள்:–**

சட்டப்பிரிவு 16 உட்பிரிவு (3)– இன்கீழ் குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செய்கடமைகளுடன் கூடுதலாக.

(அ) குழந்தை திருமணம் பற்றிய தகவல் ஏதேனும் ஒரு வழியாக எழுத்து மூலமாக அல்லது வாய்மொழிக்கு வாயிலாக கடிதம், அல்லது தொலைபேசி, தந்தி மின்னஞ்சல் முதலியன அல்லது வேறு தகவல் கிடைக்கப்பெற்றவுடன் உடனடியாக தேவையான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்வது

(ஆ) படிவம் – I– இல் சமூக நல ஆணையருக்கு காலாண்டு விவர அறிக்கை மற்றும் புள்ளி விபரங்கள் அளிப்பது;

(இ) மனுதாரர் இளவராக இருக்கும் நிலையில் மாவட்ட நீதிமன்றத்தில் குழந்தைத் திருமணத்தை இரத்துச் செய்வதற்கு மனுதாக்கல் செய்வது

(ஈ) திருமணத்தின் பெண் தரப்பினருக்கு மறு திருமணம் நடக்கும் வரை சீவனாம்சம் கொடுக்க வேண்டி மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்வது.

(உ) குழந்தைத் திருமணத்தினரின் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் சீவனாம்சத்திற்காக, மாவட்ட நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்வது ஆகியன ஒவ்வொரு குழந்தைத் திருமண தடுப்பு அலுவலரின் கடமையாகும்.

**விதி 5. ஊராட்சி அளவிலான மையக்குழு:–** கீழ்க்கண்ட நபர்களைக் கொண்ட குழு குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலருக்கு உதவி செய்திடும்:

| | |
|---|---|
| ஊராட்சி தலைவர் | – தலைவர் |
| விரிவாக்க அலுவலர் (சமூக நலம்) | – கூட்டுநர் |
| கிராம நிர்வாக அலுவலர் | – உறுப்பினர் |
| செயலர், ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்கள் | – உறுப்பினர் |
| செயலர், ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்கள் | – உறுப்பினர் |
| தலைமையாசிரியர் /மூத்த ஆசிரியர் | – உறுப்பினர் |
| சிற்றொகுதியின் மூத்த பெண் உறுப்பினர் | – உறுப்பினர். |

## 5.2. குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டத்தின் (POCSO) கீழ் ஒரு குழந்தைக்கு உள்ள உரிமைகள்

**பொதுவான உரிமைகள்**

1. **தன்னுடைய அடையாளத்தை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை:** ஒரு குழந்தையின் அடையாளம் (பெயர், குடும்பம், பள்ளி, அருகாமையில் இருப்பவர்களின் விவரம் உள்ளிட்ட குழந்தையின் அடையாளத்தை தெரிந்துகொள்ளக்கூடிய எந்த ஒரு விவரமும்) குழந்தை நல குழு (CWC) அல்லது இளம் சிறார் சட்டத்தின் கீழான சிறப்பு காவல் பிரிவைத் (SPJU) தவிர யாரிடமும் தெரிவிக்கப்படக்கூடாது. அவ்வாறு செய்வது தண்டிக்கத்தக்க குற்றமாகும் [சட்டப்பிரிவு 23 (1), 23(2), 23(3), 23(4)]. புலன் விசாரணையின்போதும் வழக்கு விசாரணையின்போதும் வழக்கில் சம்மந்தப்பட்ட குழந்தையின் அந்தரங்கத்தை பாதுகாப்பது காவல்துறை [சட்டப்பிரிவு 24 (5)] மற்றும் சிறப்பு நீதிமன்றத்தின் சட்டப்பிரிவு 33 (7)] கடமையாகும்.

2. **துணையாக / ஆதரவாக யாரையாவது வைத்துக்கொள்ளும் உரிமை:** புலன் விசாரணை மற்றும் மருத்துவ பரிசோதனை, வாக்குமூலங்களை பதிவு செய்தல் அல்லது நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்குதல் உள்ளிட்ட வழக்கு விசாரணை நடைபெறும் காலம் முழுவதும் வழக்கில் தொடர்புடைய குழந்தையின் பெற்றோர் / பாதுகாவலர் / நம்பிக்கைக்குரிய யாராவது ஒரு நபர் குழந்தைக்கு துணையாக இருக்க வேண்டும். [r4(8)]

3. **சைகை மொழி விளக்கமளிப்பவர் / மொழிபெயர்ப்பாளர் / கற்றல் குறைபாடு அல்லது மனநலம் குன்றிய குழந்தைகளுக்கான சிறப்பு ஆசிரியரை வைத்துக்கொள்வதற்கான உரிமை:**

   ஒரு குழந்தைக்கு அது புரிந்துகொள்ளும் மொழியில் (சைகை மொழி உட்பட) புகார்கள் மற்றும் பிற ஆவணங்களின் [r4 (12)] உள்ளடக்கத்தையும் வழக்கு நடைமுறையையும் பற்றி தெரியப்படுத்த வேண்டும்.

   - சைகை மொழி விளக்கமளிப்பவருக்கு அரசு ஊதியம் வழங்கும், [r3(6)].
   - ஒரு குழந்தை தனக்கு கைகை மொழி விளக்கமளிப்பவர் ஆணாக இருக்க வேண்டுமா அல்லது பெண்ணாக இருக்க வேண்டுமா என்பதை எந்த நேரத்திலும் தேர்வு செய்யலாம் [r 3(7)]. சைகை மொழி விளக்கமளிப்பவர் அல்லது ஆதரவாளராக தேர்ந்தெடுத்தவரை மாற்ற விரும்பினால் அதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை [r 4(10)].
   - சைகை மொழி விளக்கமளிப்பவர் அல்லது மொழிபெயர்ப்பாளர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கும் மேற்பட்டு இருக்கலாம்.
   - சைகை மொழி பேசுபவர்கள் அனைவரும் சொந்த ஆதாயத்துக்காக எவ்வித செயலையும் செய்யாமல் [r 3(9)]. வழக்கு பற்றிய இரகசியத்த்ன்மையை பாதுகாக்க வேண்டும் [r 3(10)].

4. வழக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவரை நேரிடையாக சந்திக்காமல் இருப்பதற்கான உரிமை: ஒரு ஆண் அல்லது பெண் குழந்தை தனது வாக்குமூலத்தை காவலர்களிடமோ அல்லது நடுவர் நீதிபதியிடமோ சட்டப் பிரிவு 24(3)] அளிக்கும்போதோ அல்லது நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும்போதோ சட்டப் பிரிவு 36(1)] குற்றம் சாட்டப்பட்டவரை நேருக்கு நேராக பார்க்கும்படி அவருக்கு எதிராக அந்தக் குழந்தையை அழைத்து வரக்கூடாது.

5. அபராதம் விதிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை: குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்யவில்லை என்று தெரியவந்தால் அதற்காக குற்றம் சாட்டிய குழந்தைக்கு அபராதம் விதிக்கக்கூடாது சட்டப் பிரிவு 22(2)].

6. தகவல் பெறுவது மற்றும் ஒப்புதல் அளிப்பதற்கான உரிமை: பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை பாதுகாப்பு இல்லங்களுக்கு செல்ல விரும்பினால் [r 4(5), r 4(6)], துணையாக இருக்கும் நபரின் தேர்வு [r 4(7)], முதல் தகவல் அறிக்கை இலவசமாக வழங்குவது[r 4(2)a], வழக்கின் நிலை குறித்த விபரங்கள் [r 4(12)]. போன்றவை அந்தக் குழந்தையின் வயது, வயதுக்கு ஏற்ற முதிர்ச்சி, பாலினம், சமூக மற்றும் பொருளாதார பின்னணி ஆகியவற்றுக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

7. சட்ட ஆலொசனை பெறுவது மற்றும் வழக்கறிஞர் வைத்துக்கொள்வதற்கான உரிமை [சட்டப் பிரிவு 40, r 4(2)f].

8. இழப்பீடு பெறுவதற்கான உரிமை: மறுவாழ்வு, உடல் ரீதியான மற்றும் மனரீதியான நிலை ஆகியவற்றுக்கு இழப்பீடு [சட்டப் பிரிவு 33(7)] பெறுவதற்கான உரிமை பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உண்டு.

9. **குற்றம் சாட்டப்பட்டவராக கருதப்பட்டால் அப்போது உள்ள உரிமைகள்:** குழந்தை குற்றவாளி என்று குற்றம் சாற்றப்பட்டால், அதன் பிறகு அந்தக் குழந்தை இளம் சிறார் நீதி (நலன் மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2000த்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவேண்டும். போஸ்கோ சட்டத்தின்படி எந்த ஒரு குழந்தையும் குற்றம் சாட்டப்படக்கூடாது சட்டப் பிரிவு 21(3), சட்டப் பிரிவு 22(2), r34(1)]..

**பெண் குழந்தைக்கென்று இருக்கும் சிறப்பு சட்டப் பிரிவுகள்**

1. மருத்துவப் பரிசோதனை ஒரு பெண் மருத்துவரால் செய்யப்படவேண்டும். [சட்டப் பிரிவு 27(2)]
2. மருத்துவப் பரிசோதனை குழந்தையின் பெற்றோர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய நபரின் முன்னிலையில் நடைபெறவேண்டும் [சட்டப் பிரிவு 27(3)], அல்லது அவர்களால் மருத்துவ பரிசோதனை நடக்கும்போது அங்கு இருக்க முடியவில்லை என்றால், மருத்துவப் பரிசோதனை செய்யப்படும் மருத்துவமனையால் நியமிக்கப்பட்ட ஒரு பெண்ணின் முன்னிலையில் நடத்தப்படவேண்டும் [சட்டப் பிரிவு 27(3)].

**மாற்றுத் திறனாளி குழந்தைளுக்கான சிறப்புப் பிரிவுகள்**

1. ஒரு குழந்தை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ உடல் அல்லது மனரீதியான மாற்றுத்திறனாளியாக இருந்தால், ஒரு சைகை மொழிபெயர்பாளர் அல்லது சிறப்பு ஆசிரியரின் முன்னிலையில் குழந்தையின் வீட்டிலோ அல்லது குழந்தை விரும்பும் இடத்தில் அந்தக்

குழந்தையின் வாக்குமூலம் காவலரால் பதிவு செய்யப்படவேண்டும் [சட்டப் பிரிவு 26(3)]. மேலும் வீடியோ பதிவு செய்யப்படவேண்டும். [சட்டப் பிரிவு 26(4)].

2. ஒரு குழந்தை கைது செய்யப்பட்டுள்ள ஒரு நபரை அடையாளம் காண்பிப்பதற்காக பயன்படுத்தப்படும் வழிமுறைகள் அந்தக் குழந்தைக்கு இணக்கமாக இருக்கின்றன என்பதை ஒரு நடுவர் நீதிபதி உறுதிப்படுத்த வேண்டும். அந்த வழிமுறைகளும் வீடியோ பதிவு செய்யப்படவேண்டும்.
3. குழந்தை சாட்சி கூறுவதை அவ்வாறு வீடியோ பதிவு செய்யும்போது, காவலர் அல்லது நடுவர் நீதிபதி சிறப்பு ஆசிரியர், தகுதிவாய்ந்த வல்லுநர் அல்லது குழந்தையோடு தகவல் பரிமாற்றம் செய்யும் முறையில் பரிச்சயமான யாராவது ஒரு நபரின் உதவியை நாடலாம். [சட்டப் பிரிவு26(3)] . அத்தகைய நடைமுறையும் வீடியோ பதிவு செய்யப்படவேண்டும் [சட்டப் பிரிவு26(4)]..
4. குழந்தைக்கு இழப்பீடு வழங்குவது குறித்த ஆணை பிறப்பிக்கும்போது, சிறப்பு நீதிமன்றம், அந்தக் குழந்தை அவன்/அவளுக்கு எதிராக நடந்த குற்றத்தின் விளைவாக மாற்றுத் திறனாளியாக்கபட்டதா என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

**குழந்தை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்யப்பட்டுள்து என்று நீங்கள் சந்தேகப்பட்டால்:**

நமது சிறப்பான முயற்சிகளுக்குப் பின்னரும் குழந்தைக்கு பாலியல் ரீதியான தொந்தரவுகள் நடைபெறலாம். அத்தகைய சூழலில் அந்தக் குழந்தை மேலும் துன்புறுத்தப்படாமல் இருப்பதிலிருந்து பாதுகாக்க நாம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் குற்றம் செய்தவர் தண்டிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**பின்வருவனவற்றை செய்யுங்கள்:**

1. குழந்தைக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல் நடைபெறலாம் என்று நீங்கள் சந்தேகம் மட்டும் படுகிறீர்கள் அத்தகைய சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் கூட சிறப்பு இளம் சிறார் காவலர் பிரிவுக்கு [சட்டப் பிரிவு 19(1)a] அல்லது அருகில் இருக்கும் காவல் நிலையத்தில் [சட்டப் பிரிவு19(1)b] புகார் கொடுங்கள். அத்தகைய சம்பவம் நடைபெறுவதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை / காத்திருக்கவும் கூடாது.
   i. புகார் அளித்த பிறகு நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்கள் (அத்தகைய எச்சரிக்கை தவறானதாக இருந்து நீங்கள் குற்றம் சாட்டியவர் குற்றம் செய்யவில்லை என்று தெரிந்தாலும்) நல்ல எண்ணத்தின் அடிப்படையில் நீங்கள் அளித்த புகாருக்காக உங்கள் மீது எந்த ஒரு குற்ற அல்லது சிவில் வழக்கோ பதிவு செய்யப்படக்கூடாது [சட்டப் பிரிவு19(7)].
   ii. நீங்கள் புகார் அளிக்கவில்லை என்றால் உங்களுக்கு தண்டனை வழங்கப்படலாம் (சிறைத்தண்டனை மற்றும் அபராதம் உள்ளிட்ட) [சட்டப் பிரிவு21(1) and 21(2)].
   iii. பாதிக்கப்பட்டவர் என்று தவறான ஒரு குழந்தை பற்றி புகார் அளித்தால் நீங்கள் தண்டிக்கப்படலாம் [சட்டப் பிரிவு 22(3)].
2. சம்பவம் நடைபெற்ற 24 மணிநேரத்துக்குள் பாதிக்கப்பட்ட குழந்தை, குழந்தை நலக் குழு முன்பாக ஆஜர் படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும். (காவல் துறை இந்த நடவடிக்கையை செய்யாமல் விடுபட முடியாது) [r4(3)].

**செய்யக் கூடாதவை**

1. குழந்தை நலக் குழு அல்லது சிறப்பு இளம் சிறார் காவல் பிரிவு தவிர யாரிடமும் பாதிக்கப்பட்ட குழந்தை யார் என்ற அடையாளத்தை தெரிவிக்கக் கூடாது. அவ்வாறு செய்வது தண்டிக்கத்தக்க குற்றமாகும் [சட்டப் பிரிவு 23(4)].
2. ஊடகம் கூட குழந்தையின் மாண்பைக் குறைக்கும் வகையிலான எந்த ஒன்றையும் அல்லது குழந்தை யார் என்று அறிந்துகொள்ளும் வகையிலான எந்த ஒரு தகவலையும் வெளியிடக்கூடாது [சட்டப் பிரிவு 23(1), சட்டப் பிரிவு 23(2)].
3. பதற்றமடையாதீர்கள், அமைதியாக இருங்கள், குழந்தைக்கு ஆதரவாக இருங்கள். .

**1. காவலர் / சிறப்பு இளம் சிறார் காவலர் பிரிவு (SPJU)**

**1.1 காவல் துறை என்ன செய்ய வேண்டும்**

**1.1.1 உடனடியாக**

a) பின் வரும் விவரங்களை பாதிக்கப்பட்ட குழந்தையிடம் அல்லது புகார் அளிக்க வரும் நபரிடம் தெரிவிக்க வேண்டும் : (i) அவரது பெயர் மற்றும் பதவி ; (ii) முகவரியும் தொலைபேசி எண்ணும் ; (iii) தகவல் பெறும் அந்த அதிகாரியை மேற்பார்வையிடக் கூடிய உயர் அதிகாரியின் பெயர், பதவி மற்றும் தொடர்பு கொள்வதற்கான விவரங்கள் [r 4(1)]
b) முதல் தகவல் அறிக்கையை கேட்டு பதிவு செய்யவேண்டும் [சட்டப் பிரிவு19(2), r 4(2)a].
c) மருத்துவமனை அல்லது பாதுகாப்பு இல்லத்தில் அனுமதிப்பது உள்ளிட்ட உடனடியான அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்பட்டால் அவற்றை வழங்க வேண்டும் [சட்டப் பிரிவு19(5)].
d) அவசர மருத்துவ உதவி பெறுவதற்கான ஏற்பாட்டை தேவைப்பட்டால் செய்யவேண்டும் [சட்டப் பிரிவு19(5), r4(2)b] மற்றும் மருத்துவ பரிசோதனைக்காக குழந்தையை அருகில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் [r 4(2)c].
e) தடயவியல் பரிசோதனைக்காக கைப்பற்றப்பட்ட பொருட்கள் உடனடியாக தடயவியல் பரிசோதனைக் கூடத்துக்கு செல்வதை உறுதிப்படுத்தவேண்டும் [r 4(2)d].
f) பாதிக்கப்பட்ட குழந்தை / பெற்றோர் / குழந்தையின் நம்பிக்கைக்குறிய நபர் ஆகியோரிடம் அவர்களுக்கு ஆதரவாக உள்ள நடைமுறைகள் பற்றி தெரிவிக்க வேண்டும் மேலும் அத்தகைய சேவைகளையும் நிவாரணங்களையும் அளிக்கும் அமைப்புகளை அவர்கள் தொடர்பு கொள்வதற்கு உதவி செய்யவேண்டும் [r 4(2)e].
g) பாதிக்கப்பட்ட குழந்தை / பெற்றோர் / குழந்தையின் நம்பிக்கைக்குரிய நபர் ஆகியோரிடம் அவர்களுக்கு சட்ட ஆலொசனை மற்றும் வழக்கறிஞர் மூலமாக தங்களது வழக்கை வாதாட உரிமை உண்டு என்பதை தெரிவிக்க வேண்டும் [சட்டப் பிரிவு 40, r 4(2)f].

**1.1.2 புகார் பெற்று 24 மணி நேரத்துக்குள்**

h) குழந்தை நலக் குழு மற்றும் சிறப்பு நீதிமன்றத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் [சட்டப் பிரிவு19(6)].

i) குழந்தை வசிக்கும் இடம் (வீடு, குழந்தை நல அமைப்பு அல்லது பெற்றோர் ஆதரவு இல்லாமல் இருந்தால்) அந்தக் குழந்தைக்கு பாதுகாப்பானதாக இல்லை என்று கருதினால் குழந்தையை குழந்தை நல குழு முன்னர் ஆஜர் படுத்த வேண்டும் [r 4(3)].

j) நடுவர் நீதிபதி வாக்குமூலம் பதிவு செய்வதற்கு தேவையானவற்றை செய்ய வேண்டும்.

k) தேவைப்பட்டால் 24 மணி நேரத்துக்குள் ஒரு மருத்துவமனையிலோ அல்லது பாதுகாப்பு இல்லத்திலோ சேர்க்க வேண்டும் [சட்டப் பிரிவு 19(5), r 4(2)b].

l) குழந்தை பெற்றோர் ஆதரவு இல்லாமல் இருக்கிறதா அல்லது பாலியல் ரீதியாக துன்புறுத்திய நபரோடு வசிக்கிறதா அல்லது குழந்தைக்கு அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படுகிறதா [சட்டப் பிரிவு19(5)] என்பது பற்றிய விரிவான மதிப்பீட்டை செய்யுமாறு குழந்தை நலக் குழுவிடம் கேட்டுக்கொள்ளவேண்டும் [r 4(3)].

### 1.1.3. வழக்குகளை பதிவு செய்ய வேண்டும்

1. காவலர் சீருடையில் இல்லாமல் சதாரண உடை அணிந்திருக்க வேண்டும் [சட்டப் பிரிவு24(2)].
2. குழந்தையால் தெரிவிக்கப்படும் வழக்குகளை பதிவு செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு 19(2)] அத்தகைய பதிவை குழந்தையின் வீட்டிலோ அல்லது எந்த இடத்தில் குழந்தை வசதியாக எண்ணுகிறதோ அந்த இடத்தில் செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு24(1)].
3. முதல் தகவல் அறிக்கையை கேட்டு பதிவு செய்ய வேண்டும் [r 4(2)a]
4. துணை ஆய்வாளர் பதவிக்கு குறையாத ஒரு பெண் காவலரால் [சட்டப் பிரிவு24(1)] வழக்கு சீருடையில் இல்லாமல் சாதாரண உடையில் பதிவு செய்யப்படவேண்டும் [சட்டப் பிரிவு24(2)].
5. குழந்தை அளித்த புகாரை அக்குழந்தை புரிந்து கொள்ளும் மொழியில், குழந்தை உள்வாங்கிக்கொள்ளக்கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்தி படித்துக் காண்பிக்க வேண்டும் [சட்டப் பிரிவு19(2)b, சட்டப் பிரிவு 19(3), சட்டப் பிரிவு 19(4)].
6. அத்தகைய புகாரை அளிக்கும் நபருக்கு இலவசமாக முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலைக் கொடுக்க வேண்டும் [r 4(2)a].

### 1. 1.4. மதிப்பீடு

7. குழந்தை பெற்றோர் ஆதரவு இல்லாமல் உள்ளதா அல்லது துன்புறுத்தியவரோடு வாழ்கிறதா அல்லது அக்கறையும் பாதுகாப்பும் தேவைப்படுகிறதா என்பதை பற்றிய முதல் கட்ட மதிப்பீடு செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு19(5)].
8. பாதிக்கப்பட்ட குழந்தை ஏன் அதன் தற்போதைய வசிக்கும் இடத்திலிருந்து மாற்றப்படவேண்டும் என்பதைற்கான காரணங்களை எழுத்துபூர்வமாக பதிவுசெய்யவேண்டும், மேலும் குழந்தையின் நலன் மற்றும் பாதுகாப்புக்காக தேவையான ஏற்பாடுகளை உடனடியாக செய்யவேண்டும்.[சட்டப் பிரிவு19(5)].
9. தேவைப்பாட்டால் புகார் கிடைத்த 24 மணி நேரத்துக்குள் குழந்தையை மருத்துவமனையிலோ அல்லது பாதுகாப்பு இல்லத்திலோ சேர்க்க வேண்டும் [சட்டப் பிரிவு19(5)].

10. குழந்தை நலக் குழு மற்றும் சிறப்பு நீதிமன்றம் / நடுவர் நீதிமன்றத்துக்கு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக நடந்த சம்பவம், குழந்தைக்கு தேவைப்படும் நலன் மற்றும் பாதுகாப்பு, அதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை பற்றி தெரிவிக்க வேண்டும் ( சம்பவம் நடைபெற்ற 24 மணி நேரத்துக்குள்ளாகவாவது) [சட்டப் பிரிவு19(6)].
11. பாதிக்கப்பட்ட குழந்தை பெற்றோர் ஆதரவு இல்லாமல் இருந்தாலோ அல்லது தன்னை துன்புறுத்தியவர்களோடு வசித்தாலோ அல்லது நலனும் பாதுகாப்பும் அந்தக் குழந்தைக்கு தேவைப்பட்டாலோ, [சட்டப் பிரிவு19(5)] குழந்தை நலக் குழுவிடம் அது பற்றிய விரிவான மதிப்பீட்டை செய்யச் சொல்ல வேண்டும் [r 4(3)].
12. முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை குழந்தை மற்றும் குழந்தையின் பாதுகாவலர் / புகார் அளிக்க குழந்தையோடு வந்துள்ளவரிடம் இலவசமாக அளிக்க வேண்டும் [r 4(2)a].
13. குழந்தையின் அடையாளத்தை குறிப்பாக வெகுஜன ஊடகத்திடம் இருந்து பாதுகாக்க வேண்டும் [சட்டப் பிரிவு 24(5)].
14. எந்த காரணத்துக்காகவும் எந்த சூழலிலும் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரின் முன்னிலையில் வராமல் இருப்பதை புலானாய்வு செய்யும் அதிகாரி உறுதி செய்ய வேண்டும்.[சட்டப் பிரிவு24(3)]

**III. அவசர மருத்துவ சிகிச்சை**

15. சட்டப்பிரிவுகள் 3 குற்றங்களான உள்நுழைவு பாலியல் தாக்குதல் 5 கொடூரமான உள்நுழைவு பாலியல் தாக்குதல், 7 பாலியல் தாக்குதல் மற்றும் 9 கொடூரமான பாலியல் தாக்குதல் ஆகியவற்றின் கீழ் உள்ள குற்றச் சம்பவங்களில் அவசர மருத்துவ சிகிச்சை உடனடியாக அளிக்கப்படவேண்டும்.
16. சட்ட விதி 5ல் குறிப்பிட்டுள்ளபடி தேவைப்பட்டால் அவசர சிகிச்சைக்கு காவல்துறை ஏற்பாடு செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு 19(5), r 4(2)b] .
17. அவசர மருத்துவ சிகிச்சைக்காக காவல் துறை குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் [r 4(2)c].
18. குழந்தை பற்றிய விவரங்கள் ரகசியமாக இருக்கும் வகையில் அவசர மருத்துவ சிகிச்சை வழங்கப்படவேண்டும் [r 5(2)].
19. அவசர மருத்துவ சிகிச்சை பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய ஒரு நபரின் முன்னிலையில் நடைபெறவேண்டும் [r 5(2)].

**IV. மருத்துவ சிகிச்சை**

20. முதல் தகவல் அறிக்கை / புகார் பதிவுசெய்யப்பட்டாலும் பதிவுசெய்யப்படவில்லையென்றாலும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டும் [சட்டப் பிரிவு 27(1)].
21. சம்பவம் நடைபெற்ற சூழல் தொடர்பான சாட்சிகள் இல்லையென்றால்கூட பாதிக்கப்பட்ட குழந்தையின் மருத்துவ பரிசோதனை தொடர்பான சாட்சி அந்த வழக்கை நிரூபிக்கப் போதுமானது [சட்டப் பிரிவு27(1)]. மேலும் அது குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 164a யின் படி மேற்கொள்ளப்படவேண்டும்.

22. பாதிக்கப்பட்ட குழந்தை ஒரு சிறுமியாக இருந்தால், மருத்துவ பரிசோதனை ஒரு பெண் மருத்துவரால் நடத்தப்படவேண்டும் [சட்டப் பிரிவு 27(2)].
23. மருத்துவப் பரிசோதனைக்கு காவல் துறை ஏற்பாடு செய்யவேண்டும், குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் [r 4(2)c].
24. தடயவியல் பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தடயவில் பரிசோதனைக் கூடத்துக்கு விரைவில் செல்வதை காவல் துறை உறுதிப்படுத்த வேண்டும் [r 4(2)d].

**V. நீதிமன்ற நடுவர் வாக்குமூலம் பதிவு செய்தல்**

25. சிறப்பு இளம் சிறார் காவலர் பிரிவு அல்லது உள்ளூர் காவலர்கள் சம்பவம் நடைபெற்ற 24 மணி நேரத்துக்குள் பாதிக்கப்பட்ட குழந்தையை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 164ன் கீழ் அவன் / அவளின் வாக்குமூலத்தை பதிவு செய்யும் நோக்கத்துக்காக நீதிமன்ற நடுவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.
26. இந்த நோக்கத்துக்காக முடிந்தவரையில் பாதிக்கப்பட்ட குழந்தையை அருகில் உள்ள ஒரு பெண் பெருநகர நடுவர் நீதிபதி / பெண் நடுவர் நீதிபதியிடம் (விரும்பத்தக்கது) அழைத்துச் செல்லப்படவேண்டும்.
27. புலனாய்வு செய்யும் அதிகாரி ஒரு குழந்தைக்கு எதிராக நடைபெற்ற பாலியல் வன்முறை சம்பவம் குறித்து அவருக்கு எந்த நாளில் எந்த நேரத்தில் தெரியவந்தது என்பதையும் பாதிக்கப்பட்ட குழந்தைளை அவர் எந்த நாளில் எந்த நேரத்தில் பெரு நகரப் பெண் நடுவரிடம் அழைத்துச் சென்றார் என்பதையும் மிகத் துல்லியமாக பதிவு செய்யவேண்டும்.
28. புலனாய்வு குறித்து பதிவு செய்வதில் ஏதாவது தாமதம் ஏற்பட்டால் அதற்கான காரணங்களை புலனாய்வு அதிகாரி வழக்கு குறித்த குறிப்பேட்டில் பதிவு செய்யவேண்டும். அதன் ஒரு நகலை நடுவர் நீதிபதியிடம் அளிக்க வேண்டும். மருத்துவ பரிசோதனை அறிக்கையின் நகலும் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 164ன் கீழ் பாதிக்கப்பட்ட குழந்தையின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்யும் நடுவர் நீதிபதியிடம் உடனடியாக அளிக்க வேண்டும்.

**VI.சிறப்பு நீதிமன்றம் மறுற்ம குழந்தை நலக் குழுவிடம் புகார் தெரிவிப்பது**

இளம் சிறார் சிறப்பு காவல்பிரிவு / காவல்துறை வழக்கு பற்றியும் சம்பவம் பற்றிய தகவல் கிடைத்த 24 மணி நேரத்திற்குள் பாதிக்கப்பட்ட குழந்தையின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவலை குழந்தை நலக்குழுவிடமும் சிறப்பு நீதிமன்றத்திலும் தெரிவிக்க வேண்டும். இந்த வழக்கிற்கென்று சிறப்பு நீதிமன்றம் நியமிக்கப்பட வில்லையென்றால் நடுவர் நீதிமன்றத்தில் அந்த அறிக்கையை அளிக்க வேண்டும்.

**VII. சம்பவம் குறித்து தகவல் அளித்தவரிடமும் பாதிக்கப்பட்ட குழந்தையிடமும் உரிய தகவலை அளிப்பது**

**31.** சம்பவம் குறித்த புகாரைப் பெற்றவுடன் கீழ்கண்ட விவரங்களை புகார் அளித்தவர்களுக்கு இளம் சிறார் சிறப்பு காவல் பிரிவு /உள்ளூர் காவல்துறை அளிக்க வேண்டும் [r4(1)a]

a. ஆண் / பெண் அதிகாரியின் பெயர் மற்றும் பதவி, தொடர்பு எண்
b. ஆண் / பெண் அதிகாரிக்கு உடனடி மேல் அதிகாரியின் பெயர் மற்றும் பதவி, தொடர்பு எண்

32. புகார் அளித்தவர்களுக்கு இளம் சிறார் சிறப்பு காவல் பிரிவு /உள்ளூர் காவல்துறை கீழ்கண்ட சேவைகளுக்குப் பொறுப்பானவர்கள் பற்றிய விவரங்களை அளிக்க வேண்டும், அவர்களை தொடர்புகொள்வதில் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உதவ வேண்டும் [r4(2)e]

c. அவசர சேவைகள்
d. ஆதரவு சேவைகள்
e. நடைமுறைகள்
f. இலவச சட்ட உதவி
g. பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு
h. குற்றம் சாட்டப்பட்டவர் கைது மற்றும் புலனாய்வு குறித்த நிலை
i. குற்றப் பத்திரிக்கை பதிவு மற்றும் நீதிமன்ற செயல்பாடுகள் குறித்த நிலை

**33.** கீழ்கண்டவை பற்றிய தகவலை பாதிக்கப்பட்ட குழந்தை மற்றும் அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது குழந்தையின் நம்பிக்கைக்குரிய நபர் ஆகியோருக்கு தெரிவிப்பது இளம் சிறார் சிறப்பு காவல் பிரிவு / காவல் துறை / ஆதரவாளரின் பொறுப்பாகும் [r4(12)]

i. அரசாங்க மற்றும் தனியார் துறையின் அவசரகால மற்றும் நெருக்கடி கால சேவைகள்;
ii. குற்றவியல் விசாரணையில் உள்ள நடைமுறைகள்;
iii. பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள இழப்பீடு நன்மைகள்;
iv. குற்றப் புலனாய்வு குறித்த நிலவரம், பாதிக்கப்பட்டவரிடம் இது குறித்த தகவலை தெரிவிப்பது ஓரளவுக்கு சரி ஆனால் அவ்வாறு செய்வது புலன் விசாரணையில் குறிக்கிடக்கூடாது;
v. குற்றம் செய்தவர் என்று சந்தேகிக்கப்படுபவரின் கைது;
vi. குற்றம் செய்தவர் என்று சந்தேகிக்கபபடுபவருக்கு எதிராக குற்றங்களை பதிவு செய்வது;
vii. குழந்தை பங்குபெறவேண்டிய அல்லது கண்டிப்பாக பங்குபெறவேண்டும் என்கிற நீதிமன்ற நடைமுறைகளின் அட்டவணை;
viii. குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது குற்றம் செய்தவராக சந்தேககிக்கப்படுபவரின் பிணை, விடுதலை அல்லது கைது நிலவரம்;
ix. வழக்கு விசாரணைக்கு பின்னரான தீர்ப்பு வழங்குதல்; மற்றும்
x. குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட தண்டனை.

**காவல் துறை செய்யக்கூடாதவை**

1. வாக்குமூலம் பதிவு செய்யும்போது அவர் சீருடையில் இருக்கக்கூடாது சட்டப் பிரிவு24(2)].
2. எந்த சூழலிலும் ஒரு குழந்தை காவல் நிலையத்தில் இரவு நேரத்தில் தங்க வைக்கப்படக்கூடாது [24(4)].
3. ஏந்தக் காரணத்துக்காகவும் எந்த சூழலிலும் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரோடு நேரடித் தொடர்பில் வரக்கூடாது [24(3)].

**மருத்துவ பரிசோதனை**

1. எந்த ஒரு மருத்துவப் பரிசோதனை செய்யப்படும் முன்னர் சம்பந்தப்பட்ட குழந்தையிடம் அல்லது குழந்தையின் சார்பாக ஒப்புதல் வாங்கவேண்டும்.
2. காவல் துறை / இளம் சிறார் சிறப்பு காவல் பிரிவு இதை செய்வதற்கு சட்டப்படி பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துவ அமைப்பான குழந்தை நலக் குழுவை இது குறித்து உடனடியாக எச்சரிக்கை செய்யவேண்டும்.
3. முதல் தகவல் அறிக்கை / புகார் பதிவு செய்யப்பட்டாலும் இல்லாவிட்டாலும் மருத்துவ பரிசோதனை செய்யப்படலாம்.
4. சம்பவம் நடைபெற்ற சூழல் தொடர்பான சாட்சிகள் இல்லையென்றால்கூட பாதிக்கப்பட்ட குழந்தையின் மருத்துவ பரிசோதனை தொடர்பான சாட்சி அந்த வழக்கை நிரூபிக்கப் போதுமானது [சட்டப் பிரிவு27(1)]. மேலும் அது குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 164யயின் படி மேற்கொள்ளப்படவேண்டும்.
5. பாதிக்கப்பட்ட குழந்தை ஒரு சிறுமியாக இருந்தால், மருத்துவ பரிசோதனை ஒரு பெண் மருத்துவரால் நடத்தப்படவேண்டும் [சட்டப் பிரிவு 27(2)].
6. மருத்துவப் பரிசோதனைக்கு காவல் துறை ஏற்பாடு செய்யவேண்டும், குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் [r 4(2)c].
7. தடயவியல் பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தடயவில் பரிசோதனைக் கூடத்துக்கு விரைவில் செல்வதை காவல் துறை உறுதிப்படுத்த வேண்டும் [r 4(2)d].

## குழந்தை நலக் குழு (CWC)

## குழந்தை நலக் குழு செய்ய வேண்டியவை

1. பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை அவன் / அவளுடைய குடும்பத்தில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதென்றால் அவன் / அவளின் குடும்பத்தை விட்டு வெளியேறி வேறு இடத்துக்கு மாற்றுவது உள்ளிட்ட நலனும் பாதுகாப்பும் குழந்தைக்கு அளிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை குழந்தை நலக் குழு எடுக்கலாம்.
2. **பாதிக்கப்பட்ட குழந்தை எந்த இடத்தில் இருக்கலாம் என்பதை முடிவு செய்தல்:** பாதிக்கப்பட்ட குழந்தை அதன் குடும்பத்தை விட்டு வெளியேற்றப்படவேண்டுமா என்பதையும் நிறுவனம் சார்ந்த நலன் தேவையா என்பதையும் மூன்று நாட்களுக்குள் முடிவு செய்ய வேண்டும் [r4(4)]. நீதிமன்றத்தில் எல்லாக் காலங்களிலும் குழந்தையின் கண்ணியத்தை பாதுகாக்கும் [சட்டப் பிரிவு 33(6) ]வகையிலான குழந்தை நேயச் சூழல் பின்பற்றப்பட வேண்டும் [சட்டப் பிரிவு 33(4)].
3. குழந்தையின் பெற்றோர் / குழந்தையின் நம்பிக்கைக்குரிய யாராவது ஒருவர் எப்போதும் குழந்தையோடு இருப்பதை உறுதி செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு 37].
4. இந்தச் சட்டத்தின் கீழ் குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் குற்றம் சாட்டப்பட்டவராக இருந்தால், அவர்கள் தமது சொந்த செலவில் வழக்கறிஞர் வைத்துக்கொள்ள இயலாதவர்கள்

என்றால் அவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் [சட்டப் பிரிவு 40]

5. சம்பந்தப்பட்ட குற்றத்துக்கு போக்ஸோ அல்லது வேறு எந்தச் சட்டத்திலோ குறிப்பிடப்பட்டிருக்கிற தண்டனைகளில் எது அதிகமானதோ அதன் அடிப்படையில் தண்டிக்கப்படுவார் [சட்டப் பிரிவு42].
6. வழக்கு விசாரணையின்போது சாட்சியம் அளிப்பதில் குழந்தை அவ்வப்போது இடைவெளி எடுத்துக்கொள்ளலாம் ஸசட்டப் பிரிவு 33(3) ].

**விசாரணை**

7. வழக்கு விசாரணை பொது மக்கள் பார்வையில் படாமல் உள்ளரங்கமாக ('in camera') நடத்தப்படவேண்டும் ஸசட்டப் பிரிவு 37].
8. பெற்றோர் அல்லது குழந்தைக்கு துணையாக வந்திருக்கும் ஆதரவாளரின் முன்னில் நடத்தப்படவேண்டும் ஸசட்டப் பிரிவு 37].
9. குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என்றாலும் கூட வழக்கு பற்றிய விவரங்கள் தெரிந்தவுடன் நீதிமன்றம் நேரிடையாகவே புலன்கொள் அதிகாரம் (cognizance) பெற்று குற்றம் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் ஸசட்டப் பிரிவு 33(1) ].
10. குழந்தையின் சாட்சியம் 30 நாட்களுக்குள் பதிவு செய்யப்படவேண்டும் ஸசட்டப் பிரிவு 35(1) ].
    வழக்கு விசாரணை ஒராண்டுக்குள் முடிக்கப்படவேண்டும் ஸசட்டப் பிரிவு 35(2) ].

**சோதனை**

11. குழந்தையை சோதனை செய்வது நீதிமன்றத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை [சட்டப் பிரிவு 37].
12. எந்த ஒரு காரணத்துக்காகவும் எந்த வகையிலும் பாதிக்கப்பட்ட குழந்தை குற்றம் சாட்டப்பட்டவரின் கண்பார்வையில் படாமல் இருப்பது உறுதி செய்யப்படவேண்டும் [சட்டப் பிரிவு 36(1) ].
13. குழந்தையின் வாக்குமூலத்தை வீடியோ பதிவு / ஒரு வழி கண்ணாடி மூலம் / திரைச்சீலை மறைப்பு அல்லது ஏனைய வழிமுறைகளை பயன்படுத்தியோ பதிவுசெய்யலாம் [சட்டப் பிரிவு36(2) ].
14. பாதிக்கப்பட்ட குழந்தையிடம் நேரிடையாகக் கேள்வி கேட்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்படவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவருக்காக வாதிடுபவர் தான் குழந்தையிடம் கேட்க விரும்பும் கேள்விகளை நீதிமன்றத்தில் சொல்ல வேண்டும், நீதிமன்றம் அக்கேள்விகளை குழந்தையிடம் கேட்கும் [சட்டப் பிரிவு 33(2) ].
15. குழந்தையிடம் கேள்வி கேட்கும் முறை கடுமையாக இருக்கக்கூடாது [சட்டப் பிரிவு 33(6) ].

**நீதிமன்றங்கள் / நீதிபதி செய்யக்கூடாதவை**

16. வாக்குமூலம் அளிப்பதற்காக ஒரு குழந்தையை மீண்டும் மீண்டும் அழைக்கக்கூடாது [சட்டப் பிரிவு 33(5) ].

**17.** குழந்தையின் சிறந்த நலனுக்காக எழுத்து பூர்வமாக அளிக்கப்பட்ட காரணங்களுக்காக அல்லாமல் வேறு எதற்காகவும் ஒரு குழந்தை பற்றியும் (குடும்பம், பள்ளி, அருகாமையில் வசிப்போர்) ஆகியவர்கள் பற்றி அவர்கள் இன்னார் என்று தெரிந்துகொள்ளக்கூடிய எந்த ஒரு தகவலையும் வெளியிடக்கூடாது [சட்டப் பிரிவு33(7) ].

**வெகுஜன ஊடகம் செய்யவேண்டியவை**

**18.** ஒரு குழந்தைக்கு எதிரான பாலியல் குற்றத்தைப்பற்றிய செய்தியை வெளியிடும்போது, குழந்தையின் அடையாளம் (பெயர், முகவரி, குடும்ப விவரங்கள், பள்ளி விவரங்கள், குழந்தை வசிக்கும் இடம் பற்றிய தகவல்) வெளியிடப்படவில்லை என்பதை ஊடகம் உறுதிசெய்ய வேண்டும். அந்தக் குழந்தையின் நலனுக்காக அத்தகைய விவரங்களை வெளியிடலாம் என்று சிறப்பு நீதிமன்றம் அனுமதித்தால் மட்டும் அவ்வாறு செய்யலாம்.

**வெகுஜன ஊடகங்கள் செய்யக் கூடாதவை**

19. கிடைக்கப்பெற்ற தகவலின் நம்பகத்தன்மையை உறுதிசெய்யாமல் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை பற்றிய செய்தி அறிக்கையையோ அல்லது தங்களின் கருத்தையோ ஊடகத்தின் எந்த ஒரு வடிவத்திலும் வெளியிடக்கூடாது.
20. குழந்தையின் கண்ணியத்தைக் குறைக்கும் வகையிலான எந்த ஒரு செய்தியையும் வெளியிடக்கூடாது.
21. குழந்தை, குடும்பம் அல்லது அருகாமையில் வசிப்போர் ஆகியவர்கள் பற்றி அவர்கள் இன்னார் என்று தெரிந்துகொள்ளக்கூடிய எந்த ஒரு தகவலையும் (புகைப்படம் உள்ளிட்ட) வெளியிடக்கூடாது.

**குழந்தைகள் துன்புறுத்தப்படுவதை தடுக்க நீங்கள் என்ன செய்ய முடியும்**

22. குழந்தைகள் துன்புறுத்தப்படுவதைப் பற்றி சமூகத்தில் நிலவும் அமைதியை உடையுங்கள். குழந்தைகளோடு, குடும்பத்தினரோடு, நண்பர்களோடு மற்றும் சக பணியாளர்களோடு இந்தப் பிரச்சனையின் தீவிரத்தன்மை பற்றி பேசுங்கள். குழந்தைகள் துன்புறுத்தப்படுவது குறித்த விழிப்புணர்வு அதனளவில் இத்தகைய சம்பவங்களை குறைக்கும். பல சமயம் இத்தகைய சம்பவங்கள் நடைபெறவில்லை என்று மறுக்கப்படுகின்றன (இந்தியாவில் அவ்வாறு இல்லை).
23. குடும்பங்கள், குழந்தைகள் மற்றும் காவலர், ஆசிரியர்கள், சுகாதார பணியாளர்கள் போன்ற அரசு ஊழியர்கள் உள்ளிட்டவர்களிடம் குழந்தைகளிடம் கடைபிடிக்கப்பட வேண்டிய அனுமதிக்கப்பட்ட மற்றும் அனுமதி இல்லாத நடவடிக்கைகள் / பழக்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.
24. குழந்தைகளுக்கு துன்புறுத்தல் குறிப்பாக பாலியல் ரீதியாக துன்புறுத்தல் ஏற்படக்கூடிய சூழலை குறைக்க வேண்டும்.
25. நீங்கள் வசிக்கும் பகுதியில் குழந்தைகளுக்கு துன்புறுத்தல் நடைபெறும் வாய்ப்புள்ள இடங்களான பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், தனியான / பாதி கட்டப்பட்ட நிலையில் உள்ள கட்டிடங்கள் ஆகியவற்றை தெரிவுசெய்து குடிமக்கள் கண்காணிப்பு குழுக்களை அமைத்து அத்தகைய இடங்களை கண்காணியுங்கள்.

26. பள்ளிக்கூடங்கள், அநாதை விடுதிகள், விடுதிகள் போன்ற பொதுவாக குழந்தைகள் இருக்கும் இடங்களை பட்டியலிடுங்கள், அத்தகைய இடங்களில் (அ) குழந்தைகள் துன்புறுத்தல் பற்றிய விழிப்புணர்வு உள்ளதா (ஆ) குழந்தைப் பாதுகாப்பு கொள்கைள் உள்ளதா (இ) உள்மட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

27. ஒரு குழந்தையின் புகாரை எப்போதும் முக்கியத்துவம் தந்து கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எப்போதும் அவர்கள் கூறுவதை புறம் தள்ளாதீர்கள். அனைத்து நடவடிக்கைகளின் போதும் குழந்தைக்கு உங்களின் மென்மையான ஆனால் உறுதியான ஆதரவை வழங்குங்கள் (பதற்றமடையத் தேவையில்லை)

# 5.3 சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015

## 1. சிறார் சட்டத்தின் கீழ் ஒரு குழந்தையின் உரிமைகள்

### 1.1. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் உடனிருப்பதற்கான உரிமை

1. ஒரு குழந்தை சிறார் நீதி வாரியத்தின் (JJB) முன்பாக அல்லது குழந்தை நலக்குழுவின் (CWC) முன்பாக கொண்டுவரப்படும்போது சம்பந்தப்பட்ட அமைப்பானது விசாரணையின் போது பெற்றோரில் யாரேனும் அல்லது பாதுகாப்பாளர் உடனிருக்கக் கேட்டுக்கொள்ளலாம் (S90)
2. குழந்தை நேரில் பங்கேட்பது அவசியப்படாத நிலையில், வாக்குமூலத்தைப் பதிவு செய்கிற அளவில் குழந்தையின் பங்கேற்பை JJB அல்லது CWC சுருக்கிக்கொள்ளலாம் (S91)
3. குழந்தையின் பங்கேற்பு தேவைப்படுகிற நிலையில் குழந்தைக்கும் உடன் வருகிற ஒருவருக்குமான போக்குவரத்துச் செலவு வழங்கப்படும். (S91(2))

### 1.2 மருத்துவ பராமரிப்பிற்கான உரிமை

1. JJB அல்லது CWCக்கு கொண்டுவரப்படும் ஒரு குழந்தை சிகிச்சை தேவைப்படுகிற உடல்சார்ந்த அல்லது மனம் சார்ந்த பிரச்சனையில் உள்ளாகியிருப்பதாக கண்டறியப்படுமானால், தேவைப்படும் சிகிச்சைக்கு அவசியமான காலகட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு மருத்துவ ஏற்பாட்டிற்கு குழந்தைகளை அனுப்ப வேண்டும். (S92)
2. இந்தச் சட்டத்தின்கீழ் வரக்கூடிய ஒரு நிறுவனத்தில் வைக்கப்பட்டிருக்கும் மன நோய்க்கு உள்ளாகியுள்ள அல்லது மது அல்லது போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள எந்தவொரு குழந்தையையும் CWC அல்லது JJB அப்புறப்படுத்தி, ஒரு மனநல மருத்துவ ஏற்பாட்டிற்கு உட்படுத்தலாம் (S93(1))

### 1.3 தனிமை உரிமை

1. சட்டத்துடன் முரண்படுகிற குழந்தை அல்லது பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிற குழந்தை அல்லது பாதிக்கப்பட்ட குழந்தை அல்லது ஒரு குற்றத்திற்கு சாட்சியாக உள்ள குழந்தையை அடையாளம் காண இட்டுச்செல்லக்கூடிய பெயர், முகவரி, பள்ளி அல்லது இதர விவரங்களை ஊடகத்தில் **வெளியிடுவது** ஒரு குற்றச்செயலாகும் (S74(1))
2. ஒரு வழக்கு முடிக்கப்படுகிறபோது அல்லது தீர்ப்பளிக்கப்படுகிறபோது பதிவுகளை **காவல்துறையினர் வெளியிடுவது** ஒரு குற்றச்செயலாகும்.(S74(2))
3. குழந்தை தொடர்பான **அறிக்கைகள்** ரகசியமானவையாகக் கருதப்பட வேண்டும். (S91(1))
4. பாதிக்கப்பட்ட குழந்தை தனது வழக்குப்பதிவுகளை, ஆணைகளை மற்றும உரிய ஆவணங்களை பெறுவதற்கான அனுமதி மறுக்கப்படக்கூடாது. (S99(2))
5. **அனுமதிக்கத்தக்க வெளிப்பாடு :** குழந்தையின் நலனுக்கு உகந்தது என்று JJB அல்லது CWC கருதுமானால், வெளியிடுவதற்கு துதுக்ஷ அல்லது ஊறுஊ மட்டுமே அனுமதிக்க முடியும் (S74(1))

### 1.4. 18 வயதை அடையும் குழந்தைகள் :

1. ஒரு குழந்தை வழக்குவிசாரணையின் போது 18 வயதை அடையுமானால், விசாரணை மற்றும் பிறப்பிக்கப்படுகிற எந்தவொரு ஆணைக்கான நோக்கத்திற்காகவும் இப்போதும் குழந்தையாகவே நடத்தப்பட வேண்டும் (S 5)
2. ஒரு குற்றச்செயலை செய்ததற்காக ஒரு குழந்தை 18 வயதை அடையும் முன்பே கைது செய்யப்படுமானால், விசாரணை நோக்கத்திற்காக இப்போதும் குழந்தையாகவே நடத்தப்பட வேண்டும், JJBயால் பிணையில் விடுவிக்கப்படவில்லையென்றால் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். (S6(1),(2))

## 1.5 பெண் குழந்தைகளின் உரிமைகள் :

1. ஒரு பெண் காவல் அதிகாரி உடனிருக்க வேண்டும் (S95(2))
2. தனி ஒருவராக இருக்குமானால் தத்தெடுக்கபட முடியாது (S57(3),(4))

## 2. குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் :

1. தேவையற்ற மனத்துயரம் அல்லது உடல் சார்ந்த துன்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் தாக்குதல்கள், கைவிடுதல், தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் புறக்கணித்தல் (அல்லது உடைமையாக்குதல்) என்ற வழிகளில் **குழந்தைக்கு கொடுமை** இழைக்கப்படுவது, ரத்த உறவுப் பெற்றோரால் தங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழல்களில் செய்யப்பட்டால் அன்றி, ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும். (S75)
2. குழந்தைக்குப் பொறுப்பான நபர் **குழந்தைகளை பிச்சைக்காரர்களாக ஈடுபடுத்துதல்** அல்லது அவர்களை வேலை பார்க்கச் செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். அத்தகைய குழந்தை சட்டத்துடன் முரண்படும் குழந்தையாகக் கருதப்பட மாட்டாது. அந்த பாதுகாவலர்/பொறுப்பாளர் பொறுப்பிலிருந்தும் குழந்தை அப்புறப்படுத்தப்பட்டு CWC முன்பாக கொண்டுசெல்லப்பட வேண்டும்.(S76 (1), (2))
3. ஒரு குழந்தைக்கு போதையை ஏற்படுத்தும் மது, போதை மருந்துகள் அல்லது மனநிலையை பாதிக்கும் பொருட்களைக் கொடுப்பதன் மூலம் **போதைக்கு உள்ளாக்குவது** (S77) அல்லது மேற்கண்ட பொருள்களைக் கடத்துவதற்கு ஒரு குழந்தையைப் பயன்படுத்துவது (S78)
4. அடிமை ஒப்பந்தத்தின் மூலமாகவும் வருவாயைக் கைப்பற்றிக்கொள்வதன் மூலமாகவும் **வேலைச் சுரண்டல்** (S79).
5. **தத்தெடுப்பதற்கான** விதிகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுவதைப் புறக்கணிப்பது (S 80)
6. எந்தவொரு நோக்கத்திற்காகாவும் ஒரு குழந்தையை விலைக்கு **வாங்குவது மற்றும் விற்பது** (S 81)
7. சட்டவிரோதச் செயலக்காக தீவிரவாதக்குழுக்கள் அல்லது எந்தவொரு வயது வந்த நபர் அல்லது வயது வந்த நபர்களின் குழு குழந்தைகளை **நியமிப்பது** (S 83)
8. ஒரு **குழந்தையை கடத்துவது** (S 84)

9. **ஊனமுற்ற குழந்தைகள்:** மேற்கண்ட குற்றங்கள் ஊனமுற்றவராகச் சான்றளிக்கப்பட்ட குழந்தைக்கு எதிராக செய்யப்படுமானால் இரட்டிப்பு தண்டனை வழங்கத்தக்கதாகும்.(S 85)

**3. ஒரு குழந்தைக்கு பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவையானது என நீங்கள் கருதினால்**

1. பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிற குழந்தை, ஒரு குழந்தைகள் இல்லத்தில் அல்லது பொருத்தமான நபரிடம் விடப்படுவதற்காக, CWCயின் ஒரு தனி உறுப்பினரின் முன் கொண்டுசெல்லப்பட வேண்டும்.(S28(3))
2. பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிற எந்தவொரு குழந்தையும் CWC முன்பாக பின்வருவோரால் கொண்டு செல்லப்படலாம்:
   a. எந்தவொரு காவல்துறை அதிகாரி, சிறப்பு சிறார் காவல் பிரிவு (SJU), குழந்தை நல காவல் அதிகாரி அல்லது மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு பிரிவு(S31 (1) i )
   b. எந்தவொரு அரசு ஊழியர் (S31(1) ii ), சமூகப்பணியாளர் அல்லது பொது அக்கறையுள்ள குடிமகன் (S31 (1) I, iv)
   c. குழந்தை சேவை தொடர்பு மையம் (சைல்டுலைன்) அமைப்புகள், தன்னார்வ அமைப்புகள், என்.ஜி.ஓ அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு (S31 (1) iii )
   d. குழந்தை நல அதிகாரி அல்லது விசாரணை அதிகாரி (S31 (1) iv )
   e. குழந்தை தன் விருப்பப்படியே (S31 (1) vi )
   f. எந்தவொரு செவிலியர், மருத்துவர் அல்லது சிகிச்சை இல்லத்தின் அல்லது மருத்துவமனையின் அல்லது மகப்பேறு இல்லத்தின் நிர்வாகம் (S31 (1) vii )
3. **24 மணி நேரத்திற்குள் தகவல் அளித்தல்** கைவிடுப்பட்ட அல்லது கைவிடப்பட்டதாகக் கூறுகிற, தொலைந்து போன அல்லது குடும்ப ஆதரவு இல்லாத ஒரு அனாதைக் குழந்தைக்கு பொறுப்பேற்கும் எந்தவொரு தனி நபர் அல்லது அமைப்பு பின்வருமாறு செயல்பட வேண்டும் :
   **a.** குழந்தை சேவை தொடர்பு மையத்தில், அருகில் உள்ள காவல்நிலையத்தில் CWC அல்லது மாவட்ட குழந்தைப் பாதுகாப்புப் பிரிவில் (DCPU) தெரிவிக்க வேண்டும் அல்லது;
   b. குழந்தையை ஒரு பதிவு பெற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனத்தில் ஒப்படைக்க வேண்டும் (S32(1))
4. தகவல் தெரிவிக்காமல் இருப்பது ஒரு குற்றச் செயலாகும் (S33) இது ஆறு மாத சிறைத் தண்டனை அல்லது 10,000 ரூபாய் அபராதத்திற்கு உரியதாகும் (S34)

**4. சிறார் நீதி வாரியங்கள் (JJB)**

**4.1 வாரியங்களும் அதிகாரங்களும்**

1. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு சிறார் நீதி வாரியம் இருக்க வேண்டும். தேவைப்பட்டால் அந்த மாவட்டத்தில், கூடுதலாக JJBகள் இருக்கலாம் (S4(1))
2. JJBகளுக்கு அவற்றின் அதிகார வரம்புக்கு உட்பட்டு, சட்டத்துடன் முரண்படும் குழந்தைகள் தொடர்பாக, இந்தச் சட்டத்தின் கீழ் அனைத்து நடைமுறைகளையும் மேற்கொள்ள அதிகாரம் உண்டு (S4(8)1)

3. இந்த அதிகாரங்கள் உயர்நீதிமன்றத்திற்கும் சிறார் நீதிமன்றத்திற்கும் (S19ன் கீழ்) அல்லது மேல்முறையீடுகளில் இவற்றுக்கு உண்டு (S4(8)2)

## 4.2 JJB உறுப்பினர்கள் அமைப்பு (S4(2))

1. தலைமை பெருநகர் குற்றவியல் நடுவர் அல்லது தலைமை நீதித்துறை நடுவர் அல்லாத பெருநகர் குற்றவியல் நடுவர் அல்லது நீதித்துறை நடுவர் (குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்)
2. இரண்டு சமூகப் பணியாளர்கள் (இவர்களில் ஒருவராவது பெண்ணாக இருக்க வேண்டும்)
3. குழந்தைகள் தொடர்பான சுகாதாரம், கல்வி அல்லது நல நடவடிக்கைகளில் குறைந்தது ஈடுபட்டிராத அல்லது குழந்தை மனநிலை, மனநலம், சமூகவியல் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் பட்டம் பெற்று தொழில்முறையில் பணியாற்றிக்கொண்டிருப்பவர் அல்லாத எந்தவொரு சமூகப் பணியாளரும் JJB உறுப்பினராக நியமிக்கப்படக் கூடாது (S4(3))
4. பின்வரும் பின்னணிகள் உள்ள எவரொருவரும் JJB உறுப்பினராகத் தேர்வு பெறத் தகுதியுள்ளவராக மாட்டார் (S4(4)):
   i. கடந்த காலத்தில் மனித உரிமை மீறல் அல்லது குழந்தை உரிமை மீறல் ஆகிய பின்னணிகள் உள்ளவர்.
   ii. நெறி சார்ந்த கொடுமைகள் தொடர்பான குற்றத்தைச் செய்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர்
   iii. மத்திய அரசுப் பணி அல்லது மாநில அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர் அல்லது விலக்கப்பட்டவர்
   iv. வேறு எவ்வகையான மனித உரிமை மீறல் அல்லது நெறியற்ற செயலில் எப்போதேனும் ஈடுபட்டவர்
5. நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் நியமன நிலைப் பயிற்சியும், உணர்திறன் பயிற்சியும் நியமிக்கப்பட்ட 60 நாட்களுக்குள் அளிக்கப்படும் (S4(5))

## 4.3. JJB செயல்பாடுகளும் பொறுப்புகளும்

1. நடைமுறையின் ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தை, குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் **தகவலறிந்த பங்கேற்பு** இருப்பதை உறுதிப்படுத்துதல் (S8(3)a)
2. நடைமுறை முழுவதிலும் **குழந்தையின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது** உறுதிப்படுத்துதல் (S8(3)b)
3. குழந்தைக்கு சட்ட சேவை அமைப்பு மூலம் **சட்ட உதவி** கிடைப்பதை உறுதிப்படுத்துதல் (S8(3)c)
4. தேவைப்படுமானால் **விளக்கமளிப்பவர் அல்லது மொழிபெயர்ப்பாளர்** ஏற்பாடு செய்தல் (S8(3)d)
5. JJB முன் முதலில் கொண்டுவரப்பட்ட தேதியிலிருந்து 15 நாள் காலத்திற்குள் வழக்குத் தொடர்பாக ஒரு **சமூக விசாரணை** மேற்கொள்ளுதல் மற்றும் சமூக விசாரணையைத் தாக்கல் செய்தல் (S8(3)e) (குழந்தை நல அலுவலருக்கு ஒரு விசாரணை அலுவலர் இல்லை அல்லது சமூகப் பணியாளர் இல்லை என்ற நிலையில் மட்டுமே)

6. சட்டத்துடன் முரண்படும் குழந்தையின் பராமரிப்பில் ஈடுபடுதல் (S8(3)g)
7. வழக்கை முடித்து இறுதி ஆணை பிறப்பித்தல்; அது, குழந்தையின் மறுவாழ்வுக்கான **தனிப்பட்ட பராமரிப்புத் திட்டம்** உள்ளடங்கியதாக இருக்க வேண்டும் (S8(3)h)
8. சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளைப் பராமரிப்பது தொடர்பாக **பொருத்தமான நபர்களை அறிவிப்பதற்காக விசாரணை** மேற்கொள்ளுதல் (S8(3)i)
9. சட்டத்துடன் முரண்படும் குழந்தைகளுக்கான உறைவிடங்களுக்கு ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஒருமுறையாவது **நேரடி ஆய்வு செய்தல்**; மேம்பாட்டுக்கான நடவடிக்கைக்குப் பரிந்துரைத்தல் (S8(3)j)
10. சட்டத்துடன் முரண்படும் எந்தவொரு குழந்தைக்கும் எதிராக செய்யப்படும் குற்றச்செயல்கள் தொடர்பாக **முதல் தகவலறிக்கை** பதிவு செய்ய காவல்துறைக்கு ஆணையிடுதல் (S8(3)l)
11. சிறைகளில் ஆய்வு செய்தல், கண்காணிப்பு இல்லங்களுக்கு **இத்தகைய குழந்தைகளை மாற்ற** உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் (S8(3)m)
12. **18 வயதுள்ள குழந்தைகள்** : விசாரணையின்போது ஒரு குழந்தை 18 வயதை அடையுமானால் அத்தகைய குழந்தை விசாரணை மற்றும் ஆணை பிறப்பித்தல் நோக்கங்களுக்காக ஒரு குழந்தையாகவே அப்போதும் நடத்தப்பட வேண்டும் (S5). ஒரு குழந்தை 18 வயதை அடைவதற்கு முன்பே ஒரு குற்றத்தைச் செய்ததற்காக கைது செய்யப்படுமானால் அத்தகைய குழந்தை விசாரணை நோக்கத்திற்காக ஒரு குழந்தையாகவே அப்போதும் கருதப்பட வேண்டும்; JJBயால் பிணையில் விடுவிக்கப்படும் நிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் (S6(1),(2))
13. ஒரு குழந்தை JJB அதிகார வரம்பிற்கு வெளியே உள்ள இடத்திலிருந்து வருமானால், விசாரணை முடிந்து இறுதியாணை பிறப்பிக்கப்பட்டவுடன், இடமாற்ற ஆணை கிடைத்த 15 நாட்களுக்குள் மாற்றுவதற்கு JJB ஆணையிட வேண்டும் (S95(1))
14. ஒரு குழந்தையுடன் ஒரு பெண் காவல்துறை அதிகாரி இருக்க வேண்டும் (S95(2))

## 5. காவல்துறை பொறுப்பு (சிறு குற்றங்கள்)

### 5.1 காவல்துறையினர் பின்வருமாறு செயல்பட வேண்டும்:

1. குற்றச்செயல் பற்றி தினசரிக் குறிப்பேட்டில் தகவல் பதிவு செய்ய வேண்டும், அதனை சிறார் நல அலுவலரிடம் (JWO) ஒப்படைக்க வேண்டும்
2. குழந்தை கைது செய்யப்படும் சூழல்கள் தொடர்பாகவும், குற்றச்சாட்டு தொடர்பாகவும் சமூகப் பின்னணி அறிக்கை (SBR) தயாரிக்க வேண்டும்; SBR அறிக்கையை 24 மணி நேரத்திற்குள் JJBக்குஅனுப்ப வேண்டும்.
3. வயது தொடர்பாக வயதுச் சான்றிதழ் அல்லது மருத்துவக் குழுவின் கருத்தைப் பெற வேண்டும்.

4. சிறப்பு சிறார் காவல் பிரிவு (SJPU), குழந்தையின் பெற்றோர்/ பாதுகாப்பாளர் மற்றும் விசாரணை அலுவலருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
5. வழக்கில் NGOக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.
6. குற்றத்தில் ஈடுபடுத்துகிற குழந்தைகள் வழக்கில் சம்பந்தப்படுவார்களானால், அவர்களிடமிருந்து சிறாரைப் பிரித்து வைக்க வேண்டும்.

**5.2 காவல்துறையினர் பின்வருமாறு செயல்படக் கூடாது:**

1. சிறார் மீது FIR பதிவு செய்தல்
2. கைது செய்யப்பட்ட சிறாரைக் காவலில் வைத்தல் அல்லது விலங்கிடுதல்
3. குழந்தையைத் திட்டுதல் அல்லது பழி சொல்லுதல்

**6. காவல்துறை பொறுப்பு (கடும் குற்றங்கள்)**

**6.1 காவல்துறையினர் பின்வருமாறு செயல்பட வேண்டும்:** கட்டாயம் தேவைப்படுகிறது என்ற நிலையில் மட்டுமே சிறார் மீது FIR பதிவு செய்தல் அல்லது கைது செய்தல்

1. JWO மட்டுமே விசாரணை நடத்துதல்
2. SJPU/ பெற்றோர்/ பாதுகாப்பாளர் / விசாரணை அலுவலருக்குத் தகவல் தெரிவித்தல்
3. குற்றத்தில் ஈடுபடுத்துகிற பெரியவர்கள் சம்பந்தப்படுவார்களானால் அவர்களிடமிருந்து சிறார்களைப் பிரித்து வைத்தல்
4. குழந்தையின் வாக்குமூலம் பெறப்படும்போது பெற்றோர்/பாதுகாப்பாளர்/ஆதரவான நபர் முன்னிலையில் பெறுதல்; மற்றும் விசாரணையையும் அதேபோல் நடத்துதல்
5. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 167வது பிரிவின்படி விசாரணையை முடித்தல்

**6.2 காவல்துறையினர் பின்வருமாறு செயல்படக் கூடாது:**

1. சட்டப்படி தேவைப்பட்டாலன்றி சிறாரை, (பெரியவர்களுக்கான) வழக்கமான முறையில் கைது செய்தல்
2. குழந்தையைத் திட்டுதல் அல்லது பழி சொல்லுதல்
3. கைது செய்யப்பட்ட சிறாரைக் காவலில் வைத்தல் அல்லது விலங்கிடுதல்

**6. குழந்தை நலக்குழு (CWC)**

**6.1 அமைப்பும் உறுப்பினர்களும்**

1. மாநில அரசு அதிகாரப்பூர்வ அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட CWCகளை ஏற்படுத்த வேண்டும் (S27(1))

| வ. எண் | கிராமம் | மாவட்டம் | மாநிலம் |
|---|---|---|---|
| 1 | | செயலர் மற்றும் | தலைவர் மற்றும் 4 இதர |

| | | | |
|---|---|---|---|
| | | தேவைப்படுகிற இதர பணியாளர்கள் (S27(3)) | உறுப்பினர்கள் குறைந்தது ஒரு பெண் மற்றும் குழந்தைகள் பிரச்சனைகளில் வல்லுநராக உள்ள ஒருவர் (S27(2)) |

2. குழந்தைகளின் சுகாதாரம், கல்வி அல்லது நலச் செயல்பாடுகளில் குறைந்தது 7 ஆண்டுகள் செயல்முனைப்போடு சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே அல்லது பட்டம் பெற்று தொழில்முறையில் செயல்படுகிறவர் மட்டுமே (அல்லது பரிந்துரைக்கப்படக்கூடிய வேறு தகுதிகள் உள்ளவர்கள் மட்டுமே) CWCக்கு நியமிக்கப்பட வேண்டும் (S27(4),(5))
3. CWCயில் உறுப்பினர்கள் அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் பணியாற்றலாம் (S27(6))

## 7.2 CWC செயல்பாடுகளும் பொறுப்புகளும்

1. இந்தச் சட்டத்தின் கீழ் குழந்தைகளின் நலன் தொடர்பாக அனைத்துப் பிரச்சனைகள் குறித்தும் **விசாரணை நடத்துதல்** (S30(ii))
2. குழந்தை நல அலுவலர்கள் அல்லது விசாரணை அலுவலர்கள் அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்புப் பிரிவு அல்லது அரசு சாரா அமைப்புகள் (NGO) **சமூக விசாரணை** நடத்தவும் CWC முன்பாக அறிக்கை தாக்கல் செய்யவும் ஆணையிடுதல் (S30(iii))
3. பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்**கான பராமரிப்பாளர்களுக்குப் பொருத்தமான நபர்களை அறிவிப்பதற்கான** விசாரணை மேற்கொள்ளுதல் (S30 (iv) ) மற்றும் குழந்தையை ஒரு **குழந்தைப் பராமரிப்பு இல்லத்தில் வைத்திருக்க** ஆணையிடுதல் (S30(v))
4. **குழந்தையின் தனிப்பட்ட பராமரிப்புத் திட்டத்தின்** அடிப்படையில், பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, உரிய மறுவாழ்வு அல்லது மீட்பு நடவடிக்கைகள் உறுதிப்படுத்துதல் (S30(vi))
5. சட்டத்துடன் முரண்படும் குழந்தையின் பராமரிப்பில் ஈடுபடுதல் (S8(3)g)
6. குழந்தையின் வயது, பாலினம், இயலாமை மற்றும் தேவைகளின் அடிப்படையிலும் நிறுவனத்திற்கு உள்ள வாய்ப்புகளை மனதில் கொண்டும் **நிறுவனம் சார்ந்த ஆதரவு** அளித்தல் (S30(vii))
7. பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளின் உறைவிடங்களில் ஒவ்வொரு மாதமும் **குறைந்தது இரண்டு முறை நேரடி ஆய்வு செய்தல்** (S30(viii))
8. பெற்றோர் முடிவுப்படி சரணடைதல் பத்திரத்தைச் செயல்படுத்துவதற்கு சான்றளித்தல், **குடும்பத்தை ஒன்றாக வைத்திருக்க அனைத்து முயற்சிகளும்** மேற்கொள்ளுதல் (S30(ix)
9. **கைவிடப்பட்ட அல்லது தொலைந்துபோன குழந்தைகள் மீட்கப்படுவதற்கும்** அவர்களது குடும்பங்களிடம் ஒப்படைப்படுவதற்கும் அனைத்து முயற்சிகளையும் உறுதிப்படுத்துதல் (S30(x)) மற்றும் அனாதை, கைவிடப்பட்ட மற்றும் சரணடைந்த குழந்தைகள், உரிய விசாரணைக்குப் பின் **தத்தெடுக்கப்படுவதற்கு சட்டப்பூர்வமாக உரியவர்கள்** என அறிவிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் (S30(xi))

10. பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் குறித்த தகவல்களைத் **தானாக முன்வந்து தெரிந்துகொள்ளுதல்** மற்றும் அவர்களைச் சென்றடைதல் (S30(xii))
11. SJPU அல்லது உள்ளூர்க் காவல்துறையிடம் CWCயிடம் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் என தெரிவிக்கப்பட்ட **பாலியல் ரீதியாகத் தவறாக நடத்தப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வுக்கு** நடவடிக்கை எடுத்தல் (S30(xiii))
12. மாவட்ட குழந்தைப் பாதுகாப்புப் பிரிவு அல்லது மாநில அரசின் ஆதரவோடு, குழந்தைகளின் பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள காவல்துறை, தொழிலாளர் துறை மற்றும் இதர அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் (S30(xv))
13. குழந்தைப் பராமரிப்பு நிறுவனம் எதிலாவது ஒரு குழந்தை **தவறாக நடத்தப்படுவதைப் பற்றிய புகார்** வருமானால், CWC விசாரணை நடத்தி காவல்துறைக்கு ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் (S30(xvi))
14. குழந்தைகளுக்காக **உரிய சட்டச் சேவைகள்** கிடைக்கச் செய்தல் (S30(xvii))
15. தங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட உடல்ரீதியான, உணர்ச்சி சார்ந்த மற்றும் சமூகக் காரணிகளால் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் ஒரு குழந்தையை சரணடைய வைக்கிறபோது, வகுத்துரைக்கப்பட்ட நடைமுறையின் கீழ் CWC விசாரணையும் கலந்தாய்வும் நடத்த வேண்டும். CWC ஏற்றுக்கொள்ளும் நிலையில், பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரால் ஒரு சரண் பத்திரம் அளிக்கப்படலாம், அவர்களுக்குத் தங்களது முடிவை மறுபரிசீலனை செய்ய இரண்டு மாத அவகாசம் தரப்படும் (S35(1),(2),(3))

### 7.3 விசாரணை நடைமுறை

1. CWC முன்பாக கொண்டுசெல்லப்படும்போது, CWC ஒரு **விசாரணையை மேற்கொள்ளும்;** குழந்தையை ஒரு குழந்தைகள் இல்லம் அல்லது ஒரு பொருத்தமான இடம் அல்லது ஒரு பொருத்தமான நபரிடம் அனுப்ப ஆணையிடலாம்; ஒரு சமூகப் பணியாளர் அல்லது குழந்தை நல அலுவலர் அல்லது குழந்தை நலக் காவல் அதிகாரியின் விரைவான சமூக விசாரணைக்கு ஆணையிடலாம். CWC தனது இறுதி ஆணையை 4 மாத காலத்திற்குள் பிறப்பிப்பதற்கு ஏதுவாக இந்த விசாரணை 15 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் (S36(2))
2. 6 வயதுக்குட்பட்ட **அனாதைக் குழந்தைகள் அல்லது கைவிடப்பட்ட அல்லது சரணடைந்த குழந்தைகள்** சிறப்பு தத்தெடுப்பு முகமை இருக்கக்கூடிய இடத்திற்கு அனுப்பப்பட வேண்டும் (S36(1)). அனாதைக் குழந்தைகளாகவோ கைவிடப்பட்ட குழந்தைகளாகவோ இருக்கும் நிலையில் பெற்றோர்களை அல்லது பாதுகாப்பாளர்களைக் கண்டறிவதற்கான அனைத்து முயற்சிகளையும் CWC மேற்கொள்ள வேண்டும். அந்தக் குழந்தைகள் அனாதைகள்தான் அல்லது கைவிடப்பட்டவர்கள்தான் என்று நிறுவப்படும் நிலையில் அவர்கள் தத்தெடுக்கத்தக்கவர்கள் என அறிவிக்க வேண்டும். குழந்தைகள் 2 வயதிற்குட்பட்டவர்களாக இருப்பார்களாயேனால் CWC முன் கொண்டுசெல்லப்பட்ட 2 மாதத்திற்குள் இந்த அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்; குழந்தைகள் 2 வயதிற்கு

மேற்பட்டவர்களாக இருப்பார்களேயானால் 4 மாதத்திற்குள் இந்த அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும் (S38(1)).

3. **விசாரணையைத் தொடர்ந்து** குழந்தைக்கு குடும்பம் இல்லை அல்லது வெளியே தெரியக்கூடிய ஆதரவு இல்லை என்ற முடிவுக்கு CWC வருமானால், அல்லது குழந்தைக்குத் தொடர்ச்சியான பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிறது என்ற முடிவுக்கு CWC வருமானால் அந்தக் குழந்தையை CWC ஒரு சிறப்பு தத்தெடுப்பு முகமை (6 வயதுக்குட்பட்ட நிலையில்) ஒரு குழந்தைகள் இல்லம் அல்லது ஒரு பொருத்தமான இடம் அல்லது நபர் அல்லது வளர்ப்புக் குடும்பத்திற்கு, மறுவாழ்விற்கான பொருத்தமான வழிகள் கண்டறியப்படும் வரையில் அல்லது குழந்தைக்கு 18 வயது ஆகும்வரையில் அனுப்பி வைக்கலாம். 6 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இடம் குறித்து வகுத்துரைக்கப்படும் முறையில் ஆய்வு செய்ய வேண்டும் (S36(3)).
4. காத்திருக்கும் வழக்குகளை ஆய்வு செய்வது தொடர்பாக மாவட்ட நீதித்துறை நடுவருக்கு **காலாண்டு அறிக்கைகளை** CWC தாக்கல் செய்யும் (S36(4)). ஆணைகள் பிறப்பிக்கப்பட்டும் மூன்று மாதங்கள் வழக்குகளை CWC கவனிக்காமல் இருக்குமானால், மாநில அரசு அதனைக் கலைத்துவிட்டு புதிய CWC யை அமைக்கும் (S36(5),(6))

## 7.4 குழந்தைக்கு பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிறது என்று கண்டறியப்படும் நிலையில் (2: குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பிரிவையும் பார்க்கவும்).

1. CWC சமூக விசாரணையை அறிக்கையை பரிசீலிக்கும், குழந்தை ஒரு கருத்தை மேற்கொள்ளும் அளவுக்கு போதுமான முதிர்ச்சி அடைந்திருக்குமானால் அக்குழந்தையின் விருப்பத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்; ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணைகளை CWC பிறப்பிக்கும்;

   a. குழந்தைக்குப் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிற என்ற அறிவிப்பு (S37(1)a)
   b. குழந்தையைப் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரிடம் ஒப்படைத்தல் (S37(1)b)
   c. குடும்பத்தைக் கண்டறிய முடியாத நிலையில் அல்லது குழந்தையின் நலனுக்கு உகந்தது என்று முடிவு செய்யும் நிலையில் குழந்தையை ஒரு குழந்தைகள் இல்லம் அல்லது பொருத்தமான இடம் அல்லது தத்தெடுக்கப்புக்காக சிறப்பு தத்தெடுப்பு முகமை அல்லது தற்காலிகப் பராமரிப்பில் விட வேண்டும் (S37(1)c)
   d. நீண்டகால அல்லது தற்காலிகப் பராமரிப்பிற்குப் பொருத்தமான நபரிடம் விடவேண்டும்(S37(1)d)
   e. பிரிவு 44ன் கீழ் வளர்ப்புக் குடும்பப் பராமரிப்பு (S37(1)e)
   f. பிரிவு 45ன் கீழ் புரவலர் ஆணை (S37(1)f)
   g. குழந்தை யாருடைய பராமரிப்பில் விடப்படுகிறதோ அந்த நபர்கள், நிறுவனங்கள் அல்லது இடங்களுக்கு, குழந்தையின் மறுவாழ்வு தொடர்பான ஆணைகள் பிறப்பித்தல் மற்றும் உடனடி உறைவிடம் மற்றும் மருத்துவ கவனிப்பு, உளவியல் ஆதரவு, மன நல ஆதரவு, கலந்தாய்வு, தொழில்சார் சிகிச்சை அல்லது நடத்தை சீர்திருத்த சிகிச்சை,

திறன்பயிற்சி, சட்ட உதவி மற்றும் கல்விச் சேவைகள் போன்ற சேவைகளுக்கு ஆணையிடல் (S37(1)g)

h. பிரிவு **38**ன் கீழ் குழந்தை சட்டப்பூர்வமாக தத்தெடுக்கப்பட உரியது என அறிவித்தல் (S37(1)h)
i. வளர்ப்புக் குடும்பப் பராமரிப்புக்குப் பொருத்தமான நபர்களை அறிவித்தல் (S37(1)i)
j. பிரிவு **46**ன் கீழ் பராமரிப்புக்கு பிந்தைய ஆதரவு கிடைக்கச் செய்தல் (S37(1)ii)

**7. மறுவாழ்வு மற்றும் மீண்டும் சமூகத்துடன் இணைத்தல்**

1. குழந்தைக்கான தனிப்பட்ட பராமரிப்புத் திட்டத்தின் அடிப்படையில், குடும்பத்திடம் அல்லது பாதுகாப்பாளரிடம் மீண்டும் ஒப்படைத்தல், தத்தெடுத்தல் அல்லது வளர்ப்புக் குடும்பப் பராமரிப்பு போன்ற குடும்பம் சார்ந்த பராமரிப்பு என்று தேர்வு செய்து மேற்கொள்ளுதல். குழந்தைகளைப் பிரித்து வைப்பது அவர்களது நலனுக்கு உகந்தது என்ற நிலை இருந்தாலன்றி, பராமரிப்பில் குழந்தைகளை ஒன்றாகப் பயிற்றுவிப்பதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் (S39(1))
2. **சட்டத்துடன் முரண்படும் குழந்தைகள்:** JJBயால் கண்காணிப்பு இல்லங்களில் அல்லது சிறப்பு இல்லங்களில், அல்லது பாதுகாப்பான இடங்களில் அல்லது பொருத்தமான இடத்தில் அல்லது பொருத்தமான நபரிடத்தில் விடப்பட்டிருப்பார்களானால், பிணையில் விடுவிக்கப்படாத குழந்தைகளுக்கு மறு வாழ்வு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் (S39(2))
3. **பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள்:** குழந்தைகள் எங்கே விடப்பட்டிருந்தாலும் மறுவாழ்வு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் (S39(3)).
4. 18 வயதை அடையும் எந்தவொரு குழந்தையும் அவர்களது மறு ஒருங்கிணைப்புக்கு உதவிடும் வகையில் நிதி ஆதரவு வழங்கப்படலாம் (S46)

**8. வளர்ப்புப் பராமரிப்பு:**

1. பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் ஒரு குறுகிய காலத்திற்கு அல்லது நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு ஒரு CWC ஆணை மூலமாக வளர்ப்புப் பராமரிப்பின் கீழ் (குழு வளர்ப்புப் பராமரிப்பு உட்பட) விடப்படலாம் (S44(1))
2. வளர்ப்புக் குடும்பத்தைத் தேர்வு செய்வது என்பது குழந்தைகளைப் பராமரிப்பதில் அந்தக் குடும்பத்தின் திறன், ஆர்வம், தகுதி மற்றும் முன்அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் இருக்க வேண்டும் (S44(2)). குழந்தைகளின் நலனுக்கு உகந்தது என்று முடிவு செய்யப்பட்டாலன்றி, குழந்தைகளை வளர்ப்புக் குடும்பங்களில் ஒன்றாகவே வைத்திருக்க வேண்டும் (S44(3)).
3. வளர்ப்புப் பராமரிப்புக்காக மாநில அரசு மாதாந்திர நிதியுதவி வழங்க வேண்டும் (S44(4)).
4. குழந்தையின் பெற்றோர் பொருத்தமற்றவர்கள் அல்லது தகுதியற்றவர்கள் என CWCயால் கண்டறியப்படும் நிலையில், அந்தப் பெற்றோர் குழந்தைகளை சென்று பார்ப்பது குழந்தைகளின்

நலனுக்கு உகந்ததல்ல என்ற முடிவுக்கு CWC வந்தாலன்றி, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அந்தப் பெற்றோர் வளர்ப்புக் குடும்பத்துடன் உள்ள தங்களது குழந்தைகளை நேரில் சென்று பார்த்து வரலாம் (S44(5)).

5. குழந்தைக்குக் கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து வழங்குவதும், குழந்தையின் ஒட்டுமொத்த நலனை உறுதிப்படுத்துவதும் வளர்ப்புக் குடும்பத்தின் பொறுப்பாகும் (S44(6)).
6. வளர்ப்புக் குடும்பத்தை CWC மாதந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும், குழந்தையைப் பராமரிப்பதில் அவர்கள் அக்கறையின்றி இருப்பதாகக் கண்டறியப்படுமானால் அவர்களிடமிருந்து குழந்தையை அப்புறப்படுத்த வேண்டும் (S44(8)).
7. தத்தெடுக்கத்தக்கவர்கள் என CWCயால் கண்டறியப்படாத எந்தவொரு குழந்தையும் நீண்டகால வளர்ப்புப் பராமரிப்பிற்கு விடப்படக் கூடாது (S44(9))

**9. புரவலர் ஏற்பாடு**

1. குழந்தைகளுக்கான புரவலர் ஏற்பாட்டு திட்டங்களுக்குரிய விதிகளை மாநில அரசு உருவாக்க வேண்டும். அது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்:
   a. குழந்தையின் தாய் ஒரு விதவை, மணமுறிவு பெற்றவர் அல்லது குடும்பத்தால் கைவிடப்பட்டவர் என்ற நிலையில் (S45(2)i)
   b. குழந்தை அனாதையாக இருந்து, வேறொரு குடும்பத்துடன் இருக்கும் நிலையில் (S45(2)ii)
   c. பெற்றோர்கள் உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் (S45(2)iii)
   d. பெற்றோர்கள் விபத்தின் காரணமாக செயல்பட முடியாதவர்களாக, பொருளாதார ரீதியாகவும், நேரடியாகவும் குழந்தையைப் பராமரிக்க முடியாதவர்களாக இருக்கும் நிலையில் (S45(2)iv)
2. புரவலர் ஏற்பாடு என்பதில் குடும்பங்களுக்கும், குழந்தைகள் இல்லங்களுக்கும், சிறப்பு இல்லங்களுக்கும், குழந்தைகளின் மருத்துவ, ஊட்டச்சத்து, கல்வி மற்றும் இதர தேவைகளுக்கான செலவுகளை ஈடுகட்ட ஆதரவளிப்பது உள்ளடங்கும் (S45(4))

**10. சட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு உறைவிட வசதிகள்**

**11.1 வசதிகள்**

| வசதி | வட்டாரம்/பொறுப்பு | விடப்படும் குழந்தைகளின் வகை | சட்டத்தின் பிரிவு |
|---|---|---|---|
| விசாரணைக் காலத்தில் தற்காலிகமாக குழந்தைகளை ஏற்பது, பராமரிப்பது மற்றும் மறுவாழ்வுக்கான **கண்காணிப்பு இல்லம்.** குழந்தைகள் அவர்களது வயது, பாலினம், உடல் மற்றும் மனநிலை மற்றும் குற்றத்தின் தன்மையைப் பொறுத்துப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். | ஒவ்வொரு மாவட்டத்திலும், தனிப்பட்ட முறையிலோ அல்லது தன்னார்வ அமைப்புகள் அல்லது அரசு சாரா அமைப்புகள் மூலமாக, மாநில அரசால் | சட்டத்துடன் முரண்படுவதாகக் கூறப்படும் எந்தவொரு குழந்தையும் | S41<br>S47 |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்படுத்தப்பட்டிருப்பது/ பராமரிக்கப்படுவது | | |
| பிரிவு S 18ன் கீழ் JJBயின் ஆணையின்படி குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் சீர்திருத்த சேவைக்காக **சிறப்பு இல்லம்.** குழந்தைகள் அவர்களது வயது, பாலினம், உடல் மற்றும் மனநிலை மற்றும் குற்றத்தின் தன்மையைப் பொறுத்துப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். | ஒவ்வொரு மாவட்டத்திலும், தனிப்பட்ட முறையிலோ அல்லது தன்னார்வ அமைப்புகள் அல்லது அரசு சாரா அமைப்புகள் மூலமாக, மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டிருப்பது/ பராமரிக்கப்படுவது | சட்டத்துடன் முரண்படுவதாகக் கூறப்படும் குழந்தைகள், ஒரு குற்றத்தை செய்ததாகக் கண்டறியப்படும் குழந்தைகள் | S18(1)g |
| **பாதுகாப்பான இடம்:** விசாரணை நடைமுறையின்போது மற்றும் குழந்தைகள் அல்லது நபர்கள் ஒரு குற்றத்திற்காக குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்போது தனியான இடங்கள் இருக்க வேண்டும். | ஒவ்வொரு மாநிலத்திலும் குறைந்தது ஒரு இடத்தை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும். | ஒரு கடுமையான குற்றத்தை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள அல்லது குற்றவாளியென அறிவிக்கப்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட நபர் அல்லது 16 முதல் 18 வயது வரையுள்ள சட்டத்துடன் முரண்படும் குழந்தை | S49 |
| பராமரிப்பு. சிகிச்சை, கல்வி, பயிற்சி, வளர்ச்சி மற்றும் மறுவாழ்வுக்கான **குழந்தைகள் இல்லங்கள்** | ஒவ்வொரு மாவட்டத்திலும், தனிப்பட்ட முறையிலோ அல்லது தன்னார்வ அமைப்புகள் அல்லது அரசு சாரா அமைப்புகள் மூலமாக, மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டிருப்பது/ பராமரிக்கப்படுவது | பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள் | S50 |
| அரசாங்க நிறுவனத்தால் அல்லது தன்னார்வ அமைப்பால் அல்லது அரசு சாரா அமைப்பால் நடத்தப்படுகிற, JJB அல்லது CWC அங்கீகாரம் பெற்ற **பொருத்தமான இடம்** | | எந்தவொரு குறிப்பான நோக்கத்திற்காகவும் ஒரு குழந்தைக்கு தற்காலிகப் பொறுப்பேற்க தகுதி | S51 |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| துதுக்ஷ அல்லது ஊறுஊ அங்கீகாரம் பெற்ற **பொருத்தமான நபர்** | | பராமரிப்பு, பாதுகாப்பு, சிகிச்சைக்காகுழந்தைக ளை தற்காலிகமாக ஏற்பது | S52 |

**11.2 பதிவு பெற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் செய்ய வேண்டியவை:**

1. உணவு, உறைவிடம், உடை மற்றும் மருத்துவ கவனிப்பு போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குதல் (S53(1)i)
2. சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு சக்கர நாற்காலி, செயற்கை அங்கங்கள், காது கேட்கும் கருவிகள், பிரெய்ல் வாசிப்புக் கருவிகள் அல்லது தேவைப்படும் எந்தவொரு அவசியமான கருவிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குதல் (S53(1)ii)
3. சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகள் உரிய கல்வி (6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு, இதில் கல்வி உரிமைச் சட்ட உரிமைகள் பொருந்தும்) (S53(1)iii)
4. திறன் மேம்பாடு, தொழிற்சாற் சிகிச்சை, வாழ்க்கைத் திறன் கல்வி (S53(1)iv, v)
5. குழந்தையின் குறிப்பான தேவையைப் பொறுத்து மன நல தலையீடுகள் மற்றும் கலந்தாய்வுகள் (S53(1)vi)
6. மனமகிழ்வு, விளையாட்டு மற்றும் கலாச்சார செயல்பாடுகள் (S53(1)vii)
7. சட்ட உதவிகள் (S53(1)viii) மற்றும் தேவைப்படுமானால் சட்ட ஆலோசனை சேவைகளைப் பெறுதல் (S53(1)viii, ix)
8. வழக்கு நிர்வாகம் மற்றும் தனிப்பட்ட பராமரிப்புத் திட்டம் தயாரித்தல் மற்றும் பின்தொடர்தல் (S53(1)x)
9. பிறப்புப் பதிவு (S53(1)xi) மற்றும் அடையாளச் சான்று பெறுவதற்கான உதவி (S53(1)xii)
10. அருகில் உள்ள சிறப்பு தத்தெடுப்பு முகமையுடன் முறையான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுதல் (S66(2))

**11.3 பதிவு பெற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் செய்யக்கூடாதவை:**

1. குழந்தையை உடல் சார்ந்த தண்டனைக்கு உள்ளாக்கக்கூடாது (இது நிறுவனத்தின் பொறுப்பாளராக உள்ள எவர் ஒருவருக்கும், வேலை செய்பவருக்கும் பொருந்தும்) (S82(1))
2. இந்தக் குற்றத்தைச் செய்ததற்காக குற்றவாளியென அறிவிக்கப்படும் எவரொருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டு, அதன்பிறகு நேரடியாக குழந்தைகளுடன் பணியாற்றுவதிலிருந்து தடுக்கப்படுவார் (S82(2))

**11.4 நிறுவனத்திலிருந்து இடமாறுதல், விடுவிப்பு மற்றும் விடுப்பு**

1. JJB அல்லது CWC பரிந்துரை அடிப்படையில், மாநில அரசு ஒரு குழந்தைகள் இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பொருத்தமான இடம் அல்லது பொருத்தமான நபர்களுக்கிடையே இடமாறுதல் செய்யலாம் (S96(1))
2. இடமாறுதல் மொத்தம் தங்கியிருக்கும் காலத்தை அதிகரிப்பதாக இருக்கக்கூடாது (S96(3))
3. குழந்தைக்கு பொறுப்பேற்கவும், கல்வியளிக்கவும், பயிற்சியளிக்கவும் முன்வருகிற அறிவிக்கப்பட்ட நபரின் கண்காணிப்பில் குழந்தை பெற்றோருடன் அல்லது

பாதுகாப்பாளருடன் வாழ்வதற்கு JJB அல்லது CWC குழந்தையை முற்றிலுமாக அல்லது நிபந்தனையுடன் விடுவிப்பது குறித்துப் பரிசீலிக்கலாம் (S97(1))

4. தேர்வு, உறவினர்களின் திருமணம் அல்லது மரணம், பெற்றோர்களுக்கு ஏற்படும் விபத்து அல்லது கடுமையான நோய் போன்ற முக்கிய நிலைமைகளில், பொதுவாக 7 நாட்களுக்கு மிகாத காலத்திற்குக் கண்காணிப்பின் கீழ், குழந்தை விடுப்பில் செல்ல JJB அல்லது CWC அனுமதி அளிக்கலாம் (S98(1))

## 12. தத்தெடுப்பு

### 12.1 தத்தெடுப்புக்கான நிபந்தனைகள்

1. குழந்தை ஒரு உறவினரிடமிருந்து இன்னொரு உறவினரால் அவரது மதம் எதுவாக இருந்தாலும், தத்தெடுக்கப்படலாம் (S56(2))
2. இந்தச் சட்டத்தின் விதிகள் எதுவும் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் – **1956**ன் கீழ் குழந்தைகளைத் தத்தெடுப்பதற்குப் பொருந்தாது (S56(3))
3. ஒரு குழந்தையின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பொறுப்பை வெளிநாட்டில் உள்ள இன்னொரு நபருக்கு மாற்றுவதற்கு ஒரு செல்லத்தக்க நீதிமன்ற ஆணை தேவை (S56(5))
4. தத்தெடுக்க முன்வரும் பெற்றோர் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:
    a. உடல்ரீதியாக தகுதியுள்ளவர்களாக, நிதி வசதி உள்ளவர்களாக, ஆரோக்கியமான மன நிலை உள்ளவர்களாக, தத்தெடுப்பதற்கு மிகவும் விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும் (S57(1))
    b. பெற்றோர் இருவரின் ஒப்புதலும் தேவை (S57(2))
    c. தனியாக உள்ள அல்லது மணமுறிவு பெற்ற நபர் தத்தெடுக்கலாம் ஆனால் தனியாக உள்ள ஆண் ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுக்க முடியாது (S57(3)(4))

### 12.2 தத்தெடுப்பு நடைமுறை

1. சட்டப்பூர்வமாகத் தத்தெடுக்கத் தகுதியுள்ளதாக அறிவிக்கப்பட்ட **60** நாட்களுக்குள் தத்தெடுக்கப்படவில்லை என்றால் அந்தக் குழந்தை நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்புக்குத் தகுதியுள்ளதாகும். இதில், உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் குறைபாடுள்ள குழந்தைகளுக்கும், உடன்பிறந்தோருக்கும், **5** வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். (S59(1))
2. வாய்ப்புள்ள தத்தெடுக்கும் பெற்றோரது தகுதி நிலை குறித்து மதிப்பிடுவதற்கான அவர்களது நாடு சார்ந்த ஆய்வறிக்கையை சிறப்பு தத்தெடுப்பு முகமை தயாரிக்க வேண்டும் (S58(2)) (இதனை வெளிநாட்டு தத்தெடுப்பு முகமை, மத்திய ஆணையம் அல்லது நாடுகளுக்கு இடையேயான தத்தெடுப்பில் சம்பந்தப்படுகிற அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் (S59(4))
3. தத்தெடுப்பு ஆணை பிறப்பிப்பதற்கு முன்பாக நீதிமன்றம் பின்வரும் அம்சங்கள் சரியாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்:

a. தத்தெடுப்பு குழந்தையின் நலனுக்கு உகந்தது (S61(1)a)

b. குழந்தையின் வயது மற்றும் புரிதல் பொருட்படுத்தப்பட்டு குழந்தையின் விருப்பம் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது (S61(1)b)

c. பணம் எதுவும் ஒப்புக்கொள்ளப்படவில்லை அல்லது பெறப்படவில்லை (S61(1)c)

**4.** தத்தெடுப்பு நடைமுறைகள் நீதிபதி அறைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும், தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து 2 மாத காலத்திற்குள் முடிவு அறிவிக்கப்பட வேண்டும் (S61(2))

**5.** பதிவு பெற்ற அனைத்து நிறுவனங்களும் அருகிலுள்ள சிறப்பு தத்தெடுப்பு முகமையுடன் முறையான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் (S66(2))

### 13. JJB அல்லது CWC ஆணைக்கு எதிராக மேல்முறையீடு

2. வளர்ப்புப் பராமரிப்பு மற்றும் புரவலர் ஏற்பாட்டுக்குப் பிந்தைய பராமரிப்பு தொடர்பான முடிவுகளின் மீது பின்வரும் வகையில் மேல்முறையீடு செய்யப்படலாம் (S101(1)):

a. ஆணையால் மனக்குறைக்கு உள்ளாகும் எந்த நபரும்

b. ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்

c. சிறுவர் நீதிமன்றத்தில் அல்லது மாவட்ட நீதித்துறை நடுவரிடம்

3. ஒரு கடுங்குற்றம் தொடர்பான ஒரு பூர்வாங்க மதிப்பீட்டிற்குப் பிறகு JJB பிறப்பிக்கும் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய இயலாது (S101(2))

4. பின்வரும் ஆணைகள் மீதும் மேல்முறையீடு செய்ய இயலாது:

a. (கடுமையான குற்றம் அல்லாத) ஒரு குற்றத்தை, 16 வயது அல்லது அதற்கு மேல் வயதுள்ள ஒரு குழந்தை செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள JJB பிறப்பிக்கும் ஆணை (S101(3)a) அல்லது

b. ஒரு நபர் பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிற குழந்தை அல்ல என்று கண்டறியும் நிலையில் CWC பிறப்பிக்கும் ஆணை (S101(3)b)

## 5.4. குழந்தை உரிமை ஆணையத்தின் செயற்பணிகளும் அதிகாரங்களும்

### பிரிவு 13. ஆணையத்தின் செயற்பணிகள்:—

**(1)** ஆணையம், பின்வரும் செயற்பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் புரிதல் வேண்டும், அவையாவன:—

(a) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலுமோ அதன் வழியாலோ, குழந்தை உரிமைககளின் பாதுகாப்பிற்காக வகைசெய்யப்பட்டுள்ள காப்பணைவுகளை மறு ஆய்வுசெய்தல் மற்றும் அவற்றைத் திறம்பட செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்தல்.

(b) ஆணையம், ஆண்டுதோறும் மற்றும் ஆணையம் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பிற நேரங்களில் அத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயல்பாட்டின் மீது அறிக்கைகளை மைய அரசிற்கு அளித்தல் வேண்டும்.

(c) குழந்தை உரிமைகள் மீறலை குறித்து விசாரணை செய்தல் மற்றும் அத்தகைய நேர்வுகளில் நடவடிக்கை தொடங்கிட பரிந்துரை செய்தல்.

(d) தீவிரவாதம், மதக்கலவரங்கள், கலகங்கள், இயற்கைப் பேரழிவுகள், குடும்பவன்முறை, HIV/AIDS, குழந்தை கடத்தல், தவறாக நடத்தப்படுதல், கொடுமை மற்றும் சுரண்டப்படுதல், பாலியல் மற்றும் குழந்தை விபச்சாரத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உரிய தீர்வு காண வேண்டி பரிந்துரைகள் செய்தல்.

(e) சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பாதுகாப்பு, துன்பத்தில் உழலும், விளிம்பு நிலை குழந்தைகள் மற்றும் சாதகமற்ற குழந்தைகள், சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள், இளம் சிறார் குற்றவாளிகள், குடும்பமற்ற குழந்தைகள் மற்றும் குழந்தைக் கைதிகளுக்கு சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு பரிந்துரை செய்தல்.

(f) குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கைகள் மற்றும் பிற பன்னாட்டு முறையாவணங்களைக் கவனமாக ஆராய்தல் மற்றும் அவை திறம்பட செயற்படுத்துவதற்குப் பரிந்துரைகளைச் செய்தல்

(g) குழந்தை உரிமைகள் பற்றிய துறையில் ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதல் மற்றும் மேம்படுத்துதல்

(h) குழந்தை உரிமைகள் பற்றிய கல்வியைச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களிடையேயும் பரப்புதல் மற்றும் இந்த உரிமைகளின் பாதுகாப்பிற்குக் கிடைக்கத்தக்க காப்பணைவுகள் பற்றி விழிப்புணர்வினை வெளியீடுகளின், மக்கள் தொடர்பு சாதனங்களின் கருத்தரங்குகளின் மற்றும் கிடைக்கக்கூடிய பிற வழிமுறைகளின் வாயிலாக மேம்படுத்துதல்

(i) முறையீடுகளை விசாரித்து மற்றும் தொடர்பான பொருட்பாடுகளின் மீது தாமே முற்பட்டு கவனத்தில் கொள்ளும்–

(i) குழந்தை உரிமை மீறல் மற்றும் மறுப்பு

(ii) குழந்தைகள் மேம்பாடு மற்றும் பாதுகாப்புக்கு வகை செய்திடும் சட்டங்களை செயற்படுத்தாமை

(j) குழந்தைகளுக்கான துயர் தணிக்கவும் நல்வாழ்விற்கு உறுதியளித்து அவர்களுக்குத் தீர்வழி காண வகை செய்யும் நோக்குடைய கொள்கை முடிவுகள், வழிகாட்டு நெறிகள் அல்லது அறிவுறுத்தல்களை நிறைவேற்றாமைக்கும்

(k) குழந்தை உரிமைகள் மேம்பாட்டிற்கு அது தேவையெனக் கருதுகிற பிற செயற்பணிகள் மற்றும் மேற்காண் செயற்பணிகளுடன் தொடர்புடைய பிற பொருட்பாடுகள்.

(2) ஆணையமானது, மாநில ஆணையம் அல்லது அப்போதைக்கு செல்லாற்றிலில் உள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் உரியவாறு அமைத்துருவாக்கப்பட்ட வேறு ஏதேனும் ஆணையத்தின் முன்னர் நிலுவையில் உள்ள ஏதேனும் பொருட்பாடு குறித்து விசாரணை செய்திடல் கூடாது.

**பிரிவு 16. ஆணையத்தின் ஆண்டறிக்கைகளும் சிறப்பு அறிக்கைகளும்:–**

(1) ஆணையம், மைய அரசாங்கத்திற்கும் தொடர்புடைய மாநில அரசாங்கத்திற்கும் ஆண்டறிக்கை ஒன்றை அனுப்புதல் வேண்டும் மற்றும், அவசரமானதாக அல்லது முக்கியமானதாக இருக்கிறது என்பதால் ஆண்டறிக்கை அனுப்பப்படும் வரையிலும் காலங்கடத்துதல் கூடாது என்று அது கருதுகிற பொருட்பாடு எதன்மீதும் சிறப்பு அறிக்கைகளை எந்த நேரத்திலும் அனுப்பலாம்.

(2) மைய அரசாங்கம் அல்லது நேர்வுக்கேற்ப மாநில அரசாங்கம், ஆண்டறிக்கைகளையும் சிறப்பு அறிக்கைகளையும் நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொறின் அல்லது நேர்வுக்கேற்ப, முறையே மாநில சட்டமன்றங்களின் முன் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை மற்றும் பரிந்துரைகள் ஏற்காமைக்கான காரணங்கள் எவையேனும் இருப்பின் அவற்றுடன் சேர்த்து, வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

# 6.1. ஊனமுற்றோர் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம்

**முன்னுரை:**

1. நாம் அனைவரும், உலக அமைதி, சுதந்திரம் மற்றும் நியாயம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அடிப்படையாக கொண்ட சமத்துவமான மனித குடும்பத்தின் உறுப்பினர்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை ஆவணங்கள் கூறுகின்றன.
2. நாம் அனைவரும் சமம் மற்றும் நம் அனைவருக்கும் மனித உரிமைகள் உண்டு.
3. ஊனமுற்ற நபர்கள் அனைவரும் அனைத்து மனித உரிமைகளையும் அடிப்படைசுதந்திரத்தையும் அனுபவிக்க வேண்டும் மற்றும் அவர்களுக்கு எதிராக எந்த பாரபட்சமும் இருக்கக் கூடாது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
4. மனித உரிமைகளை மேம்படுத்த மற்றும் பாதுகாக்க மேலும் 7 விதமான சர்வதேசஒப்பந்தங்கள் உள்ளன.
5. சுற்றுப்புற சூழல் மற்றும் மக்களுடைய எண்ணங்களும் தான் ஊனத்தை உருவாக்குகிறது என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும்.
6. ஊனமுற்றோரின் முன்னேற்றத்திற்காக உலக அளவில் உள்ள பொதுவான விதிகள் மற்றும் செயல்பாடுகளால் அவற்றை அடைவதற்கு உருவாக்கப்படும் சட்டங்கள், விதிகள், திட்டங்கள், முடிவுகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றை நாம் கருத்தில் கொள்வது மிகவும் அவசியம்.
7. ஒவ்வொரு அரசாங்கமும் சர்வதேச நிறுவனங்களும் தேசிய வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொள்ளும் பொழுது ஊனமுற்ற நபர்களின் நிலைமையையும் சம அளவில் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை உறுதி செய்வது மிகவும் அவசியம். உதாரணமாக: வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்பு.
8. எவரொருவர் ஊனமுற்ற நபரை பாரபட்சமாக நடத்துகிறாரோ, அப்பொழுது அவர் அவர்களுடைய மனித மாண்பையே மறுக்கிறார் என்று உணர வேண்டும்.
9. மேலும் ஊனமுற்ற நபர்களிடையே பல வித்தியாசங்கள் இருக்கின்றது மற்றும் பல விதமான ஊனங்கள் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.
10. ஊனமுற்ற நபர்கள் அனைவரும் சிறப்பு தேவைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பெற வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
11. ஊனமுற்ற நபரின் உரிமைகளை பாதுகாக்கும் ஒப்பந்தங்கள் பல இருந்தாலும், அவை இப்பொழுதும் அவர்களுக்கு மறுக்கப் படுகின்றது என்பது வருத்தத்திற்குரியது.
12. ஊனமுற்ற நபரின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் நாடுகள,; குறிப்பாக பின்தங்கிய நாடுகள் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படுவது அவசியம் என்பதை நாம் உணர வேண்டும்.
13. ஊனமுற்ற நபர்கள் அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபடுத்தப்படுவதன் மூலமும் அவர்களுடைய உரிமைகளை அனுபவிக்கும் பட்சத்திலும் தங்களுடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவ முடியும் என்பதை நாம் உணர வேண்டும்.
14. ஊனமுற்ற நபர்கள் தங்களுக்காக தாமே முடிவெடுக்க கூடிய சுதந்திரத்தை பெற்றிருப்பது மிகவும் முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும்.

15. கொள்கைகள் மற்றும் திட்டங்களை, (குறிப்பாக அவர்களுக்கு நேரடியாக தொடர்புடைய விஷயங்களில்) உருவாக்கும்பொழுது ஊனமுற்றவர்களையும் அதில் கண்டிப்பாக ஈடுபடுத்த வேண்டும்.
16. ஊனமுற்ற நபர்கள் அவர்களுடைய ஊனத்தின் காரணமாக மட்டுமல்லாமல் அவர்களுடைய இனம், பால், போன்ற பல காரணங்களின் அடிப்படையிலும் பாரபட்சமாக நடத்தப்படுவது வருத்தத்திற்குரியது.
17. அநேக சந்தர்ப்பங்களில் ஊனமுற்ற பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை உணர்கிறோம்.
18. எல்லா குழந்தைகளைப் போலவும் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. அதேபோல குழந்தைகள் உரிமைக்கான சர்வதேச ஒப்பந்தமானது ஊனமுற்ற குழந்தைகளுக்கும் பொருந்தும் என்பதை நாம் உணர வேண்டும்.
19. ஒவ்வொரு நாடும் ஊனமுற்ற நபர்களின் மனித உரிமைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது அதில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலரின் நிலைமைகளையும் கருத்தில் கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.
20. பெரும்பாலான ஊனமுற்ற நபர்கள் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் மற்றும் தாக்கங்களையும் நாம் கண்டறிய வேண்டும்.
21. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய உரிமைகளை அடைவதற்கு தேவையான அமைதி மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையை, (குறிப்பாக சண்டை நடைபெறும் பகுதிகள் அல்லது தங்களுடைய அரசாங்கம் செயல்படாத நாடுகளில் வாழ்பவர்கள்); உறுதி செய்ய வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.
22. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய உரிமைகளை பயன்படுத்தும் வகையில் தங்களுடைய வாழ்க்கையில் அனைத்து விஷயங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பது மிகவும் அவசியம். (நல்ல சுகாதாரம், கல்வி, தேவையான தகவல்கள்)
23. ஒவ்வொரு தனிநபரும் தன்னுடைய உரிமைகளை அனுபவிப்பதை உறுதி செய்வது நம் அனைவரின் கடமையாகும்.
24. சமூகத்தில் குடும்பம் என்பது ஒரு முக்கிய அங்கம் என்பதை உணர்ந்து ஊனமுற்ற நபர்கள் மற்றும் அவரது குடும்பத்தினரும் தங்களுடைய மனித உரிமைகளை பெறுவதற்கு தேவையான பாதுகாப்பு மற்றும் உதவிகளை நாம் வழங்க வேண்டும்.
25. வாழ்க்கையில் பல சூழ்நிலைகளிலும் உள்ள விஷயங்களை நாம் புரிந்து கொண்டுசெயல்படுவது ஊனமுற்ற நபர்களின் வாழ்க்கை மேம்பட உதவியாக இருக்கும். மேலும் பணக்கார நாடுகள் மற்றும் ஏழை நாடுகளில் ஊனமுற்ற நபர்கள் சமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழ்க்கையில் அனைத்து செயல்பாடுகளிலும் சம அளவில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**மேலே பட்டியலிடப்பட்டுள்ள கருத்துக்கள் அடிப்படையில் சம்மந்தப்பட்ட நாடுகள் பின்வரும் விஷயங்களை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன:**

**பிரிவு : 1**

**நோக்கம்:** இவ்வொப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகள் பின்வரும் விஷயங்களை உறுதி செய்யும் என்ற அடிப்படையில் தான் இவ்வாவணமானது உருவாக்கப்பட்டுள்ளது.

- ஊனமுற்ற நபர்களின் அனைத்து மனித உரிமைகளும் சுதந்திரமும் மேம்படுத்தப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். மற்றும் அவர்களால் அனுபவிக்கப்பட வேண்டும்.
- ஊனமுற்ற நபர்களின் மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும்.

ஊனமுற்ற நபர்கள் என்பவர்கள் நிரந்தரமான அல்லது நீண்ட கால அளவிற்கு குறைபாடு உடையவர்கள். உதாரணமாக உடல் ரீதியான, மன ரீதியான, சமூக ரீதியான, அறிவு ரீதியான குறைபாடுகள் மற்றும் மக்களின் கண்ணோட்டம், கலாச்சாரம், இயற்கை தடைகள் மற்றும் சட்டங்கள் போன்ற காரணங்களினால் சமூதாயத்தில் இணைந்து செயல்பட தடையாக உள்ள காரணத்தின் அடிப்படையில் உள்ளவர்கள்.

**பிரிவு : 2**

**வரையறைகள்**

தகவல் தொடர்பு  அனைத்து மக்களும் தொடர்பு கொள்ளக் கூடிய எல்லா விதமான தகவல் தொடர்பு வழிகள். உதாரணமாக வாய் மொழி, சைகை மொழி, புள்ளி எழுத்து (பிரெயில்), பொதுவான எழுத்து முறை, தொடு முறை எழுத்து, பெரிய அளவில் அச்சடிக்கப்பட்ட எழுத்து, ஒலி நாடா போன்ற ஊனமுற்ற நபர்களால் பிறருடன் தொடர்பு கொள்ள பயன்படும் அனைத்து முறைகளும்.

மொழி  மொழி என்பது வாய்மொழி, சைகை மொழி, மற்றும் பேச்சைத் தவிர பிற வகையில் தொடர்பு கொள்ளப் பயன்படுத்தப்படும் மொழிகள். ஊனத்தின் அடிப்படையில் பாரபட்சம் காட்டுதல் – ஊனத்தின் காரணமாக ஒருவரை ஒரு செயலை செய்வதிலிருந்து ஒதுக்கி வைத்தல், மறுத்தல் மற்றும் தடுத்தல். இது வாழ்க்கையில் எந்த சூழ்நிலையிலும் நடைபெறக் கூடும்.

கூடுமான வரையில் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்துதல் – ஒருவரின் தேவைக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். உதாரணமாக ஒருவர் தன்னுடைய உரிமைகளை அனுபவிக்கும் வகையில் வீட்டிலும் வேலை செய்யும் இடங்களிலும் தக்க மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். ஆனால் இம்மாற்றத்தை மேற்கொள்ள அதிக செலவோ, தடைகளோ இருக்கும்பட்சத்தில் அம்மாற்றத்தை மேற்கொள்ள இயலாது.

பொதுவான வடிவமைப்பு  அனைத்து மக்களும் பயன்படுத்தும் வகையில் பொருட்களை வடிவமைத்தல் திட்டங்களை உருவாக்குதல், கட்டிடங்களை கட்டுதல். சில நேரங்களில் சில குறிப்பிட்ட ஊனத்தால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய உரிமைகளை அனுபவிப்பதற்கு சில சிறப்பான வசதிகள் தேவைப்படும்.

**பிரிவு: 3**

**பொதுவான கொள்கைகள்**

இந்த ஒப்பந்தத்தின்படி:

- மனித மாண்பு
- தேர்ந்தொடுக்கும் திறமை
- சுதந்திரமாக செயல்படுதல்
- பாகுபாடின்மை
- பங்கேற்பு
- முழு ஈடுபாடு
- வேற்றுமையை மதித்தல்
- ஊனத்தை அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளுதல்
- சம வாய்ப்பு
- தடையற்ற சூழ்நிலை
- ஆணும் பெண்ணும் சமம்.
- குழந்தைகளை மதித்தல்.

**பிரிவு 4**

**பொதுவான கடமைகள்**

**1.** மனித உரிமை என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவானதே. அதை ஊனத்தை காரணம் காட்டி மறுக்க கூடாது என்று அனைத்து நாடுகளும் உறுதி கொள்ள வேண்டும். உறுதிக் கொள்ளும் பட்சத்தில் அவை:

அ. தங்கள் நாட்டில் உருவாக்கப்படும் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் அவற்றை இவ்வொப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

ஆ. தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்: ஊதாரணமாக புதிய சட்டங்களை இயற்றுதல், தேவைப்படும் பட்சத்தில் பழைய சட்டங்களையும், விதிகளையும் மாற்றி அமைத்தல், ஊனமுற்ற நபர்களை பாகுபடுத்தும் செயல்களை கைவிடுதல் மற்றும் அம்மாதிரியான சட்டங்களை விளக்கிக் கொள்ளுதல்.

இ. அனைத்து கொள்கைகளும், திட்டங்களும் ஊனமுற்ற நபர்களின் மனித உரிமைகளை உள்ளடக்கிய வகையில் அமைவதை உறுதி செய்தல்.

ஈ. இவ்வொப்பந்தத்திற்கு எதிராக எந்த செயலையும் செய்யாதிருத்தல் மற்றும் அனைவரும் இவ்வொப்பந்தத்தை மதிக்கும் வகையில் செயல்படுதல்.

உ. ஊனத்தின் காரணமாக ஒருவருக்கு பாரபட்சம் காட்டும் தனி நபர்கள், அமைப்புகள் மற்றும் வியாபார நிறுவனங்கள் அவற்றை கைவிட தேவையான நடவடிக்கையை மேற் கொள்ளுதல்.

ஊ. உலகத்தில் உள்ள அனைத்து ஊனமுற்ற நபர்களும் தங்களுக்குத் தேவையான பொருட்கள், சேவைகள் மற்றும் உபகரணங்களை குறைந்த விலையில் பெறுவதற்காக செயல்படுதல் மற்றும் பிறரை செயல்பட ஊக்குவித்தல்.

எ. ஊனமுற்ற நபர்களின் வாழ்க்கைக்கு தேவைப்படும் அனைத்து விஷயங்களுக்கும் தேவையான தொழில் நுட்பத்தை குறைந்த செலவில் உருவாக்குதல் மற்றும் உருவாக்குவதை ஊக்குவித்தல்.

ஏ. ஊனமுற்ற நபர்கள் புரிந்து கொள்ளும் வகைகளில் தொழில்நுட்பம் மற்றும் பிற உதவிகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.

ஐ. ஊனமுற்ற நபர்களுடன் வேலை செய்யும் நபர்களுக்கு அவர்கள் மேலும் சிறப்பாக வேலை செய்வதற்கு இவ்வொப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் பற்றிய பயிற்சியை அளித்தல்.

**2.** பொருளாதார, சமூதாய மற்றும் கலாசார உரிமைகளை பொருத்தவரையில் சட்டங்களையும், விதிகளையும் அதற்கான வள ஆதாரங்களின் அடிப்படையில் எந்த அளவிற்கு செயல்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு நடைமுறை படுத்த வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் இவ்வுரிமைகளை செயல்படுத்துவதில் பிற நாடுகளின் ஒத்துழைப்பையும் நாடலாம். பிற உரிமைகள் அனைத்தையும் உடனடியாக செயல்படுத்த வேண்டும்.

**3.** இந்த ஒப்பந்தம் சம்பந்தபட்ட சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்கும் பொழுது நாடுகள் இது சம்பந்தமாக ஊனமுற்ற நபர்களுடன் (ஊனமுற்ற குழந்தைகளுடனும், அவர்களின் பிரதிநிதிகளாக செயல்படும் நிறுவனங்கள்) பேசி அவர்களையும் ஈடுபடுத்துதல் அவசியம்.

**4.** இவ்வொப்பந்தத்தின் காரணமாக ஊனமுற்ற நபர்களுக்காக ஏற்கனவே சிறப்பாக செயல்பட்டு வரும் சட்டங்கள் மற்றும் விதிகள் எந்த விதத்திலும் பாதிப்படையாது. ஆகவே, இவ்வொப்பந்தத்தை காரணம் காட்டி நாடுகள் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் மனித உரிமைகளை மறுக்கக் கூடாது.

# 6.2. The Rights of Persons with Disabilities Act, 2016

**Rights of people with disabilities**
**Civil and political rights**

1. Equality, life with dignity and equal respect for their integrity [S3(1)]
2. Protection from torture, cruel, inhuman or degrading treatment [S6 (1)]
3. Protection from all forms of abuse, violence and exploitation [S7(1)]
4. Equal protection and safety in situations of risk, armed conflict, humanitarian emergencies and natural disasters [S8(1)] and reconstruction [S8(4)] (Duty bearer: National Disaster Management Authority and the State Disaster Management Authority).
5. Right to vote [S11]. All polling stations should be accessible. All materials related to the electoral process should easily understandable by and accessible to them. (Duty bearers: National and state election commissions) [S11]
6. Appropriate environment to utilise their capacity [S3(2)].
7. Free prior informed consent (FPIC)
   (a) Before any medical procedure which leads to infertility [S10(2)]

   (b) Before any research [S6(*2*)].

   (c) FPIC for research should be obtained through accessible modes, means and formats of communication [S6(2)i] and also from a Committee for Research on Disability [S6(2)ii]
8. Access to justice in any judicial or quasijudicial or investigative body without discrimination [S12(1)] with adequate support for exercising legal rights [S12(2)].
9. Legal guardianship [S4(1)]. If a person with disability is unable to take legally binding decisions, a guardian to take legally binding decisions may be provided by the district court or designated authority. The support can be total or limited. The nature and manner of support shall be reviewed by the designated authority.
10. Not be discriminated on the ground of disability, unless it is shown that it is a proportionate means of achieving a legitimate aim. [S3(3)]
11. Not to be deprived of personal liberty only on the ground of disability. [S3(4)].

**Social rights**

1. **Home and family [S9(*1*)].**

(a) Children with disability shall not be separated from parents except on an order of competent court. [S9(1)].

(b) If the parents are unable to take care of the child with disability, the court can place the child with near relations, and failing that within the community in a family setting. Only in exceptional cases should the child be place in a shelter home [S9(2)].

(c) Own or inherit property, movable or immovable [S13(*1*)].

2. Live in the community [S5(1)].
3. Reasonable accommodation [S3(5)] but not obliged to live in any particular living arrangement [S5 (*2*)a].

4. Reproductive rights including appropriate information regarding reproductive and family planning [S10(1)] .

5. **Access to**

(a) Community support services (a range of in-house, residential and community), including personal assistance with due regard to age and gender [S5 (*2*)b]

(b) Physical environment, transportation, information and communications, including appropriate technologies and systems, and other facilities and services provided to the public in urban and rural areas [S40].

(c) Polling stations [S11]

**Cultural rights**

1. Appropriate environment to utilise their capacity [S3(2)].
2. Inclusive education
   (a) In all educational institutions [S16]
   (b) Including adult and continuing education [S18]
   (c) For persons with benchmark disabilities

      (i) A minimum reservation of 5% seats in institutions of higher learning [S32(1)]

      (ii) Free education in a neighbourhood school, or in a special school, of their choice between the age of six to eighteen [S31(1)]

      (iii) Upper age relaxation of five years for admission in institutions of higher education [S32(2)]

3. Effective participation in sporting activity [S30(1)]

**Economic rights**

1. Own or inherit property, movable or immovable [S13(*1*)]

2. Control their financial affairs[S13(*1*)]
3. Have access to bank loans, mortgages and other forms of financial credit.

4. Specific budget (State Fund) for the support and well being of persons with disabilities [S88(*1*)]

**Women and children with disabilities**

1. Women and children with disabilities should be able to enjoy their rights equally with others. [S4(1)]
2. All children with disabilities shall have right on an equal basis to freely express their views on all matters affecting them. [S4(*2*)]
3. Education: All educational institutions (funded or recognised) should provide inclusive education to the children with disabilities [S16] and free education to those with benchmark disabilities up to the age of 18[S31(1)]

4. Home and family

(a) Children with disability shall not be separated from parents except on an order of competent court. [S9(1)].

(b) If the parents are unable to take care of the child with disability, the court can place the child with near relations, and failing that within the community in a family setting. Only in exceptional cases should the child be place in a shelter home [S9(2)].

**Duties of government**

1. Ensure that the people with disabilities enjoy these rights [S3(1), 3(2), 3(5), 5(2), 6(1), 7(1), 10(2), 12, 13(1), 16, 18, 30, 31,
2. Ensure that women and children with disabilities are able to enjoy their rights equally with others. [S4(1)]
3. Provide age and disability appropriate support to children with disabilities to freely express their views on all matters affecting them. [S4(*2*)]
4. Prevent abuse, violence and exploitation [S7 (1)],
5. Provide legal remedies [S7 (1)a]
6. Prescribe the procedure for reporting violations of the rights of people with disabilities [S7 (1)b]
7. Take steps to rescue, protect and rehabilitate victims of such incidents; [S7 (19)c]
8. Create awareness and make available information among the public [S7 (1) d].
9. Create a State Fund for the support and well being of persons with disabilities [S88(*1*)]

## 7. குழந்தை உரிமைகளுக்காகத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவதில் முன்னேறிய வழிமுறைகள்

## 7.1. தகவல் உரிமைச் சட்டம்–2005

- இச்சட்டம் 12 அக்டோபர் 2005 அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- தகவல் உரிமை என்பது அடிப்படையான மனித உரிமை என்று இந்திய அரசியல் சாசன சட்டத்தின் பிரிவு 19ல் கூறப்பட்டுள்ளது.

**தகவல் என்பது என்ன ?**

- பதிவேடுகள், ஆவணங்கள், அலுவலகக் குறிப்புகள், கருத்துகள், செய்தி குறிப்புகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், ஒப்பந்தங்கள், கடிதங்கள், முன்வடிவங்கள், மாதிரிகள், கணினி சார்ந்த பதிவுகள், மின்னஞ்சல்கள் போன்றவையெல்லாம் தகவல்களாகப் பெறமுடியும்.
- சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பரிசீலனை செய்யும் உரிமை, நகல் எடுக்கும் உரிமை உண்டு.
- பொதுநலன் சார்ந்த அனைத்துத் தகவல்களையும் பெற முடியும்

**தகவல் தர பொறுப்புள்ள பொது அதிகார அமைப்பு**

- அரசின் கீழ் இயங்க கூடிய ஆணையங்கள்
- நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட அதிகார அமைப்பு
- பொது அமைப்பு அல்லது தன்னாட்சி நிறுவனங்கள்
- அரசுக்கு சொந்தமான, அதன் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகள்
- அரசு சாரா அமைப்புகள்
- மத்திய, மாநில அரசின் துறைகள், அலுவலகங்கள்
- நகர சபை, பஞ்சாயத்து, ஒன்றிய அலுவலகங்கள்
- அரசிடமிருந்து உதவி பெறும் தனியார் அமைப்புகள்

**யார் யாரெல்லாம் தகவல் பெற முடியும் ?**

அனைத்து இந்திய குடிமக்களும் தனிநபராகவோ, ஒரு அமைப்பின் மூலமாகவோ தகவல் உரிமை சட்டம் 2005 பிரிவு –6ன் கீழ் தகவல் பெறலாம்.

**தகவல் பெற விண்ணப்பிப்பது:**

- தகவல் கோருவதற்கான தனி விண்ணப்பம் எதுவும் கிடையாது.
- எழுத்துப் பூர்வமாகவோ அல்லது மின்னனு வடிவத்திலோ உரிய அலுவலகத்தில் பொதுத் தகவல் அதிகாரியிடம் விண்ணப்பிக்க வேண்டும்.
- ஒரே விண்ணப்பத்தில் எத்தனை கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம்.
- தகவல் கேட்பதற்கானக் காரணத்தை கூறத் தேவையில்லை.

- என்ன தகவல் கேட்கிறோம் என்ற விபரமும், தகவல் கேட்பவரின் முகவரியும் இருந்தால் போதுமானது.

**பொது அதிகார அமைப்புகளின் கடமை பொறுப்புகள்**

- இந்தச் சட்டத்தின்படி தகவல் பெறுவதற்கான உரிமையை எளிதாக்கும் முறையிலும் படிவத்திலும் உரியவாறு பட்டியல் தயாரிக்க வேண்டும்.
- அகர வரிசைத் தொகுப்பில் அட்டவணைப்படுத்த வேண்டும்.
- தமது அலுவலகம் பற்றிய தகவல்கள், நடவடிக்கைகள், கடமைகள் பற்றிய குறிப்புகளை தெரிவிக்க வேண்டும்.
- தமது அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் கடமை மற்றும் அதிகாரங்களைத் தெரிவிக்க வேண்டும்.
- தாம் வைத்துள்ள அல்லது தமது கட்டுப்பாட்டில் உள்ள ஆவணங்களை வகைப்படுத்த அதன் பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.
- தமது அலுவலக அதிகாரிகள், ஊழியர்கள் அடங்கிய பெயர்களின் பட்டியல், மாதாந்திர ஊதியம், ஈட்டுத் தொகை உட்படத் தெரிவிக்க வேண்டும்.
- நிதி ஒதுக்கீடுகள், அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்கள், செலவு மதிப்பீடுகள், செலவிடப்பட்ட இனங்கள் மற்றும் முழுமையான தகவலைத் தயாரிக்க வேண்டும்.
- தேவைப்படும் இதர தகவல்களையும் வழங்க வேண்டும்.
- இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட 120 நாட்களுக்குள் மேற்கூரிய தகவல்கள் அனைத்தையும் தயாரிக்க வேண்டும். அதன்பிறகு ஆண்டுதோறும் இத்தகவல்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

**தகவல் பெறுவதற்கான கட்டணம்**

- மத்திய அரசு மற்றும் மாநில அரசு சார்ந்த அதிகார அமைப்பிடமிருந்து தகவல் பெறுவதற்காக ரூ.10 விண்ணப்ப கட்டணம் செலுத்த வேண்டும்.
- கூடுதலான பக்கங்கள் இருப்பின் தாளுக்கும் ரூ.2 வீதம் வசூலிக்கப்பட்டு அதற்கான முறையான ரசீது வழங்கப்பட வேண்டும்.
- கூடுதல் கட்டணம் வசூலிக்க வேண்டியிருந்தால் எழுத்துப் பூர்வமாக அதிகாரி மனு செய்பவருக்கு தெரிவிக்க வேண்டும்.
- கணினி சார்ந்த பதிவுகளுக்கு CD/Floppy கூடுதலாக ரூ.50 செலுத்த வேண்டும். அச்சடிக்கப்பட்ட நிலையில் உள்ள தகவல்களை நகல் எடுக்க ஒவ்வொரு பக்கத்திற்கும் ரூ.2 செலுத்த வேண்டும்.
- நேரில் சென்று ஆவணங்களை பார்வையிட முதல் ஒரு மணி நேரத்திற்கு கட்டணம் இல்லை. அதற்கு மேலாகும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூ.5 கட்டணம் செலுத்த வேண்டும்.

**கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு**

- வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவராக இருந்தால் தகவல் பெறுவதற்கு எந்த கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.
- வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் என்பதை நிரூபிக்கும் அத்தாட்சியாக தங்கள் பகுதியின் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகத்திலிருந்து சான்று பெற்று அதன் நகலை அனுப்பினால் போதும்.

**விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை**

- விண்ணப்பத்துடன் கட்டணத்தொகை ரூ.10–ஐ நேரில் பொது தகவல் அதிகாரியிடம் செலுத்தலாம்.
- ரூ.10–க்கான நீதிமன்ற கட்டண வில்லையை (Court Fee Stamp) மனுவில் ஒட்டலாம்.
- சம்மந்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்பின் பொதுத் தகவல் அதிகாரிக்கு வங்கியில் வரைவோலையாகவும் எடுக்கலாம்.

**தகவல் உரிமை சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் / துறைகள்**

- நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, நாட்டின் பொருளாதாரம் மற்றும் அறிவியல் நலன்கள், வெளியுறவு தொடர்பான தகவல்கள்.
- உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு துறை தொடர்பான தகவல்கள்
- நாடாளுமன்ற / சட்டமன்றங்களின் உரிமை மீறல்களுக்கு காரணமாகும் தகவல்கள்.
- நீதிமன்றங்களால் தடை செய்யப்பட்ட தகவல்கள்.
- அந்நிய அரசிடம் இருந்து பெறப்பட்ட ரகசியங்கள்.

**யாரிடம் தகவல் கோரலாம்:**

- பொது தகவல் அதிகாரி (Public Information Officer PIO)
- உதவி பொது தகவல் அதிகாரி (APIO) ஆகியோர் தகவல் தர பொறுப்புள்ளவர்கள்.
- எந்த அதிகார அமைப்பிடம் தகவல் கோருகிறோமோ அவற்றை குறிப்பிட வேண்டும்.
- உதவி பொது தகவல் அலுவலரிடம் கோரும் தகவலுக்கு 5 நாள்கள் கூடுதலாக அதாவது 35 நாட்களுக்குள் பதிலளித்தாக வேண்டும்.
- எந்த துறைக்கு விண்ணப்பிக்கப்பட வேண்டும் என்று தெரியாத பட்சத்தில் பொது தகவல் அதிகாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என்று மாவட்ட ஆட்சியருக்கு தகவல் கோரி விண்ணப்பிக்கலாம்.

**பொதுத் தகவல் அதிகாரி, உதவி பொதுத் தகவல் அதிகாரியின் பொறுப்புகள்**

- தகவல் கோரும் விண்ணப்பங்களைக் கையாளுதல்.
- விண்ணப்பம் எழுத இயலாதவருக்கு விண்ணப்பம் எழுத உதவுதல்.
- வேறு அதிகார அமைப்பு சார்ந்த விண்ணப்பங்கள் பெறப்படுமானால் அதனை 5 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு அனுப்புதல்.

**தகவல் அளிப்பதற்கான கால அளவு**

- விண்ணப்பித்த 30 நாட்களுக்குள் பதிலளித்தாக வேண்டும்.
- ஒருவரது உயிர் மற்றும் சுதந்திரம் காக்கும் தகவல்களானால் 48 மணி நேரத்திற்குள் அளித்திட வேண்டும்.
- மூன்றாம் நபரிடம் இருந்து உதாரணமாக ஒரு தனியார் தொழிற்சாலையிடமிருந்து தகவல் கோரப்பட்டால் அப்பதிலை பெற்றுத் தருவதற்கு தொழிற்துறை 40 நாட்கள் எடுத்துக் கொள்ளலாம்.
- காலம் கடந்து அளிக்கப்படும் தகவலுக்கு கட்டணம் செலுத்த வேண்டாம்.

**மேல்முறையீடு**

- கோரப்பட்ட தகவல்கள் மறுக்கப்பட்டால்
- கால தாமதமாக கிடைக்கப் பெற்றால்
- தவறான தகவலாக இருந்தால்

- பெறப்பட்ட தகவல் குறித்து அதிருப்தியிருந்தால்
- பதில் பெறாத பட்சத்தில் 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட துறையில் குறிப்பிட்ட தகவல் அதிகாரிக்கு மேல் மட்டத்தில் உள்ள மேல்முறையீட்டு அதிகாரிக்கு முறையீடு செய்யலாம்.
- அவரிடமிருந்து சரியான பதில் கிடைக்கப்பெறாத நிலையில் 95 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மத்திய, மாநில அரசுகளின் தகவல் ஆணையத்திடம் புகார் செய்யலாம்.
- கோரப்படும் தகவல்கள் நிராகரிக்கப் படுவதற்கான நியாயங்களை நிரூபிக்க வேண்டியது சம்பந்தப்பட்ட தகவல் அதிகாரியுடையது ஆகும்.
- தகவல் ஆணையத்தின் முடிவு அனைவரையும் கட்டுப்படுத்தும். ஆனால் அதன் மீது உயர்நீதிமன்றத்திலோ, உச்சநீதிமன்றத்திலோ முறையீடு செய்யலாம்.

**மாநில தகவல் ஆணையத்தின் முகவரி:**
*தமிழ்நாடு தகவல் ஆணையம், எண்.2, தியாகராயர் சாலை*
*(ஆலையம்மன் கோவில் அருகில்), தேனாம்பேட்டை, சென்னை 600 018.*
*தொலைபேசி எண். 044–24312841 –48*

**ஆணையத்திடம் புகார்**

- விண்ணப்பத்தை பெற மறுத்ததினால் விண்ணப்பத்தை கொடுக்க இயலாத நிலையில்
- தகவல் அளிக்க மறுத்ததால்
  உரிய காலத்திற்குள் தகவல் அளிக்கத்தவறினால்
- தவறான தகவலை அளித்தால்
- செலுத்த வேண்டிய கட்டணத்திற்கு மேல் அதிகமான கட்டணத்தை கோரும்பட்சத்தில்
- முழுமையற்ற தகவலாக இருந்தால்
- வேண்டுமென்றே தவறான தகவலை தெரிவித்தால்


**ஆணையத்தின் விசாரணை**

- புகாரின் மீதான ஆணையத்தின் முடிவு சட்டப்படி கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியதாகும்.
- மாநில தகவல் ஆணையம், உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரத்தை பெற்றுள்ளது.
- ஆணையம் தவறிழைத்த அதிகாரியிடம் விண்ணப்பதாரர் கோரும் விவரங்களை அளிக்காததற்கான காரணத்தை கேட்டு, தகவலை அளிக்க பணிக்கலாம்.
- புகார் அளித்தவருக்கு ஏற்பட்ட நஷ்டம், பிரச்சனைகளை ஈடுசெய்ய பணிக்கலாம்.
- சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பிற்கு கீழ் அதிகாரி நியமிக்கப்படவில்லை என்றால் உடனடியாக நியமிக்கும்.
- சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள எவ்வொரு அபராதத்தையும் விதிக்கலாம்.

**அபராதம் ( Penalty)**

- மாநில தலைமை தகவல் ஆணையர் (அ) தகவல் ஆணையர்கள் (அ) மாநில தகவல் ஆணையர் பொது தகவல் அலுவலர் மீது அபராதம் விதிக்கலாம்.
- காரணமின்றி காலதாமதத்திற்கு ரூ.250–யிலிருந்து ரூ.25,000 வரை அபராதம்.
- சட்ட விரோதமாக விண்ணப்பம் பெற மறுத்ததிற்கு, தெரிந்தே தவறான தகவல் அளித்ததற்கு தகவல்களைஅழித்ததற்கு, தகவல் தர மறுத்தல் போன்றவற்றிற்கு ரூ.25,000 வரை.
- பொது தகவல் அலுவலரின் தொடர்ந்த மற்றும் தீவிர கடமை மீறலுக்கு அத்துறை நடவடிக்கை எடுப்பதற்கு ஆணையம் பரிந்துரைக்கும்.

## விளக்கப்படம் 1: விண்ணப்ப நடைமுறைகள்



## விளக்கப்படம் 2: மேல்முறையீட்டு நடைமுறை

பொதுத் தகவல் அதிகாரி (PIO) உங்களுக்கு ஒரு நிராகரிப்பு நோட்டீஸ் அனுப்புவார்

**மேல் முறையீடு**

பின்வரும் நிலையில் நீங்கள் 30 நாட்களுக்குள், அரசு அதிகார அமைப்புக்குள் மேல்முறையீட்டு அதிகாரியிடம் (AA) மேல்முறையீடு செய்ய வேண்டும்:

- நிராகரிப்பு அறிவிப்பில் உங்களுக்கு மனக்குறை இருக்குமானால்
- 30 நாட்களுக்குள் (அல்லது நீட்டிக்கப்பட்ட காலத்துக்குள்) எந்த முடிவும் எடுக்கப்படவில்லையானால்.

30–45 நாட்களுக்குள் மேல் முறையீட்டு அதிகாரி விண்ணப்பம் தொடர்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேல் முறையீட்டு அதிகாரி உங்கள் மேல்முறையீட்டை ஏற்கிறார். எழுத்துப்பூர்வமான அறிவிப்பு வழங்கப்பட வேண்டும். எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் தகவல் அளிக்கப்பட வேண்டும்

மேல்முறையீட்டு அதிகாரி உங்கள் விண்ணப்பத்தை நிராகரிக்கிறார்.

மத்திய அல்லது மாநில தகவல் ஆணையரிடம் (IC) மேல்முறையீடு செய்வதற்கான உங்களது உரிமை உள்ளிட்ட எழுத்துப்பூர்வ அறிவிப்பு உங்களுக்கு வழங்கப்பட வேண்டும்

**புகார்**

பின்வரும் காரணங்களால் தகவல் பெறுவதில் உங்களுக்கு ஏதேனும் பிரச்சனை இருக்குமானால், மத்திய அல்லது மாநில தகவல் ஆணையருக்கு நேரடியாக புகார் அளிக்கலாம்

PIO யாரும் நியமிக்கப்படாத நிலையில்:

உங்கள் விண்ணப்பத்தை ஏற்க PIO மறுக்கும் நிலையில்;

- தொடர்பு வாய்ப்புகள் உங்களுக்கு மறுக்கப்படும் நிலையில்
- உங்களுக்குத் தவறான தகவல் தரப்புடும் நிலையில்
- தகவலை மீண்டும் கோருவதற்கா வேறு எந்த பிரச்சனையிலும்

புகார்அளிப்பதற்கு கால வரையறை இல்லை

நீதிமன்றங்களில் மேல்முறையீடு

தகவல் பெறும் உரிமை ஒரு அடிப்படை உரிமையாகும். ஆகவே, நீங்கள் மாநில உயர்நீதிமன்றத்திலோ, உச்சநீதிமன்றத்திலோ மேல்முறையீடு செய்யலாம்.

மேல்முறையீடு / புகாரை IC ஏற்கிறார்.

- தகவல் கோரியவருக்கு தனது ஏற்பு பற்றித் தெரிவிக்கிறார்
- தகவலை அளிக்க ஆணையிடுகிறார்.
- தகவல் உரிமைச் சட்டத்தின்படி செயல்பட அரசு அதிகாரிக்கு ஆணையிடுகிறார்

PIO மீது IC அபராதம் விதிக்கிறார். PIO துறைவாரி அபராதத்திற்குப் பரிந்துரைக்கிறார்

ஆவணங்களை IC பார்வையிடுகிறார் PIO தகவல் அளிக்க மறுத்ததற்கான நியாயத்தைச் சொல்ல வேண்டும். நீங்களோ சம்பந்தப்பட்ட மூன்றாவது தரப்பினரோ உங்களது வாதத்தையும் கேட்குமாறு கோர உரிமையுண்டு. முடிவெடுப்பதற்குக் கால வரையறை இல்லை.

நீதிமன்றங்களில் மேல்முறையீடு

தகவல் பெறும் உரிமை ஒரு அடிப்படை உரிமையாகும். ஆகவே, நீங்கள் மாநில உயர்நீதிமன்றத்திலோ, உச்சநீதிமன்றத்திலோ மேல்முறையீடு செய்யலாம்.

# மாதிரி விண்ணப்பப் படிவம்

ரூ.10/-க்கான நீதிமன்ற வில்லை




அனுப்புநர்

..............................................................................

..............................................................................
(தெளிவான முழு முகவரியைக் குறிப்பிடவும்).

நாள் :..................................

பெறுநர்

**பொதுத்தகவல் அலுவலர் அவர்கள்**

..............................................................................

..............................................................................
(உரிய அலுவலகத்தின் முழு முகவரி எழுதவும் (அ) மாவட்ட ஆட்சியின் அலுவலக முகவரி எழுதவும்).

ஐயா / அம்மையீர்,

**பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்கள் பெறுதல் தொடர்பாக.**

வணக்கம்.

I தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எனக்கு கீழ்க்கண்ட தகவல்கள் வழங்கவும்.

1. ..............................................................................
2. ..............................................................................

II. நான் கீழ்க்கண்ட ஆவணங்களை பார்வையிட அனுமதிக்க வேண்டுகிறேன். (பார்வையிட விரும்பும் ஆவணங்கள்).

1. ..............................................................................
2. ..............................................................................

III. எனக்கு கீழ்க்கண்ட ஆவணங்களின் படிகளை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (ஆவணங்களின் விவரம்).

1. ..............................................................................
2. ..............................................................................

IV. நான் தகவல் அறிய, உரிய கட்டணம் செலுத்தியுள்ளேன். அதன் விவரம்

அ) நீதிமன்ற வில்லை (Court Fee Stamp)
ஆ) அஞ்சலக ஆணை (Postal Order)
இ) வங்கி வரைவோலை (D.D )
(மேற்கண்டவைகளில் ஏதேனும் ஒன்று).

இடம் :
நாள் :

x..............................................
விண்ணப்பதாரர் கையொப்பம்

## 8. குழந்தைகளுக்கு இணக்கமான கிராம /ஊர்/நகர/ மாவட்ட உள்ளாட்சியை உருவாக்குதல்

***இந்தப் பயிற்சியின் நிறைவில் நீங்கள் கீழ்கண்ட தகவல்களைத் தெரிந்து கொண்டிருப்பீர்கள்:***

- *குழந்தை இணக்க உள்ளாட்சி முன்முயற்சியின் 9 அடிப்படைகள்*
- *குழந்தைகளுக்கு இணக்கமான கிராம/நகர/ஊராட்சியால் உறுதிப்படுத்தப்படுவது:*
- *CFCI கட்டமைப்பு: 4 பகுதிகள்– 6 தளங்கள் – 40 இலக்குகள்:*
- *அடுத்தகட்ட நடவடிக்கைகள்:*
- *குழந்தை உரிமைகள் மாநாட்டு (CRC) உடன்படிக்கையின் அடிப்படையிலான செயல்பாட்டுத் தளங்கள் மற்றும் இலக்குகள்*

**1. அறிமுகம்:**

குழந்தைகளுக்கு இணக்கமான ஊர்கள் முன்முயற்சி (CFCI) 1996ஆம் ஆண்டில் உலக அளவில் யூனிசெப் மற்றும் ஐ.நா. வாழ்விடம் ஆகிய அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்டதாகும். இந்த முன்முயற்சி இப்போது ஒரு உலகளாவிய இயக்கமாக உருவெடுத்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1300க்கும் மேற்பட்ட ஊர்களிலும் நகரங்களிலும் இந்த இயக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த முன்முயற்சித் திட்டத்தின் கீழ் இந்தியாவின் எந்தவொரு ஊரும் வரவில்லை.

கேரளத்தின் கிராம ஊராட்சிகள், நகரங்கள், சட்டமன்றத் தொகுதிகள், மாவட்டங்களில் குழந்தைகளுக்கு இணக்கமான ஊர் என்ற முன்முயற்சித் திட்டத்தைக் யூனிசெப் உதவியுடன் கொண்டு செல்ல கேரள உள்ளாட்சி நிர்வாக நிறுவனம் (KILA) திட்டமிட்டுள்ளது. ஐ.நா. குழந்தை உரிமைகள் மாநாட்டுப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குழந்தைகளுக்கான அனைத்து உரிமைகளும் முழுமையாகச் செயல்படுத்தப்படுகிற இடமாக குழந்தைகளுக்கு இணக்கமான உள்ளாட்சி விளங்கும்.

இத்தகைய குழந்தைகளுக்கு இணக்கமாக உள்ளாட்சி நிர்வாகம் குறித்த நோக்கக் குறிப்புகளையும் வழிகாட்டல்களையும் KILA உருவாக்கியுள்ளது.

### 1. குழந்தை இணக்க உள்ளாட்சி முன்முயற்சியின் 9 அடிப்படைகள்

இந்த முன்முயற்சிக்கான 9 அடிப்படைக் கூறுகள் வருமாறு:

I. **குழந்தைகள் பங்கேற்பு:** குழந்தைகளைப் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளில் குழந்தைகளின் தலையீட்டை ஊக்குவித்தல்

II. **குழந்தை இணக்க சட்ட அமைப்பு:** குழந்தைகளின் உரிமைகளை முன்னெடுத்துச் சென்று , அவற்றைப் பாதுகாக்கக் கூடிய சட்டங்கள், முறைப்படுத்தும் கட்டமைப்புகள் மற்றும் நடைமுறைகளை உறுதிப்படுத்துதல்

III. **குழந்தைகளின் உரிமைகள் திட்டம் மற்றும் வழிமுறை:** குழந்தைகளுக்கு இணக்கமான ஊரைக் கட்டுவதில் ஒரு விரிவான அணுகுமுறையும் திட்டமும் வகுக்கப்படுதல்

IV. **குழந்தைகள் உரிமைப் பிரிவு/ஒருங்கிணைப்பு ஏற்பாடு:** குழந்தைகளுக்கான தொலைநோக்குப் பார்வை குறித்துக் கணக்கில் கொள்வதற்காக மாணவர் ஆட்சியில் ஒரு நிரந்தரக் கட்டமைப்பை ஏற்படுத்துதல்

V. குழந்தைகள் மீதான தாக்கம் குறித்த மதிப்பீடு: குழந்தைகள் மீது சட்டம், கொள்கை, நடைமுறைகளால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து மதிப்பிடுவதற்கான திட்டமிட்ட நடைமுறையை உறுதிப்படுத்துதல்

VI. **குழந்தைகளுக்கான பட்ஜெட்:** குழந்தைகளுக்காக போதுமான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல், பட்ஜெட் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

VII. **ஊர்க் குழந்தைகள் நிலை பற்றிய அறிக்கை:** குழந்தைகள் பற்றிய தகவல்கள் சேகரித்தல், கண்காணிப்பை உறுதிப்படுத்துதல், குழந்தைகளின் நிலை மற்றும் அவர்களது உரிமைகள் குறித்த அறிக்கையைத் தயாரித்தல்

VIII. **குழந்தை உரிமைகள் விழிப்புணர்வு:** குழந்தை உரிமைகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல்

IX. **குழந்தைகளுக்கான நடுவர்:** குழந்தை உரிமைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் சுயேச்சையான குழந்தை உரிமைகள் அமைப்பு/ ஆணையம் அல்லது நடுவர் அமைப்பை ஏற்படுத்துதல்

**2. குழந்தைகளுக்கு இணக்கமான கிராம/நகர/ஊராட்சியால் உறுதிப்படுத்தப்படுவது: குழந்தைகளுக்கு இணக்கமான ஊராட்சி பின்வருவன தொடர்பாக ஒவ்வொரு குழந்தையின் உரிமைகளை உறுதிப்படுகிறது:**

- தங்களது ஊர் குறித்த முடிவில் தாக்கம் செலுத்துதல்
- தாங்கள் விரும்பும் ஊர் குறித்த கருத்தை வெளிப்படுத்துதல்
- குடும்ப/ஊர்/சமூக வாழ்வில் பங்கேற்றல்
- சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பிடம் போன்ற அடிப்படை சேவைகளைப் பெறுதல்
- பாதுகாப்பான குடிநீர் பருகுதல், முறையான துப்புரவு வசதிகள் பெறுதல்
- சுரண்டல், வன்முறை, அத்துமீறல்களிலிருந்து பாதுகாக்கப்படுதல்
- தங்கள் ஊரின் தெருக்களில் பாதுகாப்பாக நடத்தல்
- நண்பர்களை சந்தித்தல், விளையாடுதல்
- தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் தேவையான பசுமைப் பரப்புகளைப் பெற்றிருத்தல்
- மாசுபடாத சுற்றுச்சூழலில் வாழுதல்
- கலாச்சார, சமூக நிகழ்வுகளில் பங்கேற்றல்

- இனம், மதம், வருமானம், பாலினம் அல்லது உடல் இயலாமை போன்ற பாகுபாடுகள் இன்றி அனைத்து விதமான சேவைகளையும் பெறக்கூடிய, தங்களது ஊரின், சமத்துவமான குடிமக்களாக இருத்தல்.

### 3. CFCI கட்டமைப்பு: 4 பகுதிகள்– 6 தளங்கள் – 40 இலக்குகள்:

18 வயதிற்குக் கீழுள்ள குழந்தைகள் அனைவருக்கும் (அ) வாழ்க்கை, (ஆ) முன்னேற்றம், (இ) பாதுகாப்பு, (ஈ) பங்கேற்பு ஆகிய, குழந்தை உரிமைகள் தொடர்பான 4 விரிவான வரையறுப்புகளின் கீழ் வரும் உரிமைகளை குழந்தைகளுக்கு இணக்கமான கிராம/ஊர்/நகர உள்ளாட்சிகள் உறுதிப்படுத்தும்.

இந்த முன் முயற்சித் திட்டம் 6 தளங்களையும் 40 இலக்குகள்/பயன்களையும் கொண்டிருக்கும். இந்த 40 இலக்குகளுக்கான குறியீடுகள் உருவாக்கப்படும். இந்தக் குறியீடுகள் (அ) அத்தியாவசியம், (ஆ) விரும்பத்தக்கது, (இ) சிறப்பானது/ஏற்கத்தக்கது என்ற மூன்று மட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

குழந்தை உரிமைகள் மாநாட்டு (CRC) உடன்படிக்கையின் அடிப்படையிலான செயல்பாட்டுத் தளங்கள் மற்றும் இலக்குகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

### 4. அடுத்தகட்ட நடவடிக்கைகள்:

- குழந்தைகளுக்கு இணக்கமான ஊர் என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், இந்த முன்முயற்சி குறித்த பொது கருத்தை உருவாக்குதல்
- குழந்தைகளுடனும், கடமைப் பொறுப்புள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள், குடிமைச் சமூக அமைப்புகள், ஊடகங்கள், சிந்தனையாளர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோருடன் கலந்தாலோசனை மேற்கொள்ளுதல்
- தலையீடுகள், குறியீடுகள், நிதி நிலை மற்றும் கால வரையறையோடு கூடிய, குழந்தைகளுக்கான ஒரு விரிவான தொலைநோக்கு ஆவணம், செயல்திட்டம் ஆகியவற்றை உருவாக்குதல்.
- குழந்தைகள் குறித்த எண்ணிக்கை, பணிகளின் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊரின் குழந்தை உரிமைகள் நிலை குறித்த அறிக்கை தயாரித்தல்
- முன்முயற்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அமைப்புகளையும், கட்டமைப்புகளையும், நடைமுறைகளையும் உருவாக்குதல்.
- திட்டத்தின்படி, தலையீடுகளைச் செயல்படுத்துதல், கண்காணித்தல்.

2018ஆம் ஆண்டு இறுதிவாக்கில் ஒரு சுயேச்சையான அமைப்பைக் கொண்டு குழந்தைகளுக்கு இணக்கமான நிலை குறித்த மதிப்பீட்டைச் செய்தல்.

## குழந்தை உரிமைகள் மாநாட்டு (CRC) உடன்படிக்கையின் அடிப்படையிலான செயல்பாட்டுத் தளங்கள் மற்றும் இலக்குகள்

| வ. எண் | பணித்தளம் | | இலக்குகள் / முடிவுகள் | | பரிசோதிக்கப்படவேண்டிய பட்டியல் |
|---|---|---|---|---|---|
| 1 | வீட்டுச் சூழல் (வாழ்வு) | 1.1 | குடிப்பதற்கும், துணி துவைப்பதற்கும், வீட்டில் உள்ள கழிப்பறையை சுத்தம் செய்வதற்கும் போதுமான பாதுகாப்பான நீர் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும். | 1.11 | வீட்டில் இருந்து 15 நிமிடத் தொலைவில் குடிநீர் |
| | | | | 1.12 | கிராமத்தின் அனைத்து வீடுகளிலும் குழாய் நீர் |
| | | | | 1.13 | ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறை |
| | | | | 1.14 | அனைத்து கழிப்பறைகளுக்கும் தண்ணீர் |
| | | 1.2 | குழந்தைகள் வாழ்வதற்கான வீடு போதுமான இட வசதியுடன் இருக்க வேண்டும். எந்தக் குழந்தையும் தெருவில் வசிக்கக் கூடாது. | 1.21 | அனைத்துக் குழந்தைகளுக்கும் தங்குவதற்கு ஒரு வீடு |
| | | | | 1.22 | அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்களது வீட்டில் தனிப்பட்ட இட வசதி/ அறை |
| | | | | 1.23 | வீடற்ற குழந்தையில்லை |
| | | 1.3 | வீட்டிலும், புறச்சூழலிலும் புகையில்லாத, மாசு இல்லாத சூழல் குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும். | 1.31 | வீட்டிற்கு அருகில் மாசுக்கேடு ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலை இல்லை |
| | | | | 1.32 | சமையல் எரிவாயுவைக் கொண்ட சமையல் நடைபெறுகிறது (எந்த வீட்டிலும் விறகு பயன்படுத்தப்படவில்லை) |
| | | | | 1.33 | அனைத்து வீடுகளிலும் செயல்படும் மின்விளக்கு இணைப்பு |
| | | | | 1.34 | அனைத்து வீடுகளுக்கும் ஒருநாளில் குறைந்தது 12 மணி நேரம் மின்சார இணைப்பு |
| | | 1.4 | குழந்தைகளுக்கு வீட்டையும் பள்ளியையும் சுற்றி குப்பையில்லாத, நீர் தேங்காத பாதுகாப்பான, சுத்தமான சுற்றுச்சூழல் இருக்க வேண்டும். | 1.41 | வீட்டைச் சுற்றி குப்பையோ, தேங்கிய நீரோ இல்லை |
| | | | | 1.42 | பள்ளியைச் சுற்றி குப்பையோ, தேங்கிய நீரோ இல்லை |
| | | | | 1.43 | விளையாட்டு மைதானத்தைச் சுற்றி குப்பையோ, தேங்கிய நீரோ இல்லை |
| | | | | 1.44 | பள்ளிக்கோ, விளையாட்டு மைதானத்துக்கோ, வீட்டிற்கோ செல்லும் வழியில் குப்பையோ, தேங்கிய நீரோ இல்லை |
| 2 | சுகாதாரம் மற்றும் சமூக தேவைகள் (வாழ்வு) | 2.1 | குழந்தைகளுக்கு ஏற்படும் சுகாதாரப் பிரச்சனைகளை கவனிக்க மருத்துவ சோதனைகள் மேற்கொள்ள சுகாதார / அவசர சிகிச்சை வசதிகள் பெற்றோர்களுக்கு கிடைக்க வேண்டும். | 2.11 | கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார மையம் (PHC) இருக்கிறது |
| | | | | 2.12 | ஒரு மணி நேரத்தில் செல்லக்கூடிய ஒரு அவசர சிகிச்சை வசதி உள்ளது (மிகவும் பொதுவான, பயன்படுத்தத்தக்க போக்குவரத்து) ஏற்பாடு |
| | | 2.2 | குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளக் கூடிய மையம் ஒன்று (அங்கன்வாடி/குழந்தை பராமரிப்பு | 2.21 | கிராமத்தில் ஒரு அங்கன்வாடி இருக்கிறது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மையம்) பெற்றோர்களுக்குக் கிடைக்க வேண்டும். | | |
| | | 2.3 | சிசு மரண விகிதம் ஒற்றை இலக்கத்திற்குக் குறைவாக இருக்க வேண்டும். | 2.31 | சிசு மரண விகிதம் 10க்கு குறைவாக உள்ளது |
| | | 2.4 | குழந்தைகள் மருத்துவமனைகள் மூலமாக அல்லது பாதுகாப்பான பிரசவம் மூலமாகப் பிறக்க வேண்டும் | 2.41 | எல்லாக் குழந்தைகளும் மருத்துவமனையில் பிறக்கின்றன |
| | | 2.5 | குழந்தைகளுக்கு முதலாவது ஆண்டில் முழுமையாக நோய்த் தடுப்பு மருந்துகள் செலுத்தப்பட வேண்டும். | 2.51 | எல்லாக் குழந்தைகளுக்கும் முதலாவது ஆண்டில் நோய்த் தடுப்பு மருந்துகள் செலுத்தப்படுகின்றன |
| | | 2.6 | பிறந்த ஒரு மணி நேரத்தில் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கிடைக்க வேண்டும், முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே வழங்கப்பட வேண்டும் | 2.61 | பிறந்த ஒருமணி நேரத்தில் எல்லாக் குழந்தைகளுக்கும் தாய்ப்பால் கிடைக்கிறது |
| | | | | 2.62 | எல்லாக் குழந்தைகளுக்கும் முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே வழங்கப்படுகிறது |
| | | 2.7 | குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து குறைவு, வளர்ச்சிக் குறைவு அல்லது ரத்த சோகை பிரச்சனைகள் இருக்கக் கூடாது | 2.71 | ஊட்டச்சத்து குறைந்த, வளர்ச்சி குன்றிய அல்லது ரத்தசோகை உள்ள குழந்தைகள் இல்லை |
| | | 2.8 | கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவக் கவனிப்பு, சத்தான உணவு, மருத்துவ சோதனைகள், ஓய்வு ஆகியவை கிடைக்க வேண்டும் | 2.81 | கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவக் கவனிப்பு கிடைக்கிறது |
| | | | | 2.82 | கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவ சோதனைகள் கிடைக்கிறது |
| | | | | 2.83 | கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்தான உணவு கிடைக்கிறது |
| | | | | 2.84 | கர்ப்பிணிப் பெண்களுக்கு ஓய்வு கிடைக்கிறது |
| | | 2.9 | குழந்தைகளின் சுகாதாரம், சத்து, வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளும் சேவைகளும் பெற்றோர்களுக்குக் கிடைக்க வேண்டும். | 2.91 | செவிலித்தாய்கள் (ஆஷாக்கள்) தொடர்ச்சியாக வருகின்றனர் (குறைந்தது வாரத்தில் ஒருமுறை) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | கல்விச் சேவைகள் (வளர்ச்சி) | 3.1 | குழந்தைகளுக்கு இணக்கமான மழலையர் பள்ளி, தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி கிடைக்க வேண்டும். அனைத்துக் குழந்தைகளும் பள்ளி செல்ல வேண்டும். | 3.11 | கிராமத்தில் ஒரு அங்கன்வாடி உள்ளது |
| | | | | 3.12 | கிராமத்தில் ஒரு தொடக்கப்பள்ளி உள்ளது |
| | | | | 3.13 | 5 கிலோமீட்டருக்குள் ஒரு நடுநிலைப்பள்ளி உள்ளது |
| | | | | 3.14 | நடுநிலைப்பள்ளி செல்வதற்கு இலவசமான அரசாங்கப் போக்குவரத்து உள்ளது (கிராமத்திற்குள் இல்லையென்றாலும்) |
| | | | | 3.15 | அனைத்துக் குழந்தைகளும் முழுமையாகப் பள்ளிக்கல்வி பெறுகிறார்கள் |
| | | 3.2 | பள்ளிகளிலும் வீட்டிலும் பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் ஒரே மாதிரியாக நடத்தப்பட வேண்டும். | 3.21 | அனைத்துப் பெண் குழந்தைகளும் முழுமையாகப் பள்ளிக்கல்வி பெறுகிறார்கள் |
| | | | | 3.22 | எந்தப் பெண்ணுக்கும் 18 வயதுக்கு முன் திருமணம் செய்து வைக்கப்படுவதில்லை |
| | | | | 3.23 | பள்ளிகளில் பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் சேர்க்கப்படுவது ஒரே மாதிரியாக இருக்கிறது |
| | | | | 3.24 | பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் தேர்ச்சி பெறும் விகிதம் ஒரே மாதிரியாக இருக்கிறது |
| | | 3.3 | பள்ளிகளில் மாணவர் மன்றங்கள் அல்லது அமைச்சரவைகள் இருக்க வேண்டும். குழந்தைகளின் கருத்துகளும் யோசனைகளும் பள்ளிகளில் கேட்கப்பட வேண்டும். | 3.31 | பள்ளியில் ஒரு பாலர் பஞ்சாயத்து உள்ளது |
| | | | | 3.32 | பாலர் பஞ்சாயத்து குறைந்தது மாதம் ஒருமுறை கூடுகிறது. |
| | | 3.4 | குழந்தைகளுக்கு பள்ளிகளிலும் அங்கன்வாடிகளிலும் குழந்தைப் பராமரிப்பு அமைப்புகளிலும் பாதுகாப்பான குடிநீர், சுத்தமான கழிப்பறைகள் இருக்க வேண்டும். | 3.41 | குழந்தைகளுக்குப் பள்ளியில் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கிறது |
| | | | | 3.42 | குழந்தைகளுக்கு பள்ளியில் சுத்தமான கழிப்பறை இருக்கிறது |
| | | | | 3.43 | குழந்தைகளுக்கு அங்கன்வாடியில் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கிறது |
| | | | | 3.44 | குழந்தைகளுக்கு அங்கன்வாடியில் சுத்தமான கழிப்பறை இருக்கிறது |
| | | | | 3.45 | குழந்தைகளுக்கு குழந்தைப் பராமரிப்பு அமைப்புகளில் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கிறது |
| | | | | 3.46 | குழந்தைகளுக்கு குழந்தைப் பராமரிப்பு அமைப்புகளில் சுத்தமான கழிப்பறை கிடைக்கிறது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | பத்திரமும் பாதுகாப்பும் | 4.1 | குழந்தைகள் தங்களது சமூகத்தில் பத்திரமாக நடமாடும் நிலை இருக்க வேண்டும் – நடப்பதற்கு, சைக்கிள் ஓட்டுவதற்கு அல்லது போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்துவதற்கு. | 4.11 | முக்கிய சாலைகளில் நடைபாதைகள் உள்ளன |
| | | | | 4.12 | கடந்த ஓராண்டில் போக்குவரத்து காரணமாக எந்தவொரு குழந்தையும் காயமடையவில்லை |
| | | | | 4.13 | பேருந்து நிறுத்தத்தில் குழந்தைகள் உட்காருவதற்கு இடமுள்ளது |
| | | 4.2 | வன்முறையிலிருந்தும், அத்துமீறல்களிலிருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும். கலந்தாய்வு குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும். | 4.21 | குழந்தைகளுக்கு இணக்கமாக நடந்துகொள்வது குறித்து பெரியவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது |
| | | | | 4.22 | பாலர் பஞ்சாயத்து இருக்கிறது, அது வாரம் ஒருமுறை கூடுகிறது |
| | | | | 4.23 | கலந்தாய்வுக்கான வசதி குழந்தைகளுக்குக் கிடைக்கிறது |
| | | 4.3 | வீட்டிலும் பள்ளியிலும் குழந்தைகள் பாதுகாப்பாக உணர வேண்டும். பாதுகாப்பான சுற்றுச்சூழல் அமைந்திருக்க வேண்டும். | 4.31 | வீட்டிலும் பள்ளியிலும் குழந்தைகள் பாதுகாப்பாக உணர்கிறார்கள். பாதுகாப்பான சுற்றுச்சூழல் அமைந்திருக்கிறது. |
| | | 4.4 | குழந்தைகள் பிறப்பது பதிப்பது பதிவு செய்யப்பட வேண்டும். குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். | 4.41 | அனைத்து குழந்தைகளின் பிறப்பும் பதிவு செய்யப்படுகிறது |
| | | | | 4.42 | அனைத்து குழந்தைளின் பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது |
| | | 4.5 | பாலினத் தேர்வு, கருக்கொலை, சிசுக்கொலை நடக்கக்கூடாது | 4.51 | பாலின விகிதாச்சாரம் (0–6) சமமாக இருக்கிறது |
| | | 4.6 | பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஒருமைகளைப் பாதுகாக்க வார்டு அளவிலும் மாநகராட்சி அளவிலும் எச்சரிக்கைக் குழுக்கள் இருக்க வேண்டும். | 4.61 | பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஒருமைகளைப் பாதுகாக்க வார்டு அளவில் எச்சரிக்கைக் குழு செயல்படுகிறது. |
| | | 4.7 | பள்ளிகளில் புகார்ப் பெட்டி இருக்க வேண்டும். அபாய நிலை ஏற்படுகிறபோது குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் எங்கே புகார் செய்வது என்பது தெரிந்திருக்க வேண்டும். | 4.71 | பள்ளிகளில் புகார் பெட்டி உள்ளது |
| | | | | 4.72 | அபாய நிலை ஏற்படுகிறபோது குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் எங்கே புகார் செய்வது என்பது தெரிந்திருக்கிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 4.8 | பெண்களுக்கு 18 வயதுக்கு முன் திருமணம் செய்து வைக்கப்படக் கூடாது. | 4.81 | பெண்களுக்கு 18 வயதுக்கு முன் திருமணம் செய்து வைக்கப்படுவதில்லை. |
| | | 4.9 | குழந்தைகளுக்கு போதைப் பொருள் கிடைக்கும் நிலை இருக்கக் கூடாது. பள்ளி வட்டாரம், போதைப் பொருள்கள் கிடைக்காததாக இருக்க வேண்டும் | 4.91 | குழந்தைகளுக்கு போதைப் பொருள் கிடைக்கும் நிலை இல்லை. |
| | | | | 4.92 | பள்ளியிலிருந்து 100 மீட்டர் தொலைவுக்குள் ஆல்கஹால் மற்றும் புகையிலை விற்கப்படுவதில்லை |
| | | | | 4.93 | ஆல்கஹால் மற்றும் புகையிலை கிடைக்காத வட்டாரமாக பள்ளி அமைந்துள்ளது. |
| | | 4.10 | பள்ளியில் உடல்ரீதியான தண்டனை தரப்படக் கூடாது | 4.101 | பள்ளியில் உடல்ரீதியான தண்டனை தரப்படுவதில்லை |
| | | 4.11 | காவல்நிலையங்கள் குழந்தைகளுக்கு இணக்கமானதாக இருக்க வேண்டும். | 4.111 | காவல்நிலையங்கள் குழந்தைகளுக்கு இணக்கமானதாக இருக்கின்றன. |
| | | 4.12 | நகரில் குழந்தைகளுக்கு இணக்கமான நீதிமுறை இருக்க வேண்டும் | 4.121 | நகரில் குழந்தைகளுக்கு இணக்கமான நீதிமுறை இருக்கிறது. |
| 5 | விளையாட்டு, ஓய்வு மற்றும் மனமகிழ்வு (வளர்ச்சி மற்றும் பங்கேற்பு) | 5.1 | மாற்றுத் திறனாளிகளாக உள்ள குழந்தைகள் உட்பட அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளியிலும், வீட்டிலும் விளையாட, ஓய்வெடுக்க, மகிழ்ச்சியாக இருக்க நேரம் இருக்க வேண்டும். | 5.11 | மாற்றுத் திறனாளிகளாக உள்ள குழந்தைகள் உட்பட அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளியிலும், வீட்டிலும் விளையாட, ஓய்வெடுக்க, மகிழ்ச்சியாக இருக்க நேரம் இருக்கிறது. |
| | | 5.2 | குழந்தைகளின் பள்ளிக் கல்வியையும், வளர்ச்சியையும் பாதிக்கக்கூடிய வரையில் வேலைகள் எதிலும் பெண் குழந்தைகளும், ஆண் குழந்தைகளும் ஈடுபடுத்தப்படக் கூடாது. | 5.21 | குழந்தைகளின் பள்ளிக் கல்வியையும், வளர்ச்சியையும் பாதிக்கக்கூடிய வரையில் வேலைகள் எதிலும் பெண் குழந்தைகளும், ஆண் குழந்தைகளும் ஈடுபடுத்தப்படுவதில்லை. |
| | | 5.3 | மாற்றுத் திறனாளிகளாக உள்ள குழந்தைகள் உட்பட பெண் குழந்தைகளுக்கும், ஆண் குழந்தைகளுக்கும் விளையாடுவதற்கும், விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பதற்கும், நண்பர்களோடு கலந்துறவாடுவதற்கும் பாதுகாப்பான இடம் இருக்க வேண்டும் | 5.31 | மாற்றுத் திறனாளிகளாக உள்ள குழந்தைகள் உட்பட பெண் குழந்தைகளுக்கும், ஆண் குழந்தைகளுக்கும் விளையாடுவதற்கும், விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பதற்கும், நண்பர்களோடு கலந்துறவாடுவதற்கும் பாதுகாப்பான இடம் இருக்கிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 5.4 | பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்கும் பசுமைப் பரப்புகள் மற்றும் பூங்காங்களுக்கான வாய்ப்பு இருக்க வேண்டும். | 5.41 | பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்கும் பசுமைப் பரப்புகள் மற்றும் பூங்காங்களுக்கான வாய்ப்பு இருக்கிறது. |
| 6 | பங்கேற்பு மற்றும் குடியுரிமை (பங்கேற்பு) | 6.1 | வார்டு அளவிலான பாலர் சபை / கிராம சபை, மாநகராட்சி மன்றத்தின் குழந்தை நாடாளுமன்றம் ஆகியவற்றில், குழந்தைகள் தங்களை பாதிக்கக்கூடிய விஷயங்கள் குறித்து தங்கள் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். | 6.11 | அனைத்து குடியிருப்பு பகுதிகளிலும் பாலர் சபை இருக்கிறது |
| | | | | 6.12 | பாலர் சபைகள் ஓராண்டில் குறைந்தது 4 முறை கூடுகின்றன |
| | | | | 6.13 | வார்டு அளவிலான பாலர் சபை / கிராம சபை, மாநகராட்சி மன்றத்தின் குழந்தை நாடாளுமன்றம் ஆகியவற்றில், குழந்தைகள் தங்களை பாதிக்கக்கூடிய விஷயங்கள் குறித்து தங்கள் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. |
| | | 6.2 | குழந்தைகள் தொடர்பான விஷயங்களில் குழந்தைகளால் சமூகத் தணிக்கை செய்யப்படுகிற நிலை இருக்க வேண்டும். | 6.21 | குழந்தைகள் தொடர்பான விஷயங்களில் குழந்தைகளால் சமூகத் தணிக்கை செய்யப்படுகிற நிலை இருக்கிறது. |
| | | 6.3 | நகரில் குழந்தைகளின் நிலை குறித்து மாநகராட்சி நிர்வாகம் ஆண்டறிக்கை வெளியிட வேண்டும். | 6.31 | நகரில் குழந்தைகளின் நிலை குறித்து கிராம ஊராட்சி நிர்வாகம் ஆண்டறிக்கை வெளியிடுகிறது. |
| | | 6.4 | குழந்தைகளுக்கான செயல் திட்டம் ஒன்றை மாநகராட்சி உருவாக்க வேண்டும், அது தொடர்ச்சியாக ஆய்வு செய்யப்பட வேண்டும். | 6.41 | குழந்தைகளுக்கான செயல்திட்டமொன்றை கிராம ஊராட்சி உருவாக்குகிறது, அது தொடர்ச்சியாக ஆய்வு செய்யப்படுகிறது. |
| | | 6.5 | ஆண்டுதோறும் குழந்தைகள் பட்ஜெட் தயாரிக்கப்பட வேண்டும் | 6.51 | ஆண்டுதோறும் குழந்தைகள் பட்ஜெட் தயாரிக்கப்படுகிறது. |
| | | 6.6 | குழந்தை உரிமைகள் தொடர்பாக, கடமைப் பொறுப்புள்ள அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். | 6.61 | குழந்தை உரிமைகள் தொடர்பாக, கடமைப் பொறுப்புள்ள அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. |
| | | 6.7 | குழந்தை உரிமைகள் நடுவர் / ஆணையம் இருக்க வேண்டும் | 6.71 | குழந்தை உரிமைகள் நடுவர் / ஆணையம் இருக்கிறது |